vடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu வார மலர்






Email : news@eelanadu.lk | மலர் : 03 | 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 166 | பக்கங்கள் : 20



07 புலனாய்வு அறிக்கையை மெய்ப்பிக்க சிறைவைக்கப்பட்ட பேரறிவாளன்


08 பிரதமர் ரணிலின் மீள் வருகை


10 இலங்கை நெருக்கடி: பணத்தை அச்சிட்டால் பொருளாதார பிரச்சனை முடிந்துவிடுமா?


11 பெற்றோல் தட்டுப்பாட்டால் திண்டாடும் யாழ். குடாநாடு


# 21 ஆவது திருத்தத்தை எதிர்க்க பெரமுன தயார்?

## பின்னணியில் பஸில் ராஜபக்ஷ

கொழும்பு, மே.22

நாட்டில் கொண்டு வரப்படவுள்ள அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராக பொதுஜன பெரமுன கட்சி வாக்களிக்கவுள்ளதாக அதன் உள்ளக தகவல்கள் தெரி விக்கின்றன என்று சிங்கள இணைய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

19



## மாலைதீவு சபாநாயகருடன் சஜித் பிரேமதாஸ சந்திப்பு!

கொழும்பு, மே. 22

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான மொஹமட் நஷீட்டுடன் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இருவரும் இரு தரப்பு பேச்சுவார்த்தை நடத்தினர்.

இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பான பல முக்கிய விடயங்கள் இரு தலைவர்களுக்கும் இடையில் கலந்துரையாடப்பட்டன.

இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால உற

19

## டெங்கு காய்ச்சலினால் மாணவன் உயிரிழப்பு!

### யாழ்.மாநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே. 22

டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவன் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறை பாண்டியன்தாழ்வு பகுதியைச் சேர்ந்த கருணாகரன் ஆரோன் (வயது-11) என்ற யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவனே உயிரிழந்தார்.

19

## அடுத்த வாரம் முதல் தடையற்ற மின்சாரம்

கொழும்பு, மே. 22

அடுத்த வார தொடக்கத்தில் இருந்து தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில்

19

## எச்.என்.டி. மாணவர்களின் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப்புகை தாக்குதல்!




கொழும்பு, மே. 22

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி, உயர் தேசிய டிப்ளோமா (எச்.என்.டி.) மாணவர்களால் கொழும்பில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணி மீது பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டு மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

கொழும்பு - காலிமுகத்திடலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவி விலகக்

19

## பாதுகாப்புத்துறையினரின் உயர்மட்டங்களில் மாற்றம்?

கொழும்பு, மே. 22

நாடு முழுவதும் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில், பொலிஸ் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் மீது பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பல்வேறு

19

## இரட்டை குடியுரிமை பெற்றோர் எம்.பியாக முடியாதவாறு சட்டம்

### புதிய நீதியமைச்சர் விஜேதாஸ தெரிவிப்பு

கொழும்பு, மே. 22

இரட்டைக் குடியுரிமை பெற்றவர்கள் பாராளுமன்றத்தில் பிரவேசிக்க முடியாத வகையில் 21ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்படும் என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்படி தற்போது இரட்டைக் குடியுரிமை கொண்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆசனங்கள் இரத்து செய்யப்

19

## அமைச்சு பதவிக்காக மொட்டுக்குள் மோதல்

கொழும்பு, மே. 22

அமைச்சுப் பதவிகளை பங்கிட்டுக்கொள்வதில், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையில் கடும்

19

## மொரிசனை வீழ்த்தி அவுஸ்திரேலியாவின் பிரதமராகின்றார் அந்தோனி அல்பானீஸ்



சிட்னி, மே. 22

அவுஸ்திரேலியாவில் நேற்று நடந்த பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சி ஸ்கொட் மொரிசனின் கூட்டணி அரசாங்கத்தை தோற்கடித்து, அடுத்த அரசாங்கத்தை அமைக்கவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் 31ஆவது பிரத

19

## சம்பிக்கவுக்காக அமைச்சு பதவியை தியாகம் செய்வதற்கும் நான் தயார்!

### அமைச்சர் காஞ்சன கூறுகிறார்



கொழும்பு, மே. 22

“பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க விரும்பினால், மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சுப் பதவியை அவரிடம் ஒப்படைக்க நான் தயார்.”

-இவ்வாறு மின்சாரம் மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார் .

வலுசக்தி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விட

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

ஒரு வங்கிக் கிளைக்கு வந்த ஒருவர் அங்கிருந்தவரிடம் கேட்டார், பத்தாயிரம் ரூபாய் வைப்பிலிட்டால் மாதாந்தம் எவ்வளவு வட்டி கிடைக்கும்? என்று.

வங்கி அலுவலர் சொன்னார், மாதம் தொண்ணூறு கிடைக்கும் என்று.

அவர் திரும்பவும் கேட்டார், 'பத்தாயிரம் ரூபாய் வைப்பிலிட்டால் மாதம் மாதம் எவ்வளவு வட்டி கிடைக்கும்?'

வங்கி அலுவலர் சொன்னார், 'இப்ப தானே ஐயா சொன்னேன்..' என்று.

இதற்கு அவர் சொன்னார், 'இல்லை, இது வேற பத்தாயிரம்'.

இதைப் படித்தபோது எனக்கு சிரிப்பு வரவில்லை.

காரணம் வேறு ஒன்றுமில்லை, இதைவிட கேவலமாக நமது தலைவர்களே பதிலளித்திருக்கின்றனர் என்பதை அறிந்திருந்த எனக்கு, சாதாரணமான ஒருவர் பத்தாயிரத்தை வைப்பிலிடுவதற்கு சென்று இதுபோன்ற கேள்வி கேட்பதைப் படிக்கின்றபோது எப்படி சிரிப்பு வரும்?

இந்தியாவின் ஆளும் பாரதீய ஜனதா கட்சி பற்றியும் அதன் தமிழக மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை பற்றியும் இந்தப் பத்தியில் முன்னரும் ஒருதடவை குறிப்பிட்டிருந்தேன்.

பத்துநாட்கள் இலங்கைக்கு விஜயம் செய்து, முதலில் மலையகத்திலும், பின்னர் வடக்கிலும் பயணம்செய்து, பல்வேறு தரப்பினரையும் சந்தித்து தாயகம் திரும்பியிருந்த அண்ணாமலைபற்றி இந்தப் பத்தியில் எழுதியிருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

அண்ணாமலை பாரதீய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவராக நியமிக்கப்பட்ட பின்னர், அந்தக் கட்சி தமிழகத்தில் அடைந்துவரும் வளர்ச்சி பற்றியும் அதில் குறிப்பிட்டிருந்தேன்.

அண்மையில் அவர் தமிழகத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நாள் நினைவு வைபவத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரை ஒன்றை காணொளியில் கேட்கமுடிந்தது.

பழ. நெடுமாறன் ஐயா, உணர்ச்சிக் கவிஞர் காசி. ஆனந்தன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், தமிழ் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளருமான சிவாஜிலிங்கம் போன்ற பலரும் கலந்துகொண்ட அந்த வைபவத்தில் அண்ணாமலை கலந்துகொண்டு ஆற்றிய உரை அடங்கிய அந்த காணொளியை அனுப்பிவைத்த லண்டன் நண்பர், 'பதின்மூன்றை முழுமையாகவும், முறையாகவும் அமுல்படுத்தவேண்டும். மாகாண அரசுத் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்று சிவாஜிலிங்கம், நெடுமாறன், காசிஆனந்தன் எல்லோருக்கும் வகுப்பு எடுக்கப்படும் காட்சிப் படிமம்' என்ற குறிப்புடன் அதை அனுப்பியிருந்தார். சுமார் முப்பது நிமிடங்கள் அண்ணாமலை அதில் உரையாற்றியிருந்தார். ஓர் ஆளும் கட்சியின் மாநிலத் தலைவர், அயல்நாடு ஒன்றின் பிரச்சனைபற்றி பேசுகின்றோம் என்ற புரிதலுடன், மிகத் தெளிவாக அந்த உரையை ஆற்றியிருந்தார்.

ஒரு பத்து நாள் விஜயத்திலேயே இலங்கைப் பிரச்னையை எவ்வளவு ஆழமாக அறிந்திருக்கிறார் மனுசன் என்பதை அவரது பேச்சு உணர்த்தியது.

அதுவல்ல, நான் இங்கே சொல்ல வருகின்ற சங்கதி.

அவர் தனது பேச்சினிடையே, தான் சந்தித்த எமது தலைவர்கள் பற்றி எவ்வளவு தெளிவாக அறிந்திருக்கிறார் என்பதை அவரது உடல்மொழியே தெளிவுபடுத்தியது.

கூட்டமைப்புடனான சந்திப்பில், மாகாண தேர்தல்களை நடாத்துவதற்கு நீங்கள் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று தான் வலியுறுத்தியபோது, ஒரு தலைவர் அதற்கு பதிலளிக்கையில், தேர்தல் நடாத்த வாக்குச்சீட்டு அச்சிட அரசாங்கத்திடம் கடதாசிகூட இல்லையே என்று பதிலளித்தாராம்.

எத்தனை பொறுப்பான பதில் அது? இதனை அவர் சொன்னபோது, எங்களின் தலைவர்களைப் பற்றி அவர் எவ்வளவு கேவலமான புரிதலுடன் தாயகம் சென்றிருப்பார் என்பதை அறியமுடிந்தது.

முன்னாள் முதலமைச்சருடனான சந்திப்பு குறித்து தெரிவித்த அண்ணாமலை, தனக்கு ஒரு காசோலையில் கையொப்பமிடும் அதிகாரம்கூட இருக்கவில்லை என்று கவலைப்பட்டதாக கூறினார்.

அடப்பாவிகளா, இந்த நாட்டில் சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதிகூட, காசோலையில் கையெழுத்திடும் அதிகாரத்தைக் கொண்டிருக்கமாட்டார்.

இதனையும் அவர் பொது மேடையில் சொன்ன லாவகம், எமது முதலமைச்சரின் 'திறமைக்கு' சான்று பகர்ந்தது.

இனி, யாராவது தலைவர்கள் தமிழகத்திலிருந்து வராமலிருந்தால் எஞ்சியிருக்கும் கொஞ்ச மரியாதையையாவது காப்பாற்றலாம்!

**- ஊர்க்குருவி.**

# மே 09 சம்பவத்தின் வலியை 83இல் அனுபவித்துவிட்டோம்

## சபையில் கூறினார் பழனி திகாம்பரம்

கொழும்பு, மே. 22

நாட்டில் 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களின் பின்னரே பாதிக்கப்பட்ட அமைச்சர்களுக்கு அதன் வலி தெரிகின்றது. ஆனால் 39 வருடங்களுக்கு முன்னரே இந்த வலியை அனுபவித்தவர்கள் நாம் என பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த 9ஆம் திகதி நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

நாட்டில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். இடம்பெற்ற அசம்பாவிதத்தில் அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரது வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய வேதனையை அவர்கள் இப்போதுதான் உணருகின்றனர். ஆனால் வீடுகள் எரிக்கப்படும் வேதனையின் வலியை 39 வருடங்களுக்கு முன்பே எமது மக்கள் அனுபவித்தனர்.1983 ஜூலை கலவரத்தை நாங்கள் நேரடியாகவே பார்த்தோம். தமிழ் மக்களின் வீடுகள்,கடைகள் எரிக்கப்பட்டன. அவர்களின் சொத்துக்கள் அழிக்கப்பட்டு அவர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள். அதற்காக இந்த சம்பவத்தை நாம் ஆதரிக்கவில்லை. கலவரத்துடன் சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்க வேண்டும்.

வீடுகளை எரித்தவர்களுக்கும் அலரி மாளிகைக்கு வருகை தந்த மக்களை தூண்டிவிட்ட அமைச்சர்கள் மற்றும் ஏனையவர்களுக்கும் தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ)

# திருச்சி சிறப்பு முகாமில் தங்கியுள்ள இலங்கை தமிழர்கள் உண்ணாவிரதம்

சென்னை, மே. 22

தமிழ்நாடு - திருச்சி சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் 10 இற்கும் மேற்பட்டவர்கள் தங்களை விடுதலை செய்யக்கோரி உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று முன்தினம் தொடங்கியுள்ளனர்.

தமிழ்நாட்டில் குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக வெளிநாடு செல்ல முயன்றது, சட்ட விரோத குடியேற்றம் உள்ளிட்ட வழக்குகளில் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழர்கள் 100 இற்கும் மேற்பட்டவர்கள் தற்போது திருச்சி சிறப்பு முகாமில் உள்ளனர்.

இந்நிலையில், சிறப்பு முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் எப்சிபன், கன்பூசியஸ்,



ரெஜிபன், ப்ரணவன், சவுந்தரராஜன் உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டவர்கள் நேற்று முன்தினம் காலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திருச்சி சிறைச்சாலையில் உள்ள சிறப்பு முகாம் வளாகத்தில் பிரத்தியேகமாக கூடாரம் அமைத்து உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

உண்ணாவிரதம் இருக்கும் இலங்கைத் தமிழர்களை சந்தித்த சிறைத்துறை அதிகாரியிடம் தமது கோரிக்கையை வழங்கியுள்ளனர்.

நீதியற்ற சிறைஅடைப்பில் இருந்து எங்களை வாழவிடுங்கள் அல்லது சாக விடுங்கள் என கோரிக்கை முன்வைத்து அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். (அ)

# எரிபொருள், எரிவாயு, நீர், மின்சாரம் கட்டணங்கள் மேலும் அதிகரிக்கும்!

கொழும்பு, மே. 22

எரிபொருள், மின்சாரம், சமையல் எரிவாயு மற்றும் நீர் கட்டணங்களை எதிர்காலத்தில் மேலும் அதிகரிக்க மத்திய வங்கி பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க இதனைத் தெரிவித்தார்.

நுகர்வோர் பொருட்கள் மற்றும் சேவைகளை நடத்தும் நிறுவனங்களுக்கு ஏற்படும் நஷ்டம் காரணமாகவே இது போன்ற பரிந்துரையைச் செய்ய வேண்டியுள்ளதென்றும் அவர் கூறினார்.

இலங்கையின் வரி வருமானம் குறைவாக இருப்பதாகவும், அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்குவதில் ஏதேனும் நெருக்கடி ஏற்பட்டால், அரசாங்க வருமானத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமானதென்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

# மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்!

மட்டக்களப்பு, மே. 22

மட்டக்களப்பு, சந்திவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சந்தணமடு ஆற்றுப் பகுதியில் யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மாவடிவேம்பு , ஸ்லுக் கொலனி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வைத்தியராசா கோவிந்தராசா (வயது - 37) என்பவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

தனது செங்கல் உற்பத்தி செய்யும் இடத்துக்குச் சென்று அங்கு வேலை செய்துவிட்டு, இரவாகியமையால் தான் தங்கிருக்கும் குடிசைக்குச் சென்ற போது காட்டுக்குள் இருந்த யானை இவரைத் தாக்கியுள்ளது.

படுகாயமடைந்த இவர் அருகில் உள்ளவர்களின் உதவியுடன் செங்கலடி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மரணமடைந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 20ஐ உடன் நீக்குங்கள்!

## ரணிலுக்கு கரு ஜயசூரிய தலைமையிலான 155 சமூக செயற்பாட்டாளர்கள் அவசர கடிதம்

கொழும்பு, மே. 22

நாட்டு மக்கள் மீதான அடக்கு முறைகளை நிறுத்துவதற்கும், 20 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக நீக்குவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை களை உடனடியாக மேற்கொள் ளுமாறு முன்னாள் சபாநாயக ரும் சமூக செயற்பாட்டாளரு மான கரு ஜயசூரிய தலைமை யிலான 155 சமூகச் செயற்பாட் டாளர்கள் பிரதமர் ரணில் விக் கிரமசிங்கவுக்கு எழுத்துமூல மான கோரிக்கையை முன்வைத் துள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் மீதும் அவர் தலைமையிலான அரசின் மீதும் தொடர்ச்சியாக மக்கள் எதிர்ப் புத் தெரிவித்து வந்த நிலையில் தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இடைக்கால அரசு ஒன்று நிறு வப்பட்டது. இந்நிலையிலேயே முன்னாள் சபாநாயகர் கரு ஜய சூரிய தலைமையிலான 155 பேர் இவ்வாறு கடிதம் ஒன்றை எழுதி கோரிக்கை விடுத்துள்ள னர்.

மக்கள் அங்கீகரிக்கக்கூடிய அரசை அமைத்து நிவாரணங் களை வழங்குமாறும் கரு ஜய சூரிய உள்ளிட்ட 155 சிவில் சமூகப்பிரதிநிதிகள் பிரதமரி டம் கோரிக்கை விடுத்துள்ள னர். (அ)

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை திருகோணமலையில் அதிகரிப்பு

திருமலை, மே. 22

திருகோணமலை மாவட் டத்தில் டெங்கு நோயாளர்க ளின் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.

திருகோணமலை மாவட்டத் தில் மொத்தமாக இந்த வருடம் இதுவரை 770 டெங்கு நோயா ளர்கள் இனங்காணப்பட்டுள் ளனர்.

இதில் திருகோணமலை கடற்படைத் தளத்தில் 111 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை திருகோண மலை பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் வீ.பிரேமானந்த் தெரிவித்தார்.

திருகோணமலையில் உள்ள சுகாதார பணிமனையில் நேற்று நடை பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறினார்.

டெங்கு வீரியம் அதிகரிப்பு உயர் சிவப்பு வலயங்களாக திரு கோணமலை, கிண்ணியா, மூதூர், உப்புவெளி, குச்சவெளி போன்ற சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் இணங்காணப்பட்டுள்ளன. இதில் கிண்ணியா சுகாதாரப் பிரிவில் ஆண் (வயது - 38) ஒரு வர் டெங்கு நோய் காரணமாக மட்டக்களப்பு வைத்தியசாலை யில் மரணித்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

இவ்வருடம் இதுவரை திரு கோணமலைப் பகுதியில் 203 பேரும், மூதூரில் 203 பேரும், கிண்ணியாவில் 77 பேரும், உப்புவெளியில் 76 பேரும் என டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

கடந்த வருடம் (2021) 312 என்றவாறு நோயாளர்கள் இனங்காணப்பட்ட நிலையை விடவும் இம்முறை அது 770 ஆக அதிகரித்துள்ளது.

இதனைக் கருத்தில்கொண்டு அரசு டெங்கு வாரமாக மே 18 தொடக்கம் 24 வரை பிரகட னப்படுத்தியுள்ளது. இந்தநிலை யில் சுகாதாரத் தரப்புடன் முப் படையினர் இணைந்து டெங்கு ஒழிப்புப் பணி இடம்பெற்று வருகின்றது. (அ)

# இ.தொ.காவுக்கு ரணில் அழைப்பு

கொழும்பு, மே. 22

சர்வகட்சி இடைக்கால அர சின் அமைச்சரவையில், அங்கம் வகிக்குமாறு இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸுக்கு, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத் துள்ளார்.

இதற்கமைய புதிய அமைச் சரவை பெயர்ப் பட்டியலில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செய லாளர் ஜீவன் தொண்டமானுக் கும் இடம் ஒதுக்கப்பட்டுள் ளது.

புதிய அரசில், மொட்டுக் கட்சி தவிர, ஏனைய கட்சி களுக்கான, அமைச்சுகளை ஒதுக்கும் பொறுப்பு பிரதமரி டமே கையளிக்கப்பட்டுள்ளது. அந்தவகையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜீவன் தொண்டமானின், பெயரைப் பரிந்துரைத்துள்ளார்.

அமைச்சுப் பதவியை ஏற்ப தற்கு காங்கிரஸ் தரப்பு கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்திருந்தாலும், இன்னும் இறுதி முடிவு எட்டப்பட வில்லை.

இந்தியா சென்றுள்ள இ. தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செய லாளர் ஜீவன் தொண்டமான் எம்.பி. ஆகியோர் நாடு திரும் பிய பின்னர், இது சம்பந்தமாக கலந்துரையாடி இறுதி முடிவெடுக்கப்படவுள்ளது.

கட்சி ஒப்புதல் வழங்கும் பட்சத்தில் நாளை திங்கட் கிழமை ஜீவன் தொண்டமான் அமைச்சராகப் பதவியேற்கக் கூடும். (அ)

# பாராளுமன்றுக்கு இனி வரமாட்டேன்

## அலி சப்ரி சபதம்



கொழும்பு, மே. 22

நாட்டின் பொருளாதாரம் உக்கிரமடைந்துள்ளதையடுத்து அனைவரும் இணைந்து பொறுப்புடன் செயற்பட வேண்டுமே தவிர குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக எரியும் நெருப்பில் வைக் கோலைப் போட முற்பட வேண்டாம். அரசியல் நோக் கங்களைக் கைவிட்டு அனை வரும் உண்மை நிலையை உணர்ந்து செயற்படுவதற்கு முன்வரவேண்டுமென முன் னாள் நிதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரி விக்கையில்-

நாட்டின் பொருளாதாரம் உக்கிரமடைந்துள்ளது. மக்கள் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். இந்த நிலையி லிருந்து நாட்டை மீட்டெடுப் பது எவ்வாறு என்பது தொடர் பிலேயே பாராளுமன்றத்தி லுள்ள அனைவரும் சிந்திக்க வேண்டும். இனியும் அரசியல் நோக்கங்களுக்காக ஒருவர் மீது ஒருவர் விரல் நீட்டிக் கொண்டு செயற்பட முற்படக்கூடாது. அவ்வாறானால் நாம் விஜயன் காலத்திலிருந்தே அதை செய்ய வேண்டிவரும். நாட்டின் நெருக்கடி நிலைக்கு தீர்வு காண முடியுமென்ற நம்பிக்கையு டனேயே நாம் நடவடிக்கை களை மேற்கொண்டோம். நம்பிக்கையுடனேயே 69 இலட் சம் மக்கள் ஜனாதிபதிக்கு வாக்களித்தனர். நான் அமைச் சர் பதவியை பொறுப்பேற்ப தற்கு முன்னர் 42 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையை செலுத்திவிட்டே பதவியை பொறுப்பேற்றேன். அரசியல் மூலம் நான் ஒரு சதம் கூட உழைக்கவில்லை. ஆனால் வீடு எரிவதைப் பார்த்து மகிழ்ச்சிய டையும் தரப்பினரையும் நான் பார்க்கின்றேன். அந்தளவு மோசமான கலாசாரம் எமது நாட்டில் தலைதூக்கி இருக்கின் றது.

இதன் பின்னர் பாராளுமன் றத்துக்கு வருவதற்கு நான் நினைக்கமாட்டேன்.

நாட்டில் வருமான வரி செலுத்தாதவர்கள் தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும். சுங்கத் திணைக்களத்தின் மூலம் கிடைக்கும் வருமானம் தொடர் பில் கவனம் செலுத்த வேண் டும். நாட்டின் வருமான வழி முறைகள் தொடர்பில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் - என்றார். (அ)

# வடக்கில் மிக நீளமான எரிபொருள் வரிசைகள்!

யாழ்ப்பாணம், மே. 22

சில நாட்களாக எரிபொருள் விநியோகம் முற்றாக நிறுத்தப் பட்டிருந்த நிலையில், நேற்று முதல் மீளவும் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனையடுத்து, நேற்று பல எரிபொருள் நிரப்பு நிலையங் களில் மக்கள் நீண்ட வரிசை களில் காத்திருப்பதை அவ தானிக்க முடிந்தது.

யாழ்ப்பாணம், வவுனியா பிரதேச எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மிக நீண்ட வரிசைகள் காணப்பட்டன. (அ)

# வீடுகளில் எரிபொருளை யாரும் சேமிக்கவேண்டாம்

## எரிசக்தி அமைச்சர் வேண்டுகோள்



கொழும்பு, மே. 22

அரசாங்கம் என்ற வகையில் எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டாலும், மின்வெட்டு நேரத்தை அதிகரிக்காமல் இருப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

வலுசக்தி அமைச்சில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், வாகனங்களுக்கு தேவையான எரிபொருளை மாத்திரம் பெற்றுக்கொள்ளுமாறும், எரிபொருளை வீடுகளில் சேமித்து வைத்துக்கொள்வதை மக்கள் தவிர்க்க வேண்டுமெனவும் அவர் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டார். (அ)

# மலையகத்திலும் நாளுக்கு நாள் நீண்டுகொண்டு செல்லும் வரிசை

கொழும்பு, மே. 22

நாட்டில் சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் மண் ணெண்ணெய் ஆகியவற்றுக் கான வரிசை மலையகத்திலும் நாளுக்கு நாள் நீளும் நிலையில், நேற்றும் மக்களும், வாகனச் சாரதிகளும் பல்வேறு இன்னல் களை சந்திக்க நேரிட்டது.

குறிப்பாக நுவரெலியா மாவட்டத்தில் ஹற்றன் மற் றும் கொட்டகலை பகுதிகளில் நீண்ட நேரம் வரிசைகளில் காத்திருந்தவர்களில் பலர் ஏமாற்றத்தோடு வெறுங்கையு டன் வீடு திரும்பினர்.

ஹற்றன் மற்றும் கொட்ட கலைப் பகுதிகளில் எரிவாயு, எரிபொருள் மற்றும் மண் ணெண்ணெய் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் நேற்றுக் காலை முதல் வரிசை களில் காத்திருந்தனர். வாகனங் களும் அணிவகுத்து நின்றன.



இதனால் போக்குவரத்து நடவடிக்கையும் ஸ்தம்பித்தது.

சமையல் எரிவாயு விநி யோக முகவர்களுக்கு குறிப் பிட்டளவு தொகையே வழங் கப்படுவதால், சமையல் எரிவாயுவை வாங்குவதற்காக வரிசையில் நின்ற அனைவருக் கும் அதனை பெற்றுக்கொள்ள முடியாமல்போனது. இதனால் முகவர்களுடன் மக்கள் முரண் படும் சம்பவங்களும் பதிவாகின.

எரிபொருள் நிரப்பு நிலை யங்களிலும் இந்த நிலைமையே காணப்பட்டது. கேள்விக்கேற்ப நிரம்பல் இல்லாததால் கருத்து முரண்பாடுகள் ஏற் பட்டன. சில இடங்களில் குறிப்பிட்ட ளவு எரிபொருளே விநியோகிக் கப்பட்டது. மண்ணெண்ணெய் விநியோகத்திலும் கட்டுப்பாடு காணப்பட் டது. (அ)

# கஜேந்திரகுமாருக்கு கொழும்பில் 2 ஆயிரம் கோடி ரூபா சொத்துகள்

## அவர் சுயாதீனமாக இயங்கமுடியாத நிலையில் உள்ளார் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் கூறுகின்றார்

யாழ்ப்பாணம், மே. 22

**கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திற்கு கொழும்பில் ரூ.2,000 கோடி சொத்துக்கள் உள்ளன. அவர் சுயாதீனமாக இயங்க முடியாத நிலையில் இருக்கிறார். சொத்துக்களை பாதுகாக்கும் விதமாகவே செயற்படுகிறார். அவரை பார்க்க பரிதாபமாக உள்ளது என தெரிவித்துள்ளார் யாழ். மாநகரசபை முதல்வர் வி.மணிவண்ணன்.**

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்- இலங்கையில் தமிழர்கள் இனஅழிப்புக்கு உள்ளானார்கள் என கனடா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உத்வேகம் அளித்துள்ளது. இதற் காக உழைத்த புலம்பெயர் தமிழர் களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

நாம் ஐரோப்பாவிற்கு சென் றிருந்தபோது பிரான்ஸில் உள்ளூ ராட்சி மன்றங்கள், பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேசி னோம். இலங்கையில் இனஅழிப்பு நடந்தது என்ற தீர்மானம் விரை வில் பிரான்ஸ் பாராளுமன்றமும் நிறைவேற்ற வாய்ப்புள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன் னணி என்ற பெயரை பாவிக்க வேண்டாம் என யாரும் எம்மை தடுக்க முடியாது. அந்த அமைப் பைத் தொடங்கியவர்களில் நானும் ஒருவர். முன்னணியின் பெரும் பாலானவர்கள் எம்முடன் இருக்கி றார்கள். ஒருவரை அமைப்பிலி ருந்து நீக்குவதெனில் சரியான பொறிமுறை அவசியம். அந்த பொறிமுறையை சரியாக பயன் படுத்தவேண்டும் அல்லது தாமாக விலகிச் செல்ல முடியும்.



தமிழ்த் தேசிய மக்கள் முன்ன ணியில் ஒழுங்காக, ஜனநாயக பண்புகளுடன் பயணிக்க தயா ரில்லாத எவரும் வெளியேறிச் செல்ல பூரண சுதந்திரமுள் ளது.

முன்னணியின் முதலாவது தலைவராக பார்த்தீபனின் தந்தை வரதராஜன் இருந்தார். பின்னர் கஜேந்திரகுமார் தெரிவானார். பின்னர் எந்தவொரு தெரிவும் நடக்கவில்லை. விரைவில் முன்ன ணியின் தேசிய மாநாடு கூட்டப் பட்டு புதிய நிர்வாகம் தெரிவு செய் யப்படவேண்டும். அந்த நிர்வா கத்தை ஏற்காதவர்கள் முன்ன ணியை விட்டு விலக பூரண சுதந்தி ரம் உள்ளது.

யாழ். ஆரியகுளத்தை மாநகர சபையிடமிருந்து பறிக்கும் முயற்சி கள் நடக்கிறது. அதை என்ன விலை கொடுத்தாவது தடுப்போம்.

அது மக்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அமைதியின்மையை ஏற்படுத்தும். ஆரிய குளத்தை வைத்து அரசியல் செய்வதை அனைவரும் விட்டு விடுங்கள்.

கஜேந்திரகுமார் அண்ணையில் நான் கோபப்படுவதில்லை. பரிதா பப்படுகிறேன். ஆரியகுளத்தை புனரமைக்க நாம் முயன்ற போது அருகிலுள்ள விகாரா திபதி தடுத்தார். கஜேந்திர குமாரின் ஆட்களும் தடுத்தார்கள். அவரது இடத்தில் நீங்களிருந்தாலும் அதைத்தான் செய்வீர்கள்.

கொழும்பில் உங்க ளுக்கு 1000, 2000 கோடி சொத் துக்கள் இருந்தால், நீங்களும் இந்த நிலைப்பாடுதான் எடுக்கவேண்டி வரலாம். அவரால் சுயாதீனமாக இயங்க முடியாதுள்ளது.

நீங்களும் கொழும்பில் பிறந்து வளர்ந்து குடும்ப உறவுகளுடன் இருந்திருப் பீர்கள் எனில் அவரை மாதிரியே 1000, 2000 கோடிக ளுக்கு மேல் சொத்துக்களை வைத்திருந்தால் இதே நிலைப்பாடு களையே எடுக்க வேண்டியிருக்கும்- என்றார். (அ)

# இந்திய நிதியமைச்சருடன் இ.தொ.காவினர் சந்திப்பு



கொழும்பு, மே. 22

இலங்கையில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வு காண உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கவேண்டும் என இலங்கைத் தொழிலா ளர் காங்கிரஸ் இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை சந்தித்து கோரிக்கை விடுத்துள் ளது.

கடந்த காலங்களில் இந்திய தூதரகத்தின் ஊடாக இலங்கைக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்திய நிதி அமைச் சர் நிர்மலா சீதாராமனை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் மற்றும் இ.தொ.காவின் சர்வதேச விவகாரங் களுக்கு பொறுப்பான வரான பாரத் அருள்சாமி ஆகியோர் சந்தித்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடிகளுக்கு இந் திய அரசாங்கம் தொடர்ச் சியாக வழங்கிவரும் ஒத்துழைப்புகளுக்கு இந்த சந்திப்பின் போது இ.தொ.கா நன்றி தெரிவித் துள்ளதுடன், தற்போதைய இக்கட்டான சூழ் நிலை யில் இருந்து இலங்கை மீண்டெழ இந்திய அர சாங்கத்தின் ஒத்துழைப்பும் உதவியும் அதிகமாக தேவைப்படுகிறது.

அதேபோன்று இலங் கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் அதிக மாக இந்த பொருளா தார நெருக்கடியில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இந்தியா அவர்க ளுக்கு பொருளாதார ரீதி யான உதவிகளை வழங்க வேண்டும் என்பதுடன், இலங்கை நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு அனைத்து விதத்திலும் இந்திய அரசாங்கம் உதவி களை வழங்க வேண்டுமெ னவும் இந்த சந்திப்பில் இ.தொ.கா இந்திய நிதி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கைக்கு சாதகமான நடவடிக் கைகளை எதிர்காலத்தில் இந்தியா முன்னெடுக்கும் என இந்திய நிதி அமைச் சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார். (அ)

# எம்.வி. எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் தீ விபத்துக்குள்ளாகி ஒரு வருடம்!

கொழும்பு, மே. 22

நாட்டின் மேற்கு கடற்பரப்பில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் தீ விபத்துக்குள்ளாகி நேற்று டன் ஒரு வருடம் பூர்த்தியாகியுள்ளது.

எனினும், அதனால் ஏற்பட்ட சுற்றுச் சூழல் பாதிப்பின் தாக்கம் இன்னும் தீரவில்லை யென, மீனவ சமூகம் கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த வருடம், மே மாதம் 20ஆம் திகதியன்று, கொழும்பு கடற்கரையிலிருந்து 9.5 கடல் மைல் தொலைவில் நங்கூரமிட்டி ருந்த எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல், பாரிய தீ விபத்துக்குள்ளானது. குறித்த கப்ப லில் இரசாயனங்கள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் என்பன உள்ளடங்கிய 1,486 கொள் கலன்கள் களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன.

இதனை தொடர்ந்து ஏற்பட்ட பாரிய தீப்பரவலினால், தொடர்ந்து 13 நாட்க ளுக்குப் பிறகு குறித்த கப்பல் கடலில் மூழ்கி யது. இந்த தீ விபத்தின் பாரிய தாக்கத்தி னால் கடல்வாழ் உயிரினங்களின் அழிவுக்கு பெருமளவு வழிவகுத்ததுடன், கடற்கரை பகுதிகளிலும் ஆழமான பாதிப்பை ஏற்படுத் தியது. கப்பல் தீப்பிடித்து ஒரு வருடம் கடந் துள்ள நிலையில், அதன் தாக்கம் இன்னும் உள்ளது என்பதற்கு பமுனுகம - சரக்குவ கடற்கரை சிறந்த சான்றாகும்.

இதேவேளை, உஸ்வெட்டகெய்யாவ, தல்தியவத்தை, லுனாவ, மீன்பிடி துறை முகங்களில் இருந்து கடலுக்குச் செல்லும் மீனவர் களின் மீன்பிடி வலைகளில் இன்ன மும் கப்பலின் கழிவு பொருட்கள் சிக்குண்டு கொள்வதாக மீனவர்கள் முறையிடுகின்றனர்.

அதுமாத் திரமின்றி, தமக்கு உரிய நட்ட ஈடு இதுவரை கிடைக்கவில்லை எனவும் மீனவர்கள் சுட் டிக்காட்டுகின்றனர். (அ)

# சுதந்திரக் கட்சியில் இருந்து மேலும் 5 பேர் தாவுகிறார்கள்!

கொழும்பு, மே. 22

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மேலும் 5 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே நிமால் சிறிபால டி சில்வா அமைச்சர் பதவியேற்றுள்ள நிலையில், மஹிந்த அமரவீர, துமிந்த திஸாநாயக்க, லசந்த அழகியவண்ண, ஜகத் புஸ்பகுமார, சாமர சம்பத் தசநாயக்க ஆகியோர் அரசாங்கத்துடன் இணைந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வா பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.மஹிந்த அமரவீர அமைச்சரவை அமைச்சராகவும் நியமிக்கப்படவுள்ளதாக தெரியவருகிறது.

எஞ்சிய 4 பேரில் மூவருக்கு இராஜாங்க அமைச்சர் பதவி கிடைக்க வாய்ப்பு உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க தீர்மானித்த போதிலும், பதவிகளை ஏற்றுக்கொள்வது தொடர்பில் தீர்மானிக்கவில்லை என அறிவித்துள்ளது. எனினும், அதன் எம்.பிக்கள் அமைச்சு பதவிக்காக தாவிக்கொண்டிருக்கிறார்கள். (அ)

# இலங்கை அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கிறிஸ்மஸ் தீவின் அருகே தடுத்து நிறுத்தம்

கொழும்பு, மே. 22

இலங்கையிலிருந்து ஆட்களை ஏற்றிச் சென்ற படகு ஒன்றை அவுஸ்திரேலியா எல்லைக் காவல் படையினர் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

நேற்று சனிக்கிழமை காலை கிறிஸ்மஸ் தீவின் மேற்கு கடற்கரையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முயன்ற படகு ஒன்று எல்லைப் படையால் தடுத்து நிறுத்தப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் நேற்று தேர்தல் நடந்தது. புகலிடக் கோரிக்கையாளர் படகுகளைத் தொடர்ந்து நிறுத்துவதற்கு அவுஸ்திரேலியர்கள் தனக்கு வாக்களிக்கவேண்டும் என்று பிரதமர் ஸ்கொட் மொரிசன் நேற்று சனிக்கிழமை கூறினார்.

மொரிசன் நேற்று தெரிவிக்கையில் “இந்தப் படகை நிறுத்துவதற்காக நான் இங்கு வந்துள்ளேன்' என தெரிவித் துள்ளார்.

தடுக்கப்பட்ட படகில் 15 பேர் இருந்துள்ளனர்.

இதேவேளை, கிழக்கு கடற்பரப்பின் ஊடாக அவுஸ்திரேலியா நோக்கி புறப் பட்ட 40 பேர் கடந்த சில தினங்களின் முன்னர் கைது செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (அ)

Eelanadu ஈழநாடு
22.05.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், வைகாசி 08

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கட்டமைப்பு மாற்றம்?

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பில் விவாதிக்கப்பட்டு வருகின்றது. புதிதாக நியமிக்கப்பட்டுள்ள, நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 21 ஆவது திருத்தச்சட்ட நகல் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படுமென தெரிவித்திருக்கின்றார். நாட்டின் சிவில் சமூக அமைப்புக்களும், கட்டமைப்பு மாற்றம் தொடர்பான கோரிக்கைகளை முன்வைத்து வருகின்றன.

ஆனால் தமிழ் சூழலில் இது தொடர்பில் ஆக்கபூர்வமான உரையாடல்கள் இடம்பெற்றதாக தெரியவில்லை.

பொருளாதார நெருக்கடியும், அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட அரசியல் நெருக்கடியும் இணைந்து நாட்டுக்கு சில மாற்றங்கள் தேவைதான் என்னும் நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றன.

அதே வேளை, நிறைவேற்றதிகார முறைமையை இல்லாதொழிக்க வேண்டுமென்னும் குரல்களும் அதிகரித்திருக்கின்றன. இதற்கு எதிரான கருத்துக்களும் உண்டு. நிறைவேற்றதிகாரத்தை குறைக்க வேண்டும், ஆனால் முற்றிலும் நீக்கக்கூடாதென்னும் கருத்துக்களை முன்வைப்பவர்களும் உண்டு. இவ்வாறானதொரு சூழலில், இன்றைய சூழலை தமிழர் அரசியல் சமூகம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கான வாய்ப்புக்கள் என்ன?

இது தொடர்பில் ஈழநாடு முன்னரும் சுட்டிக்காட்டியிருக்கின்றது. சந்தர்ப்பங்களை கைநழுவ விட்டுவிட்டு பின்னர் கவலைப்படுவதில்-மற்றவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதில் பயனில்லை. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் என்று சொல்வது போன்று, வாய்ப்புக்கள் இருக்கின்றபோதே அதனை உச்சபட்சமாக பயன்படுத்திக்கொள்வது தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஒருவேளை அது நமது தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யவில்லையென்றாலும்கூட ஒரு குறிப்பிட்டளவான தேவைகளை நிறைவு செய்ய முடிந்தால் அது நமக்கு வெற்றியாகும்.

இந்த அடிப்படையில் சிந்தித்தால் 21ஆவது திருத்தச்சட்டம், அதிகாரங்களை குறைப்பது, கையாளுவது தொடர்பான விடயங்களைத்தான் உள்ளடக்கியிருக்கப் போகின்றது. 19ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டபோது, அதற்கு கூட்டமைப்பும் உறுதுணையாக இருந்தது. ஆனால் அப்போது தமிழர்களின் அதிகாரப் பகிர்வுடன் தொடர்பான விடயங்கள் அதில் உள்வாங்கப்படவில்லை. இது தொடர்பில் அப்போது சில அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டியபோதிலும், கூட்டமைப்பு அதனை, அப்போது காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

ஏனெனில், கூட்டமைப்பு புதிய அரசியல் யாப்பு மயக்கத்தில் திழைத்திருந்தது. சம்பந்தன் எதனையும் காதில் வாங்கிக் கொள்ளவில்லை. இப்போது - முன்னர் இருந்த - அதே ரணில் தலைமையிலேயே மீளவும் 19 ஆவது திருத்தத்தை, 21ஆவது அரசமைப்பு திருத்தமாக கொண்டுவரும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

இது ஒரு ஆச்சரியம். ஆரசியலில் இதுபோன்ற ஏராளமான ஆச்சரியங்களை நாம் காண நேரிடலாம். இப்போது கொண்டுவரவுள்ள 21ஆவது திருத்தச்சட்டத்தை உச்சபட்சமாக பயன்படுத்திக் கொள்வது தொடர்பிலேயே கூட்டமைப்பு சிந்திக்கவேண்டும்.

வெளியிலியிருந்து எவர் எதை பேசினாலும் கூட்டமைப்பு ஒன்றே இந்த விடயங்களில் தீர்மானிக்கவல்லது. சுமந்திரன்தான், தமிழ் மக்கள் சார்பில் முக்கிய கலந்துரையாடல்களில் ஈடுபடப் போகின்றார்.

எனவே, 21ஆவது திருத்தச்சட்டத்துக்குள் மாகாண சபையை, மத்தியின் சர்வாதிகாரத் தலையீடுகளின்றி இயக்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குவது தொடர்பில் கூட்டமைப்பு சிந்திக்கவேண்டும்.

ஆளுநரின் அதிகாரம் தொடங்கி, அரசாங்க அதிபர், கிராம சேவையாளர் வரை மாற்றங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். இது ஒன்றுதான், இன்றைய சூழலில் செய்யக்கூடியது.

இதைவிடுத்து, எதனைப் பற்றி பேசினாலும் அது பயனுடையதாக இருக்காது.

இருக்கின்ற அரசியல் யாப்பில் மாற்றங்கள் செய்வது தொடர்பில் ஆராய்கின்றபோது, அதனை பயன்படுத்துவது தொடர்பில்தான் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். இதற்கு வெளியில் உரையாடுவது நிலைப்பாடுகளை முன்வைப்பதற்கு பயன்படுமேயன்றி, ஆக்கபூர்வமாக எதனையும் அடையப் பயன்படாது.

செயலுக்குதவாத உரையாடல்களை விடுத்து இன்றைய சூழலுக்கு பொருத்தமானதாக கையாளுவதற்கு வாய்ப்புள்ள விடயங்கள் தொடர்பில் தமிழ் அரசியல் சமூகம் சிந்திக்கவும் செயற்படவும் வேண்டும். தமிழ் சிவில் சமூகமென்று தங்களை அழைத்துக் கொள்வோரும், இது தொடர்பில் தங்களின் கவனத்தை செலுத்தவேண்டும்.

**வாரசாரம்** - *அரசியல் நிருபர்*

# ‘மனிதன் மாறிவிட்டான், மரத்தில் ஏறிவிட்டான்’



*இது ஒரு மாற்றம். ஆனால், இந்த மாற்றம் உண்மையிலேயே ஒரு மாற்றத்தை மலர வைத்துவிடுமா?*

*முள்ளிவாய்க்கால் வெற்றிப் பேரணிக் களமான காலிமுகத் திடலில், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பது எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கக்கூடியதா? முள்ளிவாய்க்காலிலேயே இந் நினைவேந்தலை அநுமதிக்காத ராஜபக்ஷக்களின் ஆட்சிக் காலத்தில் இது நிகழ்ந்திருக்கிறது.*

*இலங்கையில் இப்போது உலக கவனத்தை ஈர்க்கும் ‘கோட்டா கோ கம’ போராட்டம், ஜனாதிபதி கோட்டாபயவின் பதவி விலகலோடு, இலங்கையில் ஓர் ‘அமைப்பு முறைமை மாற்றத்தையும்’ நோக்கியதாக கூறப்படுகிறது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் விளைவாக எழுந்தது இப் போராட்டம். நாட்டை இப் பாரிய நெருக்கடிக்குள் தள்ளிவிடுவதில், பலமான பக்க தூண்டுதலாக துணைநின்றதும் இந்த மே 18ஆம் நாள்தான்.*

*2009இல் விடுதலைப் புலிகளை இராணுவம் வெற்றிகொண்டதான இந் நாள், இந் நாட்டில் தமிழர்களுக்கு பாரிய துயரத்தையும் அவலத்தையும் நிறைத்த நாள். இந்த வெற்றியிலும் துயரத்திலும்தான் தங்களுடைய ‘சாம்ராஜ்யத்தை’ ராஜபக்ஷக்கள் சாதுரியமாக கட்டி எழுப்பினார்கள் - அரசோச்சினார்கள். சிங்கள மக்களின் மன்னர்கள் என்று மார்தட்டினார்கள். அவர்களின் இந்த சாதுரியத்தையும், அந்த சாதுரியத்தில் நாடுற்ற அவலத்தையும் - அதன் காரணத்தையும் சிங்கள மக்கள் இப்போது உணர தலைப்பட்டிருப்பதைத்தான் ‘கோட்டா கோ கம’ போராட்டம் வெளிப்படுத்துகிறது. அந்த வெளிப்பாடாகவே, ஜனாதிபதி அலுவலகம் முன்பாக இராணுவ அணிவகுப்பு பேரணிகள் எதுவுமில்லாதபோது, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இந் நாளில் நிகழ்வுற்றிருக்கிறது. சிங்கள மக்கள் இதனை ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.*

*கூடவே, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது இல்லத்தில், ‘சக வாழ்வெனும் விளக்கால் நாட்டில் ஒளியேற்றுவாம்’ என்று அறிவித்து, இத் தினத்தில் சுடரேற்றியிருக்கிறார்.*

*ஆக, இவை எல்லாம் ஒரு மாற்றம்தான். இன சௌஜன்யத்தை - நாட்டின் சுபீட்சத்தை நோக்கிய ஒரு மாற்றம். ஆனால் இதேவேளை, யுத்தத்தில் அல்லல்பட்ட முள்ளிவாய்க்காலில், ‘தமிழன் மாறமாட்டான் - ஒற்றுமைப்படமாட்டான்’ என்பது மறக்காமல் உணர்த்தப்பட்டிருக்கிறது. ‘கூலிக்கு மாரடிப்பவர்கள்’ என்பதனையும் இதில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்றவாறும் உணர்த்தப் பட்டது.*


*ஆக, ஜனாதிபதி கோட்டாபய பதவியிலிருந்து வெளியேறவேண்டும் என்று பொங்கிய எழுச்சியில் - நாட்டின் பொருளாதார ஸ்தம்பித நிலையில் ஒரு மீட்பராக பிரதமர் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க, பொதுவில் எல்லோராலுமே அந்த விதத்தில் ஏற்றுக் கொள்ளப்படுபவர்தான். அதேவேளை, ராஜபக்ஷக்களையும் அவர்களின் இந் நெருக் கடி காலத்தில் மீட்டுவிடவல்லவர் ரணில் விக்கிரமசிங்க என்று முன்வைக்கப்படும் கருத்தும் நிராகரித்துவிடமுடியாதது.*

*புதிய பிரதமரின் கீழான புதிய அமைச்சரவை அமைச்சர்கள், ஜனாதிபதியால் பதவிப் பிரமாணம்செய்துவைக்கப்படுகின்றனர். இந்தவேளையில், கடந்த வாரத்தின் பாராளுமன்ற அமர்வும், நடைபெறும் அரசியல் நடவடிக்கைகளும், காலிமுக திடலில் தொடர்கின்ற போராட்டம் வலியுறுத்தும் அமைப்பு முறைமை மாற்றத்துக்கு நம்பிக்கையூட்டும் விதத்தில் ஏதாவது கோடி காண்பிக்கின்றனவா என்ற கேள்வியை எழுப்புகின்றன. அது மாத்திரமல்ல, ‘கோட்டா கோ கம’வும் ஸ்தம்பித்துவிடுமோ என்ற கேள்விகூட அரும்புகிறது. அப்படியெனில், ரணில் விக்கிரமசிங்கவின் பிரதமர் பதவியேற்பு தொடர்பிலான சந்தேகம் நிஜமானதாக ஊர்ஜிதமாகிவிடுமா? பாராளுமன்றத்தில் நடைபெற்ற பிரதி சபாநாயகர் தெரிவும், அதில் பசில் ராஜபக்ஷ சிலாகிக்கப்படும் விதமும் இதில் ஆழ்ந்த நோக்குதலுக்குரியது.*

*இவற்றுக்கிடையில், சுமந்திரன் நம்முடைய அரசியலில் ‘நாளொரு வண்ணம் பொழுதொரு மேனி’யாக வளர்கிறார்! அண்டை வீடுகளுக்கெல்லாம் ஓடித் திரிந்து விளையாடுகிறார், அங்குள்ளவர்களுடன் சண்டையும் பிடிக்கிறார். அவருடைய வீட்டில் மற்றையவர்கள் அவர் செய்யும் குறும்புகளை பார்த்து, பேசாமல் ரசித்துக் கொண்டிருக்கிறார்கள். சாணக்கியன் தோழனாக, எல்லாவேளைகளிலும் எல்லாவற்றினின்றும் அவரைக் கவனமாக பார்த்துப் பாதுகாத்துக்கொள்கிறார்.*

*ஆக, காலிமுக திடலில் தொடங்கி நடைபெறும் போராட்டத்தையும், மே 9இல் கொழும்பிலும் அதைத் தொடர்ந்து மற்றைய இடங்களில் நடைபெற்ற சம்பவங்களையும், பின்னர் கடந்த வாரத்து அரசியல் நடவடிக்கைகளையும் பார்க்கையில், மாற்றத்தின் எதிர்பார்ப்பைவிட, தமிழன் திருந்தமாட்டான் என்பது மாத்திரமல்ல, இந்த நாடுகூட திருந்தமாட்டாது என்று எழுகின்ற எண்ணமே விஞ்சுவதாக இருக்கிறது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -30

# மனித நூல்கள் பற்றியது

கணபதி சர்வானந்தா

அது ஒரு மனித வாசிக சாலை. அங்கே புத்தகங்களுக்குப் பதிலாக மனிதர்களே வாசிக்கப்படுகிறார்கள். கேட்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறதல்லவா! இப்படி ஒரு வாசிகசாலை டென்மார்க் நாட்டில் இயங்குகிறது. ஒரு நூலகத்துக்குச் சென்று எமக்குத் தேவையான ஒரு புத்தகத்தைப் பெற்றுக் கொள்ளதைப்போல..புத்தகத்துக்குப் பதிலாக ஒரு மனிதனை நீங்கள் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். ஒரு புத்தகத்தை வாசித்து அறிவதைப்போல.. அவரது கதைகளை, அவரது அனுபவங்களை நீங்கள் கேட்டு அறிந்து கொள்ள அந்த நூலகம் ஒரு வாய்ப்பை உங்களுக்கு வழங்குகிறது. இயல்பு வாழ்க்கையிலே உங்களால் அணுகமுடியாத ஒருவரை இலகுவாக அணுகி அவரோடு உரையாடி அவரது கதைகளைக் கேட்பதென்பது... நினைத்தால் விசித்திரமாகத்தானிருக்கிறது. ஆனால் நிஜமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நூலகத்தில் மனித நூல்களாகத் தங்களை இணைத்துக் கொள்பவர்கள் ஒரு தொண்டு என்ற அடிப்படையிலேயே அந்த அர்ப்பணிப்பைச் செய்கின்றனர்.

எப்பொழும் திறந்திருக்கும் ஒரு நூலைப் போன்றவர்கள் மனிதர்கள் என்று சொல்வதுண்டு. அதுவும் சிறந்த விலை மதிக்க முடியாத அனுபவங்களைக் கொண்ட மனிதர்களை விலைமதிப்பற்ற நூலுக்குச் சமன் என்றும் போற்றுகிறார்கள். ஏனெனில் ஒரு நூலின் வாசிப்பு ஒரு மனிதருக்குள் ஏற்படுத்தக் கூடியதைப் போல பல மடங்கு பெறுமதிமிக்க மாற்றங்களை அவர்களால் ஏற்படுத்த முடியும் என்று அந்த மனித வாசிக சாலையினர் நம்புகின்றனராம்.

அந்த மனித வாசிக சாலையினர் நம்புவதைப்போல, அவர்களால் தமது உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அந்த மனித நூல்கள் ஒவ்வொன்றும் தமது சமூகத்திலுள்ள ஒரு அங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக அவர்கள் கண்டறிந்திருக்கின்றனர்.அதற்குக் காரணம்....

எங்கள் புத்தக அலமாரியில் இருந்து பெறப்படும் ஒவ்வொரு மனிதப் புத்தகமும், நமது சமூகத்தில் ஒரு குழுவை பிரதிநிதித்து வப்படுத்துகிறது என்று சொல்வதற்கு... அவர்கள் அவர்களின் வாழ்க்கை முறை, நோய் கண்டறிதல், நம்பிக்கை, இயலாமை, சமூக நிலை, இனத் தோற்றம் போன்றவற்றின் காரணமாக அடிக்கடி தப்பெண்ணத்துக்கு உட்படுத்தப்பட்டவர்கள். சமூகத்தால் களங்கம் அல்லது பாகுபாடுகளுக்கு உட்பட்டவர்கள் போன்ற தகமைகளைக் கொண்டிருப்பதையே காரணங்களாகச் சுட்டிக் காட்டலாம் என்கிறார் அந் நூலகச் செயற்பாட்டாளர்.

வாழ்க்கையின் விளிம்பு நிலையில் நின்று கொண்டு நிலை தடுமாறுபவர்களுக்கும், மன ஒருமைப்பாட்டோடு சிந்திக்க முடியாதவர்களுக்கும் அவர்களது அனுபவங்கள் வரப்பிரசாதமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஒரு மனிதனிடமிருந்து முறையாகப் பெறப்படும் அனுபவமும் அது சார்ந்த அறிவும் பல நூல்களை வாசிப்பதற்குச் சமமானது என்கிறார் ஒரு நூலகர். அது மட்டுமல்லாது அவர்கள் கதைகளைக் கேட்பவர்கள் அவர்கள் சொல்வதில் உள்ள கதைகளின்போது ஏற்படும் சந்தேகங்களை உடனுக்குடன் கேட்டுத் தெளிவுறவும், ஐயப்பாடுகளைக் களைந்தெறியவும் ஏதுவாக இருக்கிறதாம். எழுத்தில் உருவாக்கப்பட்ட நூல்களைப் படிக்கலாம். அது தொடர்பாக மனதில் ஏற்படும் கருத்துகளைத் தெளிவடைய ஒன்றில் அத் துறைசார்ந்தவர்களை அல்லது அதன் ஆசிரியரைத் தேடிச் செல்வது தவிர்க்க முடியாத தொன்று. ஆனால் இந்த மனித நூல்களைப் பொறுத்தவரை அதனை வாசிப்பவர் எந்தவித சங்கடமுமில்லாது உடனுக்குடன் அது தொடர்பாக எழும் சந்தேகங்களை கேட்டுத் தெளிவு பெறலாம் என்றும் சொல்கிறார்கள்.

இந்த மனித நூலகத்தின் நிர்வாகக் காரியாலயம் டென்மார்க் கோப்பநேகன் என்ற இடத்தில் உண்டு. முறைப்படி பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அந்த நிறுவனமானது எந்தவித இலாப நோக்கத்தோடு தொடங்கப்பட்டதல்ல. அந்தக் காரியாலயமானது தமது செயற்பாடுகளுக்காகத் தினமும் காலை 10 மணி தொடக்கம் மாலை 4வரை திறந்தே இருக்கிறது. இந்தக் காரியாலயத்தை நேரடியாகச் சென்று அணுகலாம். அல்லது அவர்கள் இணையத் தளத்துக்குச் சென்று பார்வையிட்டு விபரங்களைப் பெறலாம். அதற்கும் அப்பால் தொலைபேசியினூடாகவோ அல்லது மின்னஞ்சலினூடாகவே தொடர்புகளை ஏற்படுத்திப் பயன்பெறலாம்.

உலகளாவிய ரீதியில் மனித நூலகத்தை ஒரு கற்றல் தளமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்வதில் மனித வாசிகசாலை நிறுவனமான HLO அர்ப்பணிப்போடு செயற்படுகிறது.

“எமது இந்த நிறுவனமானது ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற உயரிய நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு 2000 இல் தொடங்கப்பட்டது. நாங்கள் தற்போது ஆறு கண்டங்களில் செயல்பட்டு வருகிறோம், மேலும் 80க்கும் மேற்பட்ட நாடுகளில் செயல்பாடுகளை ஊக்குவிப்பதில் பெரு வெற்றி கண்டு வருகிறோம். உலகின் சில பாரிய பிராண்டுகள் என்று சொல்லப்படுகின்ற நிறுவனங்களோடு பணிபுரியும் பாக்கியமும் எங்களுக்குக் கிடைத்துள்ளது. அவர்களின் பன்முகத்தன்மை மற்றும் அதனை உள்ளடக்கிய முயற்சிகளில் அவர்களுக்கு உதவுதல் என்ற வகையில் எமது செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இது ஒரு நல்ல அனுபவமும் கூட ... என்று அந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் பற்றி அந்த நூல கத்தினூடாக வாசிப்பு அனுபவத்தைப் பெற்ற திரு.ஸ்ரீபன் கானே பின்வருமாறு குறிப்பிடுகிறார். இவர் கனேடியன் மியூசியம் போர் கியூமன் றைஸ்ர் (Canadian Museum for Human Rights) என்ற அமைப்பின் நூலகத்தில் நூலகராகப் பணியாற்றி வருகிறார்.

இவர்களின் இந்தச் செயற்பாடானது எமது மனித உரிமைகள் தொடர்பான செயற்பாடுகளை வலுப்படுத்துவதாக மட்டுமல்ல சமூகத்தின் மத்தியிலே மனித உரிமைகள் பற்றிய உரையாடல்களை நிகழ்த்த உதவுவதோடு மனித உரிமைகள் பேணப்பட வேண்டிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகிறது. இதனால் நிறுவனத்தோடு ஏற்படுத்தப்படுகின்ற மனிதத் தொடர் புகள் மேன்மேலும் எமது நடவடிக்கைகளை எதுவித தங்குதடை களும் இன்றி முன்னெடுத்துச் செல்ல புதிய வழிவகைகளையும் வகுத்துதவுகிறது ... என்கிறார் ஸ்ரீபன் கானே.

இதுவும் ஒரு அனுபவப் பகிர்வே. ஒரு கதாப் பிரசங்கத்தைக் கேட்பதைப்போல... அவர்கள் சொல்வதும் அதனைக் கேட்பதுவும் ஒரு வித்தியாசமான அனுபவம் என்கிறார் அதனூடாகப் பயன் பெற்ற ஒருவர். நாமும் இதனை இங்கு முயற்சிக்க லாம்?

# இந்தவார ராசிபலன் 22.05.2022 - 28.05.2022



மே 22 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - வைகாசி 08

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : சப்தமி




தொழிலில் இருந்த தடைகள் விலகும், உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளின் பாராட்டிற்கு ஆளாவீர்கள். செலவுகள் அதிகரிக்கும் என்றாலும் அதற்கேற்ற வருமானம் வரும். நட்புகளிடம் சிக்கல்கள் உண்டாகலாம். குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடத்துவதற்குரிய காலம் கூடிவரும். தடைபட்டிருந்த வருவாய் உங்களை வந்தடையும். கணவன் மனைவிக்கும் சில பிரச்சனைகள் வந்து போகும்.




நீங்கள் ஈடுபடும் முயற்சிகள் வெற்றியாகும். நீண்ட நாட்களாக உங்களை வாட்டிக்கொண்டிருந்த பிரச்னைகள் விலகி மனக்குழப்பம் தீரும். மூத்தவர்களின் ஆலோசனைகள் நன்மையளிக்கும். மனதில் இருந்த குழப்பங்கள் விலகும். சுறுசுறுப்பாக செயல்பட்டு நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளில் வெற்றி பெறுவீர்கள். எதிரிகளின் தொல்லைகள் அகலும்.தொழிலை விரிவு செய்வீர்கள். குடும்பத்திற்காக நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியாகும்.




தொழில், உத்தியோகத்தில் நீங்கள் நினைத்தது நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும்.பிள்ளைகள் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவைப்படும். உங்கள் முயற்சிகள் இழுபறிக் குப்பின் நிறைவேறும். சொத்து சம்பந்தமான பிரச்சனைகள் நீண்டு கொண்டே செல்லும். அரசு வகையிலான எதிர்பார்ப்புகளின் நன்மை தோன்றும்.அரசு வழியில் நெருக்கடிகள் தோன்றும் என்றாலும் உங்கள் முயற்சி யால் அதை சரி செய்வீர்கள். குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர்கள்.




எந்தவகையில் நெருக்கடிகள் வந்தாலும் அவற்றையெல்லாம் சமாளிப்பீர்கள். புதிய முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள். குடும்பத் தில் இருந்த சங்கடங்கள் குழப்பங்கள் விலகும். மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிடைக்கும். நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர் கள்.தடைபட்டிருந்த வருவாய் இப்போது உங்கள் கைக்கு வரும். பிள்ளைகளின் கல்வி, திருமண முயற்சிகள் வெற்றியளிக்கும்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். எதிரிகளால் இருந்த சங்கடங்கள் விலகும். மருத்துவ செலவுகள் அதிகரிக்கும். எதிர்பார்த்தவற்றில் ஆதாயம் உண்டாகும். மனம் நினைப்பதை செய்ய முடியாத நிலை உண்டாகும்.குடும்பத்திற்காக செலவுகளை சந்திப்பீர்கள். உறவினர்கள் உங்கள் செயல்களுக்கு உதவியாக இருப்பார்கள். வழக்கமான செயல்களிலும் முயற்சிகள் தேவைப்படும். தடைகள் விலகும்.




குடும்பத்தில் ஏதேனும் குழப்பங்கள் உண்டாகும். திருமணம், வீடு மனை வாங்கும் முயற்சிகளில் நன்மை உண்டாகும். உங்கள் வாக்கில் நிதானம் தேவைப்படும். பொருள் வரவு தாராளமாகும் என்பதால் எல்லாவற்றையும் சமாளிப்பீர்கள்.அச்ச உணர்வு மேலோங்கும். தேவையற்ற பயம் வந்து போகும். இரத்த உறவுகள் சுபிட்சமடைவார்கள். உத்தியோகத்தில் இருந்த பிரச்சனைகள் விலகும்.




பல வகையிலும் நெருக்கடிகள் உண்டாகும், மனதில் குழப் பங்கள் அதிகரிக்கும். திட்டமிடும் செயல்களையும் செய்ய முடியாமல் போகும். கடுமையாக முயற்சித்தும் சில வேலைகள் நிறைவேறாமல் இழுபறியாகும். சட்டத்திற்கு புறம்பான செயல்கள் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும். புதிய நட்புகளின் வழியே சங்கடங்கள் உண்டாகலாம். வேலைகளில் இழுபறி இருக்கும்.




கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் இடமாறுதலை சந்திக்க வேண்டிவரும். தொழிலில் இருந்த நெருக்கடிகள் விலகுவதுடன் எதிர்ப்புகள் அகலும். இதுவரை நிறைவேறாமல் இருந்த உங்கள் ஆசைகள் நிறைவேறும்.திருமண வயதினருக்கு திருமண யோகம் உண்டாகும். பிள்ளைகள் நிலை யில் முன்னேற்றம் தோன்றும். வேலைவாய்ப்பு முயற்சிகள் வெற்றியாகும்.




குடும்பத்தினர் வழியே சுப விரயங்கள் உண்டாகும். பூர்வீக சொத்துகள் குறித்த பிரச்சனை இழுபறியாகவே இருக்கும். குடும்பத்திற்குள் ஏதேனும் ஒரு பிரச்சனை உண்டாகி உங்களை சங்கடப்படுத்தும்.குடும்பத்தில் நெருக்கடி இருக்கும். பிள்ளைகள் வழியே உங்கள் உழைப்பு செல்லும். தொழில் முயற்சியில் வருவாய் உண்டாகி நிலைமைகளை சமாளிப்பீர்கள்.எதிர்ப்புகளை சந்தித்து வெற்றி பெறுவீர்கள்.




உடல்நிலையில் கூடுதல் கவனம் தேவைப்படும். தொழில், உத்தியோகத்தில் நெருக்கடிகள் இருக்கும். வார்த்தைகளில் கவனம் தேவை. மனதில் ஏதேனும் குழப்பங்கள் உண்டாகும். உறவுகள் வழியே நெருக்கடிகள் தோன்றும்.தாயாரின் உடல்நிலையில் பாதிப்புகள் தோன்ற வாய்ப்பிருப்பதால் கவனம் தேவை. வாகனப் பயணத்தில் கவனம் தேவை. வாழ்க்கைத்துணையின் உடல்நலனில் கவனம் தேவை.




குடும்பத்தின் மீது பொறுப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானத்தைக் கடைபிடிப்பீர்கள். எதிர்பார்த்தவற்றில் சந்தோஷமான நிலை உண்டாகி மகிழ்வீர்கள். புதிய சொத்துகள், வாகனம் வாங்கும் முயற்சி வெற்றியாகும். நீண்டநாள் திட்டங்கள் நிறை வேறும்.புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். தொழிலை விரிவு செய்யும் முயற்சி பலனளிக்கும். குடும்பத்தினரின் ஆதரவு கூடும், உத்தியோகத்தில் இருப்ப வர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகள் கிட்டும்.




பிள்ளைகளின் கல்வி, திருமணம் குறித்த செயல்களில் ஈடுபடுவீர்கள். செலவுக்கேற்ற வருவாய் வந்து கொண்டிருக்கும். பூர்வீக சொத்துகளில் இருந்த பிரச்னைகள் விலகும். உங்கள் வார்த்தைகளால் எதிர்ப்புகளும் பிரச்னைகளும் தோன்றும். புதிய நண்பர்களால் பிரச்னைகள் உருவாகலாம். குடும்பத்தின் முன்னேற்றம் குறித்து யோசிப்பீர்கள்.எதிர்பார்த்த வருவாய் வந்து சேரும். அரசு வகையில் தோன்றிய பிரச்னைகள் விலகும். வார்த்தைகளில் கவனம் தேவையாக இருக்கும். எதிரிகளால் உண்டான சங்கடங்கள் விலகும்.

# புலனாய்வு அறிக்கையை மெய்ப்பிக்க சிறைவைக்கப்பட்ட பேரறிவாளன்

## சென்னை மடல்

-பகவான் சிங்-

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் உச்சநீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு, திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டையில் தன் வீட்டில் தங்கியிருந்த பேரறிவாளனை சந்திக்க நண்பர்களும் பொதுமக்களும் புதனன்று குவிந்துகொண்டிருந்தனர். பலத்த உற்சாகக் குரல்களுக்கு நடுவில் வீட்டைவிட்டு வெளியில் வந்த பேரறிவாளனின் முகத்தில் மகிழ்ச்சியைவிட சோர்வே அதிகமாகத் தெரிந்தது. "அறிவு, அறிவு இந்தா .." என்று ஒருவர், வாசிப்பதற்காகப் பறையைக் கொடுத்தார் (பறை எனபது பண்டைய தமிழகத்தில் அரசர்களின் உத்தரவு களை அறிவிக்க பயன்பட்ட தோல் மேளம். இந்த நற்செய்தியைக் கொண்டாடி எல்லோருக்கும் தெரி விக்க, இளம்பெண் ஒருவர் உற்சாகமாகப் பறை அடித்துக்கொண்டிருந்தார். இன்னொருவரும் பறை இசையோடு கொண்டாட்டத்தில் இணைந்தார். பெருமை நிறைந்த சிரிப்போடு பேரறிவாளனின் அம்மா அற்புதம்மாள் அருகில் நின்றுகொண்டிருந்தார். சமூக, அரசியல், ஊடக, நீதிக் களங்களில் தன் மகனின் விடுதலைக்காக அவர் தொடர்ந்து போராடியது



வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய ஒரு தாயின் போராட்டமாக அமைந்தது. மே 21, 1991இல் நடந்த கொடூரக் கொலையை விசாரித்த புலனாய்வுத்துறையின் சிறப்புக் குழு தவறாக பேரறிவாளன்மீது குற்றம் சுமத்திவிட்டது என்றும், தன் மகன் குற்றமற்றவன் என்றும் அவர் தொடர்ந்து வாதிட்டார். இருபதாவது பிறந்தநாளுக்கு ஒரு மாதமே ஆன நிலையில் அறிவை புலனாய்வுத்துறையுடன் அவர் அனுப்பிவைத்திருந்தார். பொறியியல் படிப்பில் டிப்ளோமோ படித்த அவர், அந்தக் குடும்பத்தின் பொருளாதார சூழலையே தூக்கி உயர்த்தும் அளவுக்கு ஒரு நல்ல நிலைக்கு வந்திருக்க முடியும், அந்த சூழலில்தான் அவர் கைது செய்யப்பட்டார். இது நடந்து மூன்று தசாப்தங்கள் ஆகின்றன.

## பெண் தற்கொலைக் குண்டுதாரி என்பதில் புலிகளின் வேலை என்பது உடனேயே புரிந்தது

பல்வேறு குறைபாடுகளைக் கண்டதால், புல னாய்வுத்துறையின் சிறப்புக் குழு அறிக்கையை நான் மதிப்பதில்லை, ஆகவே, அதில் குறிப்பிட்ட எல்லா விஷயங்களையும் பற்றி நான் இங்கு பேசப்போவ தில்லை. பேரறிவாளனைப் பற்றிய சில நிகழ்வுகளை மட்டுமே நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த கொடூர மான குற்றச்செயலில், வாழ்நாள் சிறை தண்டனையில் இருக்கும் ஏழு பேர் பட்டியலில் இருக்கும் மற்றவர்கள் குற்றமற்றவர்கள் என்று நான் சொல்லவில்லை, ஆனால், அறிவு குற்றமற்றவர் என்று நான் நம்புகிறேன்.

பேரறிவாளன் விடுதலையில் ஊடகங்களின் முக்கிய வெளிச்சம் அரசியல்வாதிகளுக்கானது. "வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு" என்று உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் புகழ்ந்த தமிழக முதல்வர் ஸ்டாலின், "ஒரு தனிமனிதனின் விடுதலைக்காக மட்டுமல்லாமல், ஒன்றியக் கொள்கை மற்றும் மாநில சுயேச்சையை உறுதிப்படுத்தியிருக்கிறது என்பதாலும் இந்த தீர்ப்பு நினைவுகூரப்படும்" என்றார். வழக்கு விசாரணையின் போது ராஜீவ் காந்தி கொலையில் குற்றவாளிகளை விடுவிப்பது என்ற மாநில அரசின் முடிவில், மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட ஆளுநர் தலையிடக் கூடாது என்று நீதிபதிகள் தெளிவாகத் தெரிவித்து இருக்கின்றனர். மற்ற ஆறு ஆயுள் தண்டனை கைதி களின் நிலை என்ன என்பதுபற்றிக் கேட்டபோது, வழக்கு பற்றிய விவரங்களுக்காகக் காத்திருப்பதாகவும், நீதித்துறை வல்லுநர்களோடு கலந்து ஆலோசித்தபிறகு முடிவெடுக்க இருப்பதாகவும் ஸ்டாலின் நிருபர்களிடம் தெரிவித்தார்.

ஆனால், அவரது நட்புக் கட்சியான காங்கிரஸ், பேரறிவாளனின் விடுதலை பற்றிய மாற்றுக் கருத்தை வைத்திருக்கிறது. ராஜீவ் காந்தி கொலை வழக்கில் இவர்களை குற்றம் சாட்டி எந்த நீதிமன்றம் சிறையில் அடைத்ததோ அதே நீதிமன்றம் நீதி நுணுக்கங் களைக் காரணம் காட்டி இப்போது ஒருவரை விடுதலை செய்திருக்கிறது என்று கூறினார் தமிழக காங்கிரஸ் தலைவர் கே. எஸ். அழகிரி. உச்சநீதிமன்றத் தீர்ப்பை காங்கிரஸ் விமர்சிக்க விரும்பவில்லை என்றாலும், "குற்றம் சாட்டப்பட்டவர்கள் கொலை செய்தவர்கள், அப்பாவிகள் அல்லர்" என்று அழகிரி வாதிட்டார். தமிழர்கள் என்பதற்காகவே

## ராஜீவ் படுகொலையை நேரிலேயே பார்த்தேன்

இவர்கள்மீது பரிதாபப்படும் அரசியல்வாதி கள், கடந்த 20 ஆண்டுகளாக சிறையில் வாடும் தமிழர்களைப் பற்றிப் பேசுவதில்லை என்றார். "அவர்கள் தமிழர்கள் இல்லையா? ராஜீவ் காந்தியைக் கொன்றவர்கள் மட்டும் தான் தமிழர்களா?" என்று அவர் கேள்வி எழுப்பினார்.

பாஜகவின் மாநிலத் தலைவர் அண்ணாமலையும் திமுக தலைமையை விமர்சித்தார். "கொலைக்குற்றம் சாட்டப்பட்டவரைக் கொண்டாடுகிறார்கள், இது ஒரு மோசமான முன்னுதாரணம்" என்றார். விநோதமாக, எதிர் துருவங்களாக இருக்கும் காங்கிரஸும் பாஜகவும் பேரறிவாளன் விடுதலையை எதிர்ப்பதில் மட்டுமே ஒரேமேடையில் இருக்கின்றன. பிற கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் பேரறிவாளனைக் கட்டியணைத்து வாழ்த்து சொல்கிறார்கள், அவர் விடுதலைக்காகப் போராடிய அற்புதம்மாளைப் பாராட்டுகிறார்கள்.


தடா சட்டத்தின்கீழ் விசாரணை நடந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் தந்த வாக்குமூலம் விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட் டது, ஆகையால் பேரறிவாளனின் வாக்கு மூலம், வற்புறுத்தி பெறப்பட்டாலும், அவருக்கு எதிரான ஆதாரமாக அமைந்தது. தனு என்ற விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பெண், குண்டுவெடிப்புக்காக கட்டியிருந்த பெல்ட் வெடிகுண்டுக்கான இரண்டு 9 வோல்ட் பட்டரிகளைப் பெற்றுத் தந்ததாக பேரறிவாளன்மீது இந்த கொலைக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

இந்த பட்டரியை விடுதலைப்புலிகள் குழு ஏன் கேட்கிறது என்று தனக்குத் தெரியாது என்று அறிவு, பூந்தமல்லி தடா நீதிமன்றத்தில் இறைஞ்சினார். நீதிபதி அதை ஏற்கவில்லை. விசாரணை அதிகாரியும் அறிவு சொன்ன இந்தத் தகவலைப் பதிவு செய்யவில்லை. 1998ஆம் ஆண்டு ஜனவரி 28ஆம் திகதி அனைவருக்கும் தூக்கு தண்டனை அளித்து நீதிபதி தீர்ப்பளித்தார். பரபரப்பான இந்தத் தீர்ப்பில் அடுத்தடுத்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு நடக்கும் என்று தெரிந்ததால், அவர் தனக்கு பாதுகாப்பாக இந்தத் தீர்ப்பை அளித்திருக்கக் கூடும். மரண தண்டனை அளிக்கப்பட்ட 26 பேரில் அறிவு உட்பட நான்கு பேருக்குத் தூக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டது, மூன்று பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. மற்றவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

16 வருடம் தனிச் சிறையில் தூக்குக்கயிற்றை எதிர்நோக்கி அறிவு காத்திருந்தார். அவரிடமிருந்து தொடர்ந்து கருணை மனுக்கள் வந்தன, அவரது தாய் அற்புதம்மாள் தொடர்ந்து பல்வேறு விதங்களில் போராடினார். தூக்கு தண்டனைக் கைதிகளுக்கே உரித்தான மன உளைச்சலைப் பற்றியும் ஒரு மனுவில் அறிவு குறிப்பிட்டிருந்தார். ஒருகட்டத்தில் நான்கு மரண தண்டனைக் கைதிகளுக்கும் ஆயுள் தண்டனை என்று தண்டனை குறைக்கப்பட்டது.

சிறையிலேயே, இந்திரா காந்தி அஞ்சல்வழி பல்கலைக்கழகம் மூலம் கணிப்பொறிக்கான பிசிஏ (இளங்கலை) மற்றும் எம்.சி.ஏ (முதுகலை) பட்டங் களை அறிவு முடித்தார். மன உளைச்சலாலும் சிறையின் மோசமான சூழலால் வந்த நோய்களாலும் பேரறிவாள னுக்கு அடிக்கடி மருத்துவமனை செல்லவேண்டியி ருந்தது. அவ்வப்போது அரிதாகக் கிடைத்த பரோல் நேரத்தையும் உடல்நலமற்ற தந்தையையும் மன உளைச் சலில் இருக்கும் தாயையும் கவனித்துக் கொள்வதில் செலவிட்டார்.

சிறப்புப் புலனாய்வுக்குழுவில் விசாரணையைப் பதிவு செய்வதற்காக வந்திருந்த ஐ.பி.எஸ் அதிகாரி வி தியாகராஜன் உச்சநீதிமன்றத்தில் தந்த ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தின்மூலம், அறிவு குற்றமற்றவர் என்பது உண்மையானது. குற்ற உணர்ச்சி தாளாமல் நவம்பர் 2017இல் ஒரு வாக்குமூலம் அளித்த அவர், 26 ஆண்டுகளுக்கு முன் அந்த விசாரணையின்போது, அந்த பட்டரிகளைப் புலிகள் ஏன் கேட்கிறார்கள் என்று தனக்குத் தெரியாது என்று பேரறிவாளன் கூறியதைப் பதிவு செய்யவில்லை என்றும், இந்த முக்கிய தகவலை விட்டுவிட்டதாகவும் அவர் ஒப்புக்கொண்டார்.



பதிவுகளின்மூலம், இந்த சதிவேலையில் ஈடுபட்டவர் களின் செயல்பாடுகள் குறித்த ஒரு வலுவான கட்ட மைப்பை உருவாக்கவேண்டிய கட்டாயத்தில் சிறப்புப் புலனாய்வுக்குழு இருந்ததாகவும், அதில் ஒரு சிறு பலவீனம் இருந்தாலும் வழக்கு நீர்த்துப்போய்விடும் என்பதாலும் இதை தியாகராஜன் செய்திருக்கக்கூடும்.

ராஜீவின் தேர்தல் கூட்டத்தை ஒரு செய்தியாளராகப் பதிவுசெய்யப் போனதால் சிறிபெரும்புதூர் காங்கிரஸ் பேரணியில் நடந்த அந்தப் படுகொலையை நான் நேரில் பார்த்தேன். ஒரு பெண் தற்கொலைப்படை போராளி மூலம் அது நடந்தது என்பதால், அது விடுதலைப் புலிகளின் வேலை என்று நான் உடனே புரிந்து கொண்டேன். ஈழப் போராட்டத்தைத் தொடக்கம் முதலே பார்த்திருக்கிறேன் என்பதாலும், புலிகளின் மனநிலையை ஓரளவுக்குப் புரிந்துகொண்டவன் என்பதாலும், பிரபாகரன் மற்றும் பொட்டு அம்மான் ஆகிய இருவரும் ஒரு முக்கியமான 'ஒப்ரேசன்' நடத்தும்போது, தேவைக்கு அதிகமாக எதை யும் போராளிகளிடம் சொல்ல மாட்டார்கள் என்பதை அறிந்தவன் நான். ஒரு குறிப்பிட்ட தகவல் போராளிகளுக்கு சொல்லப்படவேண்டுமென்றால் மட்டுமே அது தெரிவிக்கப்படும். ஆங்கிலத்தில் இதைதான் 'Need-to-know' என்பார்கள். ராஜீவ் காந்தி கொலையில் ஈடுபட்ட குழுவின் தலைவனான சிவராசன், மூன்று பேருக்கு மட்டுமே கொலைத் திட்டம் தெரியும் என்று பொட்டு அம்மானிடம் இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு வயர்லெஸில் பேசியிருப் பது, சிறப்பு புலனாய்வுக்குழுவின் அறிக்கையிலும் பதிவாகியிருக்கிறது. அடுத்த இரண்டு மாதங்களில் இந்த மூன்று பேர் குழு விரிவடைந்திருக்கலாம் என்றாலும், தமிழ் உரிமைகளுக்காக சிங்கள அரசை எதிர்த்துப் போராடும் தமிழ்ப் போராளிகள் என்ற வகையில் புலிகள்மீது ஆதரவு காட்டிய பேரறிவாளன், சிவராசனின் பட்டியலில் நிச்சயமாக இருந்திருக்கமாட் டார். முன்னாள் அஇஅதிமுக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனும் அப்படிப்பட்ட ஓர் ஆதரவாளர்தான், அவர் வெளிப்படையாகவே புலிகளுக்கு நிதி உதவி செய்திருக்கிறார்.

சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவர் கார்த்தி கேயன், இந்தக் கடினமான விசாரணையைத் தான் சிறப்பாகக் கையாண்டு, குற்றவாளிகளைக் கண்டுபிடித்த தாகவும் தொடர்ந்து சொல்லி வருகிறார். அவர்கள் எல்லோரும் குற்றவாளிகள்தான் என்றும், இருப்பினும் உச்சநீதிமன்றம் அவர்களை விடுவித்தாலும், அந்த தீர்ப்பைத் தான் மதிப்பதாகவும் கூறுகிறார். இந்தக் கொலையில் ஒரு சர்வதேச பிணைப்பும் இருக்குமா என்று ஜெயின் கமிஷன் அறிக்கை சந்தேகம் தெரிவித்த பிறகு 1998இல் Multi-Disciplinary Monitoring Agency (MDMA), உளவுத்துறை, றோ போன்ற பல நிறுவனங்க ளோடு ஒரு குழு தொடங்கப்பட்டது. அது என்ன ஆனது என்று கார்த்திகேயன் போன்ற அதிகாரிகள் மட்டுமல்ல, இந்தியாவை ஆளும் பெரிய தலைவர்கள் கூட ஏன் கேட்கவில்லை என்பது யாருக்கும் தெரியாது. ஓகஸ்ட் 2020இல் ராஜீவ் காந்தி கொலைக்குற்றவாளிகள் பற்றிய தொடர் வழக்குகளில் ஒரு வழக்கின் விசாரணை யின்போது, சென்னை உயர்நீதிமன்றத்தில் வாதிட்ட மத்திய அரசு வழக்கறிஞர், இந்த ஏழு பேரும் வெறும் அம்புகள்தான் என்றும், அம்புகளை எய்த வில் எது என்று (MDMA) கண்டுபிடிக்கும் என்றும் கூறினார். பேரறிவாளனின் ஒரு மனுவை விசாரித்த உச்சநீதிமன் றம், (MDMA) அறிக்கைகளை சமர்பிக்குமாறு உத்தர விட்டது. சர்வதேச கோணத்தை ஆராய்வதற்காக இந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணிலின் மீள்வருகை



♦ வீரகத்தி தனபாலசிங்கம்



தென்னிலங்கை மக்களின் அமோக ஆதரவுடன் மீண்டும் ஆட்சியதிகாரத்துக்கு வந்த ராஜபக்சாக்கள் இரண்டரை வருட காலத்திற்குள் அதே மக்களினால் படுமோசமாக வெறுக்கப்பட்டு அபகீர்த்திக்குள்ளாக்கப்படுவார்கள் என்று யாருமே எதிர்பார்க்காததைப் போன்றே கடந்த பொதுத் தேர்தலில் முற்றாக துடைத்தெறியப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்க மீண்டும் விரைவாக நாட்டின் பிரதமராக பதவியேற்கின்ற சூழ்நிலையொன்று உருவாகும் என்றும் எவரும் எதிர்பார்த்திருக்கவே மாட்டார்கள். அவர் பிரதமராக வந்திருப்பதை அதிசயம் என்பதா அல்லது விசித்திரம் என்பதா என்று புரியவில்லை.

விக்கிரமசிங்க ஏற்கெனவே ஐந்து தடவைகள் பிரதமர் பதவியை வகித்திருக்கிறார். இது அவருக்கு ஆறாவது தடவை. பிரதமராக அவர் ஒருபோதுமே முழு பதவிக்காலத்துக்கும் பதவியில் நீடிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

1977 ஜூலை பொதுத்தேர்தலில் ஜே.ஆர். ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி 5ல்6 பெரும்பான்மை ஆசனங்களைக் கைப்பற்றி பிரமாண்டமான வெற்றியை பெற்றபோது கொழும்புக்கு வெளியே பியகம தொகுதியில் இருந்து தெரிவுசெய்யப்பட்டு விக்கிரமசிங்க முதற்தடவையாக மிகவும் இளவயதில் பாராளுமன்றம் வந்தார். அன்று தொட்டு இன்றுவரை தொடர்ச்சியாக சுமார் 45 வருடங்கள் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துவரும் அவர் 2020 ஆகஸ்ட் பொதுத்தேர்தலில் தனது கட்சி ஒரு ஆசனத்தைக் கூட கைப்பற்றமுடியாமல் போனதையடுத்து ஒரு பத்து மாதங்கள் பாராளுமன்றத்துக்கு வரவில்லை. அத்தேர்தலில் நாடளாவிய ரீதியில் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த வாக்குகளின் அடிப்படையில் கிடைக்கக்கூடியதாக இருந்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தை பயன்படுத்தி கடந்தவருடம் ஜூனில் மீண்டும் அவர் பாராளுமன்றத்துக்கு வந்தார்.



தனது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி தன்னந்தனியனாக பாராளுமன்றத்தில் இருக்கும் விக்கிரமசிங்கவும் கூட ஒரு ராஜபக்சவை ஜனாதிபதியாகக்கொண்ட அரசாங்கத்தில் பிரதமராக பதவியேற்கவேண்டிவரும் என்று நினைத்துப் பார்த்திருக்கமாட்டார். ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த பிரதமர் ராஜபக்சாக்களினால் ராஜபக்சாக்களுக்காகவே பிரத்தியேகமாக உருவாக்கப்பட்ட சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றக் குழுவின் தயவுடன் பதவியில் இருக்கிறார். அந்த பாராளுமன்றக்குழு அவரது சகல விருப்பங்களுக்கும் ஆதரவுதரும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. இதை கடந்தவாரம் பாராளுமன்றத்தில் உப சபாநாயகர் தெரிவின்போது தெளிவாகக் காணக்கூடியதாக இருந்தது.

சிறிலங்கா சுதந்திர கட்சி பாராளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் சியம்பலப்பிட்டிய உப சபாநாயகர் பதவியைத் துறந்ததையடுத்து காலியாக இருந்த அப்பதவிக்கு பெண்மணியொருவர் தெரிவுசெய்யப்படவேண்டும் என்ற தனது விருப்பத்தை விக்கிரமசிங்க முன்கூட்டியே வெளிப்படுத்தியிருந்தார். எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தனது ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான ரோஹனி கவிரத்னவை அந்த பதவிக்கான வேட்பாளராக முன்னிறுத்தினார். பொதுஜன பெரமுனவும் கூட திருமதி ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே போன்ற ஒரு பெண்மணியை களமிறக்கக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்,அந்த கட்சி ராஜபக்சாக்களின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான அஜித் ராஜபக்சவை (இவர் ராஜபக்சாக்களின் உறவினர் அல்ல) வேட்பாளராக நியமித்தது.

கடந்த செவ்வாய்கிழமை சபையில் நடைபெற்ற இரகசியவாக்கெடுப்பில் அஜித் ராஜபக்ச 109 வாக்குகளைப் பெற்று உப சபாநாயகராக தெரிவானார். உப சபாநாயகர் தெரிவில் பொதுஜன பெரமுன பாராளுமன்றக் குழு நடந்துகொண்ட விதம் பிரதமருக்கு காண்பிக்கப்பட்ட முதன்முதலான எச்சரிக்கைச் சமிக்ஞையாகும். அவரின் கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் எல்லாவற்றையும் தாங்கள் முழுமையாக ஆதரிக்கப்போவதில்லை என்பதை அவர்கள் வெளிக்காட்டியிருக்கிறார்கள்.

பிரதமரும் கூட கடந்தவாரம் பாராளுமன்றத்தில் ஒரு தடவை உரையாற்றியபோது தான் எந்தத் தரப்பில் இருக்கிறாரோ என்று தெரியவில்லை என்று சுவாரஸ்யமாக குறிப்பிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கிளர்ந்தெழுந்திருக்கும் நாட்டு மக்களினால் பதவியில் இருந்து விலகி வீட்டுக்கு போகுமாறு கேட்கப்படும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நெருக்கடியை சமாளிக்கமுடியாமல் வேறு வழியின்றியே விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தார். மற்றைய

> ரணில் விக்கிரமசிங்க தான் பிரதமராக பதவியேற்பதற்கு முன்வைத்த நிபந்தனை, கொழும்பு காலிமுகத்திடல் “கோட்டா கோகம“ போராட்டக்காரர்கள் மீது கைவைக்கக்கூடாது என்பதேயாகும். அவரும் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்ற நிபந்தனையையே முன்வைத்ததைக் கவனிக்கவேண்டும்.

ராஜபக்சாக்களின் சம்மதமின்றி அவர் இதைச் செய்திருக்கமாட்டார் என்று நம்பலாம். பிரதமராக பதவியேற்க முன்வருமாறு சஜித் பிரேமதாசவை அழைத்தபோது அவர் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்பது உட்பட சில நிபந்தனைகளை முன்வைத்ததால் விக்கிரமசிங்கவை நியமிக்கத் தீர்மானித்ததாக ஜனாதிபதி கூறியிருந்தார். விக்கிரமசிங்க பதவியேற்கப்போகிறார் என்று தெரிந்ததும் பிரேமதாச ஜனாதிபதிக்கு அவசரமாக கடிதம் அனுப்பி பிரதமராவதற்கு தயாராயிருப்பதாக அறிவித்தார். தனது நிபந்தனைகளையும் அவர் தளர்த்தியிருந்தார். அதாவது ஜனாதிபதி கோதாபய உடனடியாக பதவிவிலகத் தேவையில்லை, குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் பதவிவிலக இணங்கவேண்டும் என்று பிரேமதாச கேட்டார். ஆனால் அதற்குள் காலம் கடந்துவிட்டது.

பிரேமதாச பிரதமர் பதவியை ஏற்கத் தயாராகிறார் என்பதை அறிந்துகொண்டுதான் விக்கிரமசிங்க ஜனாதிபதியுடன் அவசரமாக பேச்சுவார்த்தை நடத்திதான் பிரதமராவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டி ருக்கக்கூடும் என்று நம்ப இடமிருக் கிறது. பிரதமராக பிரேமதாச நியமிக்கப் பட்டால் ஜனாதிபதி கோட்டாபய தனது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னரேயே பதவி விலக வேண்டிவந் தால் பதில் ஜனாதிபதியாக பிரேமதா சவே பதவியேற்க வேண்டியிருக்கும். இது ராஜபக்சாக்களுக்கு ஏற்புடையதாக இருக்காது. ஆனால், விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்கக் கூடிய சாத்தியத்துக்கு ராஜபக்சாக்கள் எதிரானவர்களாக இருக்கமாட்டார்கள். இந்த விடயமும் பிரதமர் நியமனத்தில் செல்வாக்கு செலுத்தியிருக்கக்கூடும் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அரசியலமைப்பு ஏற்பாடுகளின் பிரகாரம் ஜனாதிபதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவைப் பெறக்கூடிய வாய்ப்பைக்கொண்டவராக தான் கருதும் ஒருவரையே பிரதமராக நியமிக்க வேண்டும். ஆனால், தனியொரு ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினராக பாராளுமன்றத்தில் இருக்கும் விக்கிரமசிங்கவை எந்த அடிப்படையில் கோட்டாபய நியமித்தார் என்ற கேள்வியும் எழுந்தது. அந்த நியமனத்தில் ஒரு தார்மீகமுறை இருக்கவில்லை. ஆனால் அரசியலுக்கும் தார்மீக நெறிமுறைக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதே நியதியாகிப்போய்விட்டது.

பொதுஜன பெரமுன பாராளுமன்றக் குழு ராஜபக்சாக்களின் கட்டுப்பாட்டில் தான் முழுமையாக இருக்கிறது. தங்களின் விருப்புவெறுப்புக்களுக்கு ஏற்ப அவர்களை ஆட்டிப்படைக்கலாம் என்ற உறுதியான நம்பிக்கையிலேயே ராஜபக்சாக்கள் இருக்கிறார்கள். அதனால் ராஜபக்சாக்களின் வியூகங்களுக்கு இசைவான முறையில் தான் அந்த பாராளுமன்றக்குழுவின் ஆதரவும் ஒத்துழைப்பும் பிரதமர் விக்கிரமசிங்கவுக்கு கிடைக்கும் என்று நம்பலாம்.பிரதமர் அனுபவம் நிறைந்த--விவேகமான அரசியல்வாதி. அவரை பணயம் வைத்து தங்களது காரியத்தை ராஜபக்சாக்கள் சாதிப்பது என்பதும் பெரிதாக சாத்தியமாகாது. அவர் தனக்கென்றும் தனது கட்சிக்கென்றும் ஒரு அரசியல் நிகழ்ச்சிநிரலை மனதில் வைத்திருக்காமல் பிரதமராக அதும் இலங்கையில் முன்னென்றும் இல்லாத வகையிலான அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்குள் பிரதமராக முன்வந்திருப்பாரா?

பிரதமராக தான் பதவியேற்பதானால், ஜனாதிபதி கோட்டாபய குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் பதவிவிலக இணக்கம் தெரிவிக்க வேண்டும் என்பது பிரேமதாசவின் நிபந்தனையாக இருந்த அதேவேளை, இடைக்கால அரசாங்கத்தில் தாங்கள் பங்கேற்பதாக இருந்தால் ஜனாதிபதி பதவி விலகவேண்டும் என்று ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி. பி.)வின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க நிபந்தனை விதித்தார். ஆனால், விக்கிரம சிங்க தான் பிரதமராக பதவியேற்பதற்கு முன் வைத்த நிபந்தனை ஜனாதிபதி கோட்டாபய கொழும்பு காலிமுகத் திடல் “கோட்டா கோகம“ போராட்டக் காரர்கள் மீது கைவைக்கக்கூடாது என்பதேயாகும்.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

# பிரதமர் ரணிலின் மீள்வருகை



(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மூவரும் ஜனாதிபதி பதவிவிலக வேண்டும் என்ற கோரிக்கையைத்தான் முன்வைத்தார்கள். ஆனால் அதைக் கேட்ட முறையில் வேறுபாடு இருக்கிறது. ஜனாதிபதியை உடனடியாக விலகிவீடு செல்லவேண்டும் என்று கோரியே காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் ஒரு மாதத்துக்கும் அதிகமான காலமாக ஜனாதிபதி செயலகத்தை முற்றுகையிட்டிருக்கிறார்கள். அதனால் நிச்சயமாக கோதாபய கடும் ஆத்திரம் அடைந்திருப்பார். அவரிடமே நேரடியாக அந்த போராட்டக்காரர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்கக்கூடாது என்று வலியுறுத்துகிற இராஜதந்திரம் ரணிலைத் தவிர வேறு யாருக்கு வரும் என்று ருவிட்டர் சமூகத் தளத்தில் ஒரு பத்திரிகையாளர் செய்த பதிவை இங்கு வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள கட்டுரையாளர் விரும்புகிறார்.

கோட்டாகோகம போராட்டக்காரர்களின் நலன்களைக் கவனிக்க பிரதமர் விக்கிரமசிங்க கொழும்பு மேயர் றோசி சேனநாயக்க தலைமையில் குழுவொன்றையும் கடந்தவாரம் நியமித்திருந்தார். அந்தக்குழு காலிமுகத்திடலுக்கு சென்று போராட்டக்காரர்களுடன் பேசியதாகவோ அவர்களின் நலன்கள் தொடர்பில் ஏதாவது நடவடிக்கை எடுத்ததாகவோ இதுவரை செய்தி வரவில்லை. என்றாலும், ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் வீட்டுக்கு போகுமாறு கோரும் போராட்டக்காரர்களின் நலன்களைக் கவனிக்க குழுவொன்றை பிரதமர் நியமிப்பது உலகில் வேறு எங்கும் நடக்காத ஒரு விசித்திரம். மக்கள் போராட்டங்கள் தணிந்துவிட்டால் ஜனாதிபதி ராஜபக்சவை கையாளுவது தனக்கு கஷ்டமாக இருக்கும் என்பது பிரதமருக்கு நன்கு தெரியும். இது உண்மையில் பிள்ளையையும் கிள்ளி தொட்டிலையும் ஆட்டுகிற வேலைதான்.

விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டதை நாடளாவிய மக்கள் எழுச்சியின் அடையாளச்சின்னமாக விளங்கும் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் வரவேற்கவில்லை. ஆனால், பிரதமர் நியமனத்துக்கு பிறகு அந்த போராட்டத்தின் "சூடு" சற்று தணிந்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகையொன்று கடந்தவாரம் ஆசிரிய தலையங்கத்தில் குறிப்பிட்டதைக் காணக் கூடியதாக இருந்தது. அது எந்தளவுக்கு சரியான மதிப்பீடு என்று கணிப்பதற்கு சில நாட்கள் வேண்டும்.



இது இவ்வாறிருக்க, நாம் முக்கியமான ஒரு விடயத்தை இங்கு அவதானிக்கவேண்டும். பொருளாதார நெருக்கடியை இதற்கு மேலும் சமாளிக்கமுடியாத தறுவாய்க்கு மக்கள் வந்துவிட்டார்கள். ஆனால் பிரதமரும் மத்திய வங்கி ஆளுநர் மற்றும் பொருளாதார நிபுணர்களும் அடுத்த சில மாதங்கள் மேலும் கூடுதலான கஷ்டங்களை மக்கள் அனுபவிக்க வேண்டிவரப்போகிறது என்று தொடர்ச்சியாக அபாயச்சங்கு ஊதிக்கொண்டிருக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடியை ஓரளவுக்கேனும் தணித்து மக்களுக்கு அத்தியாவசிய உணவு வகைகளும் மருந்துப்பொருட்களும் எரிபொருட்களும் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் துரிதமாக செய்யப்படவேண்டும். அதை நோக்கியே தான் செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் வெளிநாடுகளிடமும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமும் உதவிகளை கோருவதாகவும் பிரதமர் அறிவித்தார். அவருக்கு சர்வதேச ரீதியில் அதுவும் குறிப்பாக மேற்குநாடுகள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறது என்பது உண்மை. ஆனால் அந்த செல்வாக்கினால் இன்றைய மாறிவரும் சர்வதேச புவிசார் அரசியல் நிலைவரங்கள் மத்தியில் எந்தளவுக்கு எமது மக்களின் கஷ்டங்களை தணிப்பதற்கு உதவமுடியும் என்பது முக்கியமான கேள்வி.

இடைக்கால அரசாங்கத்தையோ அல்லது தேசிய அரசாங்கத்தையோ அமைத்து தங்களின் பொருளாதார இடர்பாடுகளைத் தணிப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் என்பது மக்களில் பெரும்பாலானோரின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. இது ஒன்றுதான் விக்கிரமசிங்க ஆறுதலடையக்கூடிய ஒரு அம்சமாகும்.

நாட்டு மக்கள் மூன்று வேளை உணவு உண்பதை உறுதிப்படுத்தவும் நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்கவுமே தான் பதவியை ஏற்றதாக கூறும் பிரதமர் கடந்தவாரம் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் ஆற்றிய உரை எமது பொருளாதாரம் வீழ்ந்து கிடக்கும் அதலபாதாளத்தை படம்பிடித்துக்காட்டியது. தியாகங்களுக்கு தயாராகுமாறு நாட்டு மக்களை அவர் வேண்டவும் தவறவில்லை.

மக்களின் மனநிலையை உணர்ந்த காரணத்தினால்தான் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிரணி கட்சிகளும் பிரதமர் நாட்டை மீட்டெடுக்க முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை தர முன்வந்திருக்கின்றன. சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தி, மைத்திரிபால சிறிசேனவின் சிறிலங்கா சுதந்திர கட்சி மற்றும் ராஜபக்ச அரசாங்கத்தில் இருந்து வெளியேறிய பத்து கட்சிகள் சகலதுமே ஒத்துழைப்பை வழங்க உறுதியளித்துள்ளன. ஜே. வி.பி. மாத்திரமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பதவி விலகாத நிலையில் எந்த ஒத்துழைப்பையும் வழங்கத் தயாரில்லை என்று திட்டவட்டமாக அறிவித்தது.ஜே.வி.பி.யைப் பொறுத்த வரை, விக்கிரமசிங்கவை ராஜபக்சாக் களின் பதிலாளாகவே (Proxy) பார்க்கிறது.

இந்த கட்டுரை எழுதப்பட்டுக் கொண்டிருக்கும் வரை, விக்கிரமசிங்கவின் கீழான புதிய அமைச்சரவை முழுமையாக நியமிக்கப்படவில்லை. முன்னர் அரசியல்வாதிகள் அமைச்சர் பதவிகளுக்காக ஒருவர்மேல் ஒருவராக ஏறி முண்டியடிப்பார்கள். தற்போதைய மக்கள் எழுச்சி புகட்டியிருக்கும் பாடங்கள் காரணமாக அரசியல்வாதிகள் பதவிகளை ஏற்க கடுமையாக தயங்குகிறார்கள். ஜனாதிபதியும் பிரதமரும் அமைச்சர் பதவிகளை வழங்க தேடுதல் வேட்டை நடத்துகிறார்கள் போலும்.

இதனிடையே, மக்களின் அபகீர்த்திக்குள்ளாகி ஒதுங்கியிருக்கும் ராஜபக்சக்களை பாதுகாக்கவே விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டிருக்கிறார்என்ற குற்றச்சாட்டும் எழுகிறது. நாட்டை பொருளாதார இடர்நிலையில் இருந்து மீட்டு மக்களின் வாழ்க்கைச் செலவைக் குறைக்கவே தான் பிரதமர் பொறுப்பை ஏற்றதாகவும் ராஜபக்சாக்களையோ அல்லது வேறு எந்த அரசியல் குடும்பத்தையுமோ பாதுகாப்பது தனது வேலை அல்ல என்றும் அவர் திரும்பத் திரும்பக் கூறுகிறார். என்றாலும் அவர் பொறுப்பில் அரசாங்கம் இருப்பது தங்களைப் பொறுத்தவரை பாதுகாப்பானது என்ற உணர்வு ராஜபக்சாக்களுக்கு இருக்கிறது என்பது நாட்டு மக்களுக்கு தெரியும்.

ராஜபக்சாக்களை பாதுகாக்க அல்ல, பொருளாதார அனர்த்தத்தில் இருந்து நாட்டை மீட்கவே தான் பொறுப்பேற்றதை பிரதமர் தனது நடவடிக்கைகள் மூலமாக நிரூபிக்கவேண்டும் என்று வெளிநாட்டு பத்திரிகைகள்கூட ஆசிரிய தலையங்கங்களில் வலியுறுத்திக் கேட்டிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அந்த அளவுக்கு அவருக்கும் ராஜபக்சாக்களுக்கும் இடையிலான உறவு குறித்த சந்தேகங்கள் பலமானவையாக இருக்கின்றன என்பதை மறுக்கமுடியாது.

பிரதமர் பதவியேற்ற பிறகு கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள அவரது குடும்பத்துக்கு நெருக்கமான பிரபலமான பௌத்தவிகாரைக்கு சென்று வழிபட்டுவிட்டு வெளியே வந்த விக்கிரமசிங்கவிடம் " தனியொரு பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு பிரதமர் பதவியைப் பொறுப்பேற்றதில் நெறிமுறை இருக்கிறதா" என்று பிரிட்டிஷ் ஊடகவியலாளர் ஒருவர் கேட்டார்.

அதற்கு பதிலளித்த பிரதமர்," முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்ரன் சேர்ச்சில் 1939 ஆம் ஆண்டில் நான்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவை வைத்துக்கொண்டே உலகமகா யுத்த நெருக்கடி காலத்தில் தேசிய அரசாங்கத்தை அமைத்தார். நானும் நெருக்கடி காலத்தில் அதையே செய்கிறேன். முதலில் உங்கள் வரலாற்றை படியுங்கள் " என்று சற்று கோபத்துடன் கூறினார்.

சேர்ச்சில் தலைமையில் பிரிட்டன் உலகப்போரின்போது சோவியத் யூனியனுடனும் அமெரிக்காவுடனும் கூட்டணி அமைத்து ஹிட்லரின் நாஜி ஜேர்மனியை தோற்கடித்தது. ஆனால் உலகப்போரின் முடிவில் 1945 ஆண்டில் நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலில் சேர்ச்சில் தோல்வி கண்டார் என்பது வரலாறு.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்க பிரதமர் முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகளை இன்றைய இக்கட்டான நிலையில் விமர்சிப்பதில் ஒரு காலப்பொருத்தமான நிதானம் தேவை என்ற ஒரு அபிப்பிராயம் அவதானிகள் மத்தியில் இருக்கிறது. ஆனால், பொருளாதார இடர்பாடுகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்த நாட்டு மக்களின் போராட்டங்கள் ஒரு அரசியல் அமைதிப்புரட்சியின் பரிமாணங்களை எடுத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு உட்பட பெருவாரியான அரசியல் கோரிக்கைகளை முன்வைத்து " முறைமை மாற்றம்" (System Change)ஒன்றை வேண்டி நிற்கும் நிலையில், அவற்றுக்கு வழிசமைக்கக்கூடிய ஒரு தலைவராக விக்கிரமசிங்கவை நோக்கமுடியுமா என்பது இன்னொரு முக்கியமான கேள்வி.



# இலங்கை நெருக்கடி:

## பணத்தை அச்சிட்டால் பொருளாதார பிரச்னை முடிந்துவிடுமா?

**விக்னேஷ் அ.**

இலங்கை பிரதமராக சமீபத்தில் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க மே 16ஆம் திகதி நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் நிலைமையைச் சாமளிக்க ரூபாய் தாள்கள் அச்சிடப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதார நெருக்கடியால் நடந்த போராட்டங்கள் காரணமாக, மஹிந்த ராஜபக்ஷ பதவியில் இருந்து விலகியபின் பதவியேற்ற ரணில் தற்போதைய சிக்கல்களுக்கு என்ன தீர்வைத் தரப்போகிறார் என்று இலங்கை மட்டுமல்லாது உலகமே எதிர்நோக்கியுள்ள சூழலில் இவ்வாறு கூறியுள்ளார்.

“விருப்பமில்லாமலேனும் இந்த நிலையில் பணத்தை அச்சிட்டுவதற்கான அனுமதியை வழங்க வேண்டியுள்ளது. அரச ஊழியர்களின் இந்த மாதத்திற்கான சம்பளத்தை செலுத்துவதற்காகவும், அத்தியாவசிய பொருட்கள் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு செலவிட வேண்டியுள்ளமைக்காகவும் இந்த தீர்மானத்தை எடுக்க வேண்டியுள்ளது,” என்று கூறியுள்ளார்.

### பணத்தை அதிகம் அச்சடித்தால் என்னாகும்?

ஒரு நாட்டில் பொருளாதார நெருக்கடி, வறுமை போன்ற சூழல் நிலவுகிறது என்றால் அந்நாட்டு அரசிடமும், மக்களிடமும் போதிய பணம் இல்லை என்று பொருள்.

அப்படியானால், ரணில் விக்ரமசிங்கவின் அறிவிப்பில் கூறியுள்ளத்தைப் போல அந்தந்த நாடுகள் தங்கள் நாட்டின் நாணயத்தை (கரன்சி) அச்சிடுவதன் மூலம் ஏன் தங்கள் பிரச்னைகளையும், மக்களின் பிரச்னைகளையும் தீர்த்துக் கொள்ளக் கூடாது?

அதற்கும் ரணில் ஆற்றிய உரையிலேயே பதில் உள்ளது.

“பணம் அச்சிடுகின்றமையினால், ரூபாய் மதிப்பு மேலும் வீழ்ச்சி அடையும் என்பதை நாம் நினைவில் வைத்துக கொள்ள வேண்டும்,” என்று ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளதே அந்த பதில்.

அதாவது அளவுக்கும் அதிகமாக ஒரு நாடு தனது பணத்தை அச்சிடுகிறது என்றால் அந்த பணத்தின் மதிப்பு வீழ்ச்சியடையும். வீழ்ச்சி என்றால் நாணய மதிப்பில் உண்டாகும் வழக்கமான சரிவல்ல. இந்த சரிவு ஏன் உண்டாகிறது என்று பாப்போம்.

ஒரு பொருளை வாங்க வேண்டும் அல்லது ஒரு சேவையைப் பெற வேண்டும் என்றால் அந்தப் பொருளையோ சேவையையோ பெறுபவர் அதற்கான பணத்தைக் கொடுக்க வேண்டும். அதுதான் அதன் “விலை” என்று கூறப்படுகிறது.

ஒரு நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொருளின் உள்ளடக்க விலை (தயாரிப்புச் செலவு), சந்தையில் அதற்கு இருக்கும் தட்டுப்பாடு, வேறு நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் அதே பொருளின் விலை, வாடிக்கையாளர்களின் வாங்கும் திறன், அரசு விதிக்கும் வரி, சந்தைப்படுத்தலுக்கு உள்ளாகும் செலவு உள்ளிட்ட பல காரணிகள் அந்த விலையை நிர்ணயிக்கின்றன.

ஒரு வேளை பணம் அச்சடிக்கப்பட்டு எல்லோருக்கும் வழக்கப் படுகிறது என்றால், சந்தையில் இருக்கும் பொருட்கள் அல்லது சேவைகள் ஆகியவற்றைப் பெற எல்லோரிடத்திலும் பணம் இருக்கும். ஆனால், எல்லோருக்கும் கொடுக்கும் அளவுக்கு அந்தப் பொருள் இருக்காது. அதாவது சந்தையில் அதன் தட்டுப்பாடு அதிகரிக்கும்.




இப்போது அந்தக் குறிப்பிட்ட பொருளை வாங்க விரும்புவோரில் யார் அதிகம் பணம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் அது கிடைக்கும். எல்லோரிடத்திலும் பணம் இருக்கிறது என்பதால் எல்லோருமே இப்போது அதிகமான பணத்தைக் கொடுக்க முன் வருவார்கள். ஒருவரைவிட ஒருவர் அதிகம் பண கொடுத்து வாங்க முயல்கிறார், அவரைவிட இன்னொருவர் அதிகம் பணம் தர முயல்கிறார், மற்றோருவர் இன்னும் கூடுதலாகப் பணம் கொடுக்க முயல்கிறார் என்றால் அப்பொருளின் விலை அதிகரித்துக்கொண்டே போகும்.

இறுதியாக யாரிடத்திலும் மேலதிக பணம் இல்லை எனும் சூழல் வரும் போது அப்பொருளின் விலை பன் மடங்கு அதிகரித்திருக்கும். எடுத்துக்காட்டாக நீங்கள் வழக்கமான பணப்புழக்கம் இருந்த நேரத்தில், ஒரு கிலோ அரிசியை 50 ரூபாய் கொடுத்து வாங்கினீர்கள் என்று வைத்துக்கொள்வோம்.




பணம் அச்சடிக்கப்பட்டு விநியோகம் செய்தபின் அதன் விலை 100 ரூபாயாகவோ, 500 ரூபாயாவோ, ஏன் 5,000 ரூபாயாகவோ கூட உயர்ந்திருக்கலாம். முன்னர் நீங்கள் ஒரு விலை கொடுத்து எவ்வளவு அரிசி வாங்கினீர்களோ, இப்போது அதே அளவு அரிசியை வாங்க கூடுதலாக விலை கொடுக்க வேண்டி உள்ளது. இதை வேறு சொற்களில் சொல்வதானால், பணத்துக்கு மதிப்பு குறைந்துவிட்டதால் கூடுதலான பணத்தை அதே ஒரு கிலோ அரிசிக்குச் செலவிடுகிறீர்கள்.

இந்த விலை உயர்வுதான் பொருளாதாரத்தில் “பணவீக்கம்” என்று அழைக்கப்படுகிறது.

ஒரு பொருளை உற்பத்தி செய்ய அல்லது சேவையை வழங்கத் தேவையான மூலப் பொருட்களின் விலையேற்றம், பொருட்களுக்கான தட்டுப்பாடு அதிகரிப்பு, அரசின் நிதிக் கொள்கை உள்ளிட்டவை இந்தப் பணவீக்கத்தை முடிவு செய்யும்.

### ஒரு நாடு எவ்வளவு பணத்தை அச்சடிக்க வேண்டும்?

மஹிந்த ராஜபக்ஷ பிரதமராகப் பொறுப்பேற்றதும் இலங்கை அரசு எடுத்த ஒரு நிதிக் கொள்கை முடிவு ஒன்று அவ்வாறு பணவீக்கத்தின் மீது ஓர் எதிர்மறை தாக்கத்தை உண்டாக்கியது.

“புதிய பணவியல் கோட்பாடு” (Modern Monetary Theory) எனும் ஒரு பொருளாதாரக் கோட்பாட்டின்கீழ் பணத்தை அச்சடிக்க முடிவு செய்தது மஹிந்த ராஜபக்ஷ அரசு.

ஒரு நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, மத்திய வங்கியிடம் இருக்கும் அந்நியச் செலாவணி (foreign exchange), தங்கம், வெள்ளி போன்றவற்றின் கையிருப்பு, பற்று வரவு சமநிலை (ஒரு நாடு வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டிய பணத்துக்கும் வெளி நாடுகள் அதற்கு செலுத்தவேண்டிய பணத்துக்கும் இடையிலான வேறுபாடு - இதை ஆங்கிலத்தில் “Balance of Payments” என்கிறார்கள்) ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு எவ்வளவு பணத்தை அச்சிடுவது என்பதை ஒவ்வொரு நாடும் முடிவு செய்யும்.

ஆனால், புதிய பணவியல் கோட்பாட்டில் மேற்கண்ட காரணிகள் பரிசீலிக்கப்படுவதில்லை. அரசு தாம் விரும்பும் அளவு பணத்தை அச்சிட்டுக் கொண்டாலும் பொருளாதாரத்துக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்று இந்தக் கோட்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இந்த கோட்பாட்டை பெரும்பாலான பொருளியல் அறிஞர்கள் ஏற்பதில்லை.

இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை பிழையான முடிவு என்கிறார் கொழும்பு பல்கலைக்கழக பொருளியல் துறையின் மூத்த விரிவுரையாளர், கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி.

அமெரிக்க டாலர் போன்ற நாணயங்கள் அப்பணத்தை வெளியிடும் நாடுகளில் மட்டுமல்லாது வெளி நாடுகளிலும் புழக்கத்தில் உள்ளன. எனவே, அமெரிக்கா கூடுதலான பணத்தை அச்சிட்டு புழக்கத்தில் விட்டாலும், அமெரிக்காவுக்குள் பணவீக்கம் ஏற்படாது. ஆனால், இந்திய ரூபாய், இலங்கை ரூபாய் போன்ற நாணயங்கள் அவற்றை வெளியிடும் நாடுகளுக்கு உள்ளேயே புழக்கத்தில் உள்ளன. எனவே, உற்பத்தி பெருக்கம், டாலர் கையிருப்பு போன்றவை இல்லாமல் கூடுதலாகப் பணத்தை அச்சிட்டால் பணவீக்கம் ஏற்படும் என்று கூறுகிறார் முருகேசு கணேசமூர்த்தி.

### கடந்த காலத்தின் கசப்பான எடுத்துக்காட்டுகள் - ஜிம்பாப்வே, வெனிசுவேலா

அவர் குறிப்பிடுவதைப் போல இத்தகைய நிலை கடந்த காலங்களில் வேறு சில நாடுகளிலும் நடந்துள்ளன.

கடந்த 2018ம் ஆண்டு வெனிசுவேலா பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டபோது, அந்நாட்டு அரசு பொருளாதாரக் காரணிகளைப் பொருட்படுத்தாமல் பணத்தை அச்சடித்ததால் பணவீக்கம் உண்டாகி அதன் நாணயமான பொலிவாரின் மதிப்பு அதீதமாக சரிந்தது.

அதன் எதிரொலியாக பணவீக்கம் 2018 நவம்பரில் அதற்கு முந்தைய 12 மாதங்களுக்கு முந்தைய விலை நிலவரத்துடன் ஒப்பிடும்போது 13,00,000 வீதம் ஆனது என்று அந்நாட்டின் நாடாளுமன்றமான “தேசிய சபை” சொன்னது. அதாவது ஒரு பொலிவாருக்கு விற்ற பொருளில் விலை 12 மாதங்களில் 13 லட்சம் பொலிவார் ஆனது. இது அதீத பணவீக்கம் (hyperinflation) எனப்படுகிறது. இதன்பின்னர் அதன் நாணயத்தில் இருந்து ஐந்து பூஜ்ஜியங் களை நீக்கியது அந்நாட்டு அரசு. அதா வது 5 லட்சம் பொலிவாரின் மதிப்பு 5 பொலிவார் என்று மாற்றப்பட்டது.

அதற்கு முன்னர் ஜிம்பாப்வேயிலும் இதே போல நடந்துள்ளது. ஜூலை 2008ல் பொருளாதார சரிவின் அதல பாதாளத்தில் ஜிம்பாப்வே இருந்தபோது அங்கு நிலவிய வருடாந்திர பணவீக்க விகிதம் 23,10,00,000 வீதம் (23 கோடியே 10 லட்சம் சதவிகிதம்.) அதே ஆண்டு நவம்பர் மாதம் பண வீக்கம் 80,00,00,00,000 வீதம் (எட்டாயிரம் கோடி சதவிகிதம்) ஆனது. கிட்டத்தட்ட ஜிம்பாப்வே டாலர் மதிப்பிழந்து போய் வெற்றுக்காகிதம் ஆனது என்றே சொல்லலாம்.

இதன் பின்னர் 2009ஆம் ஆண்டு தென்னப்பிரிக்க ராண்ட், அமெரிக்க டாலர் உள்ளிட்டவற்றை அந்நாடு பணப்புழக்கத்துக்காகப் பயன்படுத்தியது. (18 ஆம் பக்கம் பார்க்க...)

# பெற்றோல் தட்டுப்பாட்டால் திண்டாடும் யாழ். குடாநாடு

**நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு வடக்கு மாகாணத்தையும் திண்டாட வைத்துள்ளது. எரிபொருள் பற்றாக்குறையால் தமது அன்றாடல் அலுவல்கள் பாதிக்கப்படும் அளவுக்கு யாழ். குடா நாட்டு மக்கள் அதனை நம்பியிருக்கின்றனர்.**

**பெற்றோல் தட்டுப்பாடு அவர்களது அன்றாட வாழ்க்கையில் பெரும் பகுதியைப் பாதிக்கின்றது. எரிபொருள் தட்டுப்பாட்டால் தாம் எதிர்நோக்கும் இன்னல்களை அவர்கள் அன்றாடம் கொட்டித் தீர்க்கிறார்கள்.**

**இது குறித்து குடாநாட்டு மக்கள் வெளிப்படுத்திய கருத்துகள் இவை....!**



அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்

## இன்று ஒரு விலை நாளை ஒரு விலை



**பகீரதன்,
அச்சுவேலி.**

யாழ்ப்பாணத்தில் எரிபொருளைப் பெறுவதற்கு எரிபொருள் நிலையத்துக்குச் சென்றால் எரிபொருள் இல்லை என்கிறார்கள். இந்த நிலைமை நீண்ட காலமாக தொடர்கின்றது.

இரண்டு மூன்று நாட்களுக்கு பெற்றோல் தட்டுப்பாடு, பெற்றோல் இல்லை. பெற்றோலுக்கு நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டாம் என்று தற்போது கூறுகின்றார்கள்.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில்தான் இவ்வாறு எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலை காணப்பட்டது என்றால் தொடர்ந்து ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களும் இதைத்தான் செய்து கொண்டிருக்கின்றன.

சாதாரணமாக கூலித் தொழிலுக்குச் சென்று தனது வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் ஒரு சாதாரண குடும்பத்தின் நிலை எவ்வாறு இருக்கும்?

தற்போது பொருளாதார நெருக்கடியில் உள்ள நாட்டை ஒரு ஸ்திரத்தன்மையான நிலைமைக்கு கொண்டு செல்லவேண்டிய நிலை காணப்படுகின்றது.

அன்றாடம் மூன்று வேளை சாப்பிடக்கூட வசதியில்லாத நிலை காணப்படுகின்றது. பெற்றோலுக்கே இவ்வாறான நிலை காணப்படுகின்றது என்றால் அத்தியாவசிய பொருட்களின் நிலை எவ்வாறு மாற்றமடைய போகின்றது எனத் தெரியவில்லை.

நாடு பூராகவும் தமக்குத் தேவையான எரிபொருளை பெறுவதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டிய நிலை காணப்படுகின்றது. எத்தனையோ பேர் நீண்ட வரிசையில் காத்திருந்து மயக்கமடைந்து இறந்துள்ளார்கள். ஆனால் அரசாங்கம் எரிபொருளை பெறுவதற்கு ஒரு திட்டத்தை வகுக்கலாம். அதனையும் அரசாங்கம் செய்யத் தவறிவிட்டது

தற்போது குறிப்பாக யாழ்ப்பாணத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் அத்தியாவசியப் பொருட்களின் விலையை எடுத்துக்கொண்டால் இன்று ஒரு விலை, நாளை ஒருவிலை என்ற நிலையே காணப்படுகின்றது.

ஆனால் வசதி படைத்தவர்கள் தமக்குத் தேவையான பொருட்களை எவ்வளவு பணம் கொடுத்தும் வாங்க தயாராக இருக்கின்றார்கள். ஆனால் ஏழை மக்கள்தான் இதனால் பாதிக்கப்படுகின்றார்கள். இதனால் பாதிக்கப்படும் ஏழை மக்களுக்கு இந்த அரசாங்கம் எதனை பெற்றுக் கொடுக்கப் போகின்றது? ஒரு மானிய அடிப்படையில் நிவாரண உதவிகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளவேண்டும்.

அதேபோல எரிபொருள் பிரச்னைக்கும் இந்த அரசு ஒரு மானிய திட்டத்தை கொண்டு வரலாம் அல்லது ஒரு குடும்ப அட்டைக்கு விநியோகித்தால் இந்த நிலைமை ஏற்படாது. எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் வசதி படைத்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு பெற்றோல் நிரப்பப்படுகிறது. இவை நிறுத்தப்படவேண்டும்.

இதற்கு தகுந்த அதிகாரிகள் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை?

## கோட்டாவை காப்பாற்றவே ஆட்சிக்கு வந்துள்ளார் ரணில்



**எஸ்.ராகுலன்,
கொக்குவில்.**

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலையானது வடக்கு-கிழக்கில் உள்ளவர்களை பெரிதும் பாதிக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் கொக்குவிலில் நான் வசித்து வருகின்றேன். இங்கே பெற்றோல் தட்டுபாடு பெரும் பிரச்னையாக காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இருக்கு இருக்கு என்பார்கள். நீண்ட வரிசையில் காத்திருந்து எரிபொருள்நிரப்பு நிலையத்துக்கு அண்மையில் நகரும்போது அது முடிந்துவிட்டது, நாளைதான் எரிபொருள் வரும் என்பார்கள்

நாங்கள் நீண்ட நேரமாக வரிசையில் காத்திருந்து தள்ளித் தள்ளித் தள்ளி ஓட்டோ அல்லது வாகனங்களை கொண்டு சென்று பெற்றோல் பெறும் நிலை காணப் படுகின்றது.

கோட்டாபய- மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்காலத்தில் தான் இந்த எரிபொருள், பெற்றோல் பெறுவதில் சிரமம் இருந்தது என கூறினார்கள். தற்போது ரணில் விக்கிர மசிங்க பொறுப்பேற்றவுடன் பொருளாதாரம் நிமிர்த்தப் படும் என்றார்கள். ரணில் விக்கிரமசிங்க வந்த பின்னர் நாடு மிகவும் மோசமான நிலைக்கு சென்றுள்ளது என நாங்கள் ஊடகங்கள் ஊடாக பார்க்கக்கூடியதாக இருக்கின்றது

கையிருப்பில் பெற்றோல் இல்லை. பொருளாதார பிரச்னை, டொலர் இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது பெற்றோலின் விலையும் அதிகரித் துள்ளதால் அடிமட்ட மக்கள் எவ்வாறு வாழ்வது? இனிவரும் காலங்களில் அடிமட்ட மக்கள் இங்கே வாழ்வது மிகவும் கஷ்டம். கோட்டாபாய-ரணில் இணைந்த அரசாங்கம் தற்போது ஆட்சி அமைத்துள் ளது. மஹிந்த ராஜபக்ஷவையும் கோட்டாபயவையும் காப்பாற்றவே ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்துள்ளார்.


அவர் நாட்டின் பொருளாதார நெருக்கடியை நிமிர்த்தவும் இல்லை.

அரசியல் ரீதியான தீர்வையும் பெற்றுத் தரப் போவதில்லை. பொருளாதார ரீதியில் இந்த நாட்டை மிகவும் படுகுழியில் கொண்டு செல்வதற்கு ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுள்ளார்.

தற்போது இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளா தார நெருக்கடியிலிருந்து மீள்வதாக இருந்தால் இந்தியா அல்லது வேறு நாடுகள் தலையிட்டு பொருளாதார ரீதியில் உதவும் பட்சத்தில்தான் எமது நாடு பொருளா தார ரீதியில் முன்னோக்கிச் செல்ல முடியும். ஆனால் குறிப்பாக வடக்கு-கிழக்கு பகுதிகளில் உள்ள மக்களின் நிலையை யோசித்துப் பாருங்கள். கடந்த 30 வருட காலமாக நாங்கள் யுத்தத்தின் மூலம் பல அழிவுகளைச் சந்தித்த காலத்திலும் நாங்கள் நீண்ட வரிசையில் நின்றுதான் அத்தியாவசியப் பொருட்களையும் பெற்றுக் கொண்டோம். அதே நிலைமை தற்போது நிலை உருவாகி உள்ளது.

வடக்கு-கிழக்கு மக்கள் இங்கே வாழமுடியாத நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. பாணின் விலை அதிகரித்துள் ளது. கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளது. அனைத்துப் பொருட்களின் விலைகளும் ஒவ்வொரு நாளும் அதிகரித்த வண்ணம் உள்ளன. இவ்வாறான நிலையில் சாதாரண அடிமட்ட ஒரு பிரஜை எவ்வாறு தனது வாழ்வாதாரத்தை மேற்கொள்வது என்பது கேள்விக்குறியே.

## எரிபொருள் வழங்கலுக்கு ஒரு பொறிமுறை தேவை



**கேதீஸ்,
அல்லைப்பிட்டி.**

காலையிலிருந்து நீண்ட நேரமாக பெற்றோல் பெறுவதற்கு வரிசையில் நிற்கின்றோம். ஆனால் இன்னும் பெற்றோல் கிடைக்கவில்லை.

அன்றாடம் நாங்கள் வாகனத்தை ஓடினாலே எமது வாழ்வாதாரத்தை முன்னெடுக்க முடியும்.

ஆனால் எமது வாகனத்தை இயக்குவதற்குரிய எரிபொருளைப் பெறுவதற்கு நாங்கள் அதிக நேரத்தை செலவழிக்கவேண்டியுள்ளது.

இன்று காலை 6.30 மணியிலிருந்து இந்த நீண்ட வரிசையில் நிற்கின்றேன். இன்னும் வாகனங்களுக்கு எரிபொருள் நிரப்பவில்லை. மோட்டார் சைக்கிளுக்கு மாத்திரம் எரிபொருள் நிரப்புகிறார்கள். மஹிந்த- கோட்டா அரசில் இந்த எரிபொருள் பிரச்னை காணப்பட்டது என்று பார்த்தால் தற்போதும் அந்த பிரச்னை தீர்ந்ததாக இல்லை.

எனினும் எமது அன்றாட வாழ்வாதாரத்தை நாங்கள் மேற்கொள்வதற்கு எமக்கு பெற்றோல் கிடைப்பதற்குரிய வழிவகைகளை அரசாங்கம் மேற்கொண்டால் அது பெரிய உதவியாக இருக்கும்.

நாங்கள் வாகனத்தைச் செலுத்தாவிட்டால் நமக்கு அன்றைய ஊதியம் கிடையாது. நாங்கள் அன்றாட உண வைச் சமைப்பதற்குகூட முடியாத நிலை காணப்படு கின்றது.

எனவே தற்போதைய அரசாங்கம் பொது மக்களுக்கு தேவையான எரிபொருளை இலகுவாக பெறுவதற்குரிய பொறிமுறை ஒன்றை உருவாக்கி பொதுமக்கள் இலகுவில் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெறுவதற்கு ஆவண செய்ய வேண்டும்.



# விக்ரம் 3ஆம் பாகத்தில் சூர்யா

1986ஆம் ஆண்டு கமல் நடித்து வெளியான படம் விக்ரம். இந்த படத்தின் இரண்டாம் பாகமாக தான் தற்போது விக்ரம் படம் உருவாகி உள்ளதாக புது தகவல் வெளியாகியுள்ளது.

லோகேஷ் கனகராஜ் இயக்கியுள்ள இந்த படத்தில் கமல்ஹாசன் ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரியாக நடித்துள்ளாராம். அவருடன் விஜய் சேதுபதி, பகத் பாசில், நரேன், காளிதாஸ் ஜெயராம் ஆகியோருடன் சூர்யாவும் ஒரு கௌரவ வேடத்தில் நடித்துள்ளார். விக்ரம் படத்தில் கமலின் மகனாக சூர்யா நடித்திருக்கிறார். கதைப்படி படத்தின் உச்சக்கட்டத்தில் தான் சூர்யா வருகிறாராம், அவரின் அறிமுகம் விக்ரம் 3 படடத்துக்கான முன்னோட்டமாக இருக்கும் என கேன்ஸ் பட விழாவில் ஒரு பேட்டியில்



கமல் கூறியுள்ளார்.

# ஆதி - நிக்கி திருமணம்!

தமிழ், தெலுங்கில் கதாநாயகனாகவும், வில்லனாகவும் நடித்து வருபவர் ஆதி. இவருக்கும் தமிழில் முன்னணி நடிகைகளில் ஒருவராக இருக்கும் நிக்கி கல்ராணிக்கும் வியாழக்கிழமை சென்னையில் தெலுங்கு முறைப்படி திருமணம் நடைபெற்றது.

இந்தத் திருமணத்தில் இருவரின் நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள் மட்டுமே கலந்து கொண்டனர்.

ஆதி தற்போது தமிழ், தெலுங்கில் உருவாகி வரும் "தி வாரியர்" படத்தில் வில்லனாக நடித்துள்ளார். நிக்கி கல்ராணி மலையாளத்தில் இரண்டு படங்களில் நடித்து வருகிறார்.

# ஓகஸ்டில் "கோப்ரா"

விக்ரம் பல வேடங்களில் நடித்துள்ள படம் "கோப்ரா". நாயகியாக ஸ்ரீநிதி ஷெட்டி நடிக்க, முக்கிய வேடத்தில் கிரிக்கெட் வீரர் இர்பான் பதான் நடித்துள்ளார். அதிரடி சண்டை படமாகவும், விஞ்ஞான பூர்வ படமாகவும் உருவாகியுள்ளது.

கொரோனாவால் இரண்டு ஆண்டுகளாக உருவாகி வந்த இந்தப் படம் சமீபத்தில் முடிந்தது. படப் பிடிப்பு முடிந்து மற்றப் பணிகள் நடந்து வருகின்றன. முதலில் இந்த மாதம் படத்தை வெளியிடுவதாக இருந்தனர். ஆனால், பட பணிகள் முடியவில்லை. இந்நிலையில், ஓகஸ்ட் 19இல் படம் வெளியாகும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# குறும்படத்தில் பாவனா



நடிகை பாவனாவுக்கு அவரின் சொந்த வாழ்வில் நடந்த சில கசப்பான நிகழ்வுகளால் சில காலம் சினிமாவில் நடிக்காமல் இருந்தார்.

தற்போது தி சர்வைவல் என்ற குறும்படத்தில் நடித்திருக்கிறார். இது மார்பக புற்றுநோய் குறித்த விழிப்புணர்வு படம். இதில் பாவனா குத்துச் சண்டை வீராங்கணையாக நடித்திருக்கிறார். மார்பு புற்றுநோயல் பாதிக்கப்பட்ட ஒரு பெண் அதனை எதிர்த்து போராடி எப்படி வாழ்க்கையிலும், குத்துச் சண்டையிலும் வெற்றி பெறுகிறார் என்பதுதான் படத்தின் கதை.

# மௌனம் காக்கும் ஜோ

ஜோதிகாவின் 50ஆவது படமான 'உடன் பிறப்பே' படத்தை இரா.சரவணன் இயக்கினார். ஜோதிகாவின் 51ஆவது படத்தை இயக்கப் போகும் இயக்குநர் யார் என்பது இப்போது வரை புதிராக இருக்கிறது. இயக்குநர்கள் பொன். பார்த்தீபன், பிரியா, கௌதம் ராஜ், பிரெட்ரிக், ஒளிப்பதிவாளர் ரவிவர்மன் எனப் பலரிடமும் கதை கேட்ட ஜோதிகா, ஏழு மாதங்களாக அமைதியாகத் தான் இருக்கிறார்.








## திரைப்படம் - நெஞ்சுக்கு நீதி

**இயக்கம் - அருண்ராஜா காமராஜ்**
**இசை - திபு நினன் தாமஸ்**
**நடிப்பு - உதயநிதி ஸ்டாலின், தன்யா, ஷிவானி**

ஹிந்தியில் 2019ஆம் ஆண்டு வெளிவந்து விமர்சகர்களிடம் வரவேற்பைப் பெற்ற "ஆர்டிகிள் 15" படத்தின் தமிழ் மீளுருவாக்கம் தான் இந்த "நெஞ்சுக்கு நீதி".

"ஓர் குடிமகனுக்கு சாதி, மதம், இனம், பாலினம், பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையில் அடிப்படை உரிமைகள் மறுக்கப்படக் கூடாது," என்பதுதான் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் இடம் பெற்றுள்ள "ஆர்டிகிள் 15".

நாடு சுதந்திரம் அடைந்து இத்தனை வருடங்களான பிறகும் உள்ள சாதிய ஏற்றத் தாழ்வுகளை இந்த "நெஞ்சுக்கு நீதி" படத்தில் சொல்லியிருக்கிறார்கள். சில வருடங்களுக்கு முன்பாக தமிழகத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது பொள்ளாச்சி பாலியல் வழக்கு. அந்தக் காரணத்தால் இந்தப் படத்தின் கதைக் களமாக பொள்ளாச் சியை தெரிவு செய்துள்ளார்கள்.

பொள்ளாச்சி வட்டத்துக்கு உட்பட்ட ஒரு கிராமத்தில் தலித் சிறுமி கள் மூவர் காணாமல் போகின்றனர். அதில் இரண்டு சிறுமிகளின் உடல்கள் மரத்தில் தொங்கவிடப்பட்டுள்ளது. ஒரு சிறுமி என்ன ஆனார் என்பது தெரியவில்லை. கூடுதல் பொலிஸ் கண்காணிப்பா ளராக பொறுப்பேற்கும் உதயநிதி ஸ்டாலின் அந்த வழக்கை விசா ரிக்க ஆரம்பிக்கிறார்.

அவரை அந்த வழக்கை விசாரிக்க விடாமல் மேலதிகாரியான பொலிஸ் கண்காணிப்பாளரும், கீழதிகாரியான உப கண்காணிப்பா ளரும் அழுத்தம் கொடுக்கிறார்கள். மூன்று சிறுமிகளின் விவகாரத் தில் அமைச்சரின் அக்கா மகன் சம்பந்தப்பட்டிருப்பார் என்ற சந்தேகத் தில் விசாரிக்க ஆரம்பிக்கிறார் உதயநிதி. குற்றவாளி யார் என்பதை கண்டுபிடித்தாரா, காணாமல் போன சிறுமியை கண்டுபிடித்தாரா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஒரு த்ரில்லர் படமாகக் கொடுக்க வேண்டிய கதையை சாதிய பாகுபாடுகள் இங்கு எப்படி இருக்கிறது என்பதைக் காட்டும் படமாகக் கொடுக்க நிறையவே சிரத்தை எடுத்துள்ளனர். அந்த சிறுமிகளின் வழக்கு விசாரணையையும் மீறி சாதிய பிரச்னைகளைத்தான் திரைக்கதை, வசனத்தில் அதிகம் சேர்த்திருக்கிறார்கள். ஒரு மீளுருவாக்கப் படமாகப் பார்க்க முடியாத அளவு நம் ஊர் படமாகக் கொடுத்திருக்கிறார் இயக்குநர் அருண்ராஜா காமராஜ். அதற்காக அவர் தேர்ந்தெடுத்த கதைக்களம், கதாபாத்திரங்களுக்கான நடிகர்கள் அவருக்கு கூடுதல் தாக்கத்தைக் கொடுத்திருக்கிறது.

உதயநிதி ஸ்டாலினின் அரசியல் விம்பத்தை எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்தளவு வசனங்கள் மூலம் அவருடைய கதாபாத்திரத்தை உயர்த்தி வைக்க முயற்சித்திருக்கிறார்கள் இயக்குநரும் வசனகர்த்தாவும். இதற்கு முந்தைய திரைப்படங்களில் கலகலப்பாகவே பார்த்த உதயநிதியை இந்தப் படத்தில் உணர்வுபூர்வமான கதாபாத்திரத்தில் பார்ப்பதற்கு புதிதாக இருக்கிறது. வெளிநாட்டிலேயே படித்து வளர்ந்தவருக்கு, இந்த ஊரின் சாதிய அமைப்பு மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அதைப் புரிந்து கொண்டு சட்டம் தன் கடமையைச் செய்யும் என சட்டத்துக்காகப் பாடுபடும் நேர்மையான அதிகாரியாக நடித்திருக்கிறார் உதயநிதி. அவர் பேசும் வசனங்கள் மூலமே அவருடைய நாயகத் தன்மைக்கு மீறி விடுகின்றது. . அது யதார்த்தத்தை மீறி போய்விடுவதுடன் படத்தின் தரத்தையும் கீழிறக்கிவிடுகிறது.

உதயநிதியின் மனைவியாக தன்யா ரவிச்சந்திரன். கணவன், மனைவி இருவரும் தொலைபேசியில் உரையாடும் காட்சிகள்தான் படத்தில் இருக்கிறது. கடைசிக்கட்டத்தில் மட்டும் நேரில் வருகிறார் தன்யா. காணாமல்போன தன் தங்கைக்காகப் போராடும் கதாபாத்தி ரத்தில் ஷிவானி ராஜசேகர். அதில், யதார்த்த தோற்றத்தில் முத்திரை பதிக்கிறார்.

உப கண்காணிப்பாளர் கதாபாத்திரத்தில் சுரேஷ் சக்கரவர்த்தி. தவறு செய்பவர்களுக்கு துணையாக இருக்கும் ஒரு கதாபாத்திரம். கடைசியில் அவருடைய கதாபாத்திரத்தில் வரும் ஒரு திருப்புமுனை நாம் சிறிதும் எதிர்பாராத ஒன்று. உதவி பொறுப்பதிகாரியாக இள வரசு. உதயநிதிக்கு பிறகு படத்தில் அதிகம் வரும் கதாபாத்திரங்கள். படத்தின் முக்கிய வில்லனாக அரசியல்வாதியாக படத்தின் தயாரிப் பாளர்களில் ஒருவரான ராகுல்.

திபு நினன் தாமஸ் இசையில் கதையுடன் ஒட்டிய இரண்டு பாடல்கள். பின்னணி இசையில் தனி கவனம் செலுத்தியிருக்கிறார். திரையில் அழகான பொள்ளாச்சியை மட்டுமே பார்த்த நமக்கு பொள்ளாச்சியின் மற்றொரு பக்கத்தைக் காட்டியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் தினேஷ் கிருஷ்ணன். படம் கொஞ்சம் மெதுவாக நகர்வதை எடிட்டர் கவனித்திருக்கலாம்.

இது வழக்கமான ஒரு மசாலா திரைப்படமல்ல. தலித் மக்களின் பிரச்னைகளையும், அவர்களை சுற்றிய அரசியலைப் பற்றியும் பேசும் ஒரு படம். ஒரு பக்கம் தலித் மக்கள் படித்து முன்னேறியிருக்கி றார்கள் என்பதையும் காட்டுகிறார்கள், மற்றொரு பக்கம் அவர்கள் இன்னமும் நசுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் காட்டுகிறார்கள். எந்த ஒரு சாதியையும் விமர்சிக்கக்கூடாது என சொல்லும் படத்தில் மேல் சாதி என்று குறிப்பிடப்படுபவர்களையும் விமர்சிப்பது சரியா என்ற கேள்வியும் எழுகிறது. எதை நோக்கி படத்தைக் கொண்டு செல்வதில் ஒரு குழப்பம் தெரிகிறது. ஒரே ஒரு மையப்புள்ளியை மட்டும் நோக்கி திரைக்கதை நகர்ந்திருந்தால் இந்தப் படம் நெஞ்சுக்குள் இடம் பெறும் படமாக அமைந்திருக்கும்.

# உத்வேகத்தை இழந்தால் விளையாட மாட்டேன்!

## விராட் கோலி



எப்பேற்பட்ட வீரனுக்கும் தன் வாழ்வில் சறுக்கல் ஏற்படும். தன் கட்டுப்பாட்டை மீறி அவன் வீழ்ந்து கொண்டிருப்பான். 'உன் காலம் முடிந்துவிட்டது' என உலகம் அவனை அதிகம் விமர்சிக்கும். ஆனால், அக்குறிப்பிட்ட அத்தியாயத்தைக் கடக்கும்போது அந்த வீரனின் நெஞ்சுரம் தன் மீதான விமர்சனங்களுக்கு பதிலடி கொடுக்கும். அதுதான் அவனை மாவீரனாகவும் மாற்றுகிறது. விராட் கோலியும் அப்படியான ஒரு காலகட்டத்தில் இருக்கிறார்.

அரைச்சதங்கள் தொடர்ந்து அடித்துவந்தாலும் மிக நீண்ட காலமாக காத்திருப்பில் இருந்து வருகிறது அந்த 71ஆவது சதம். இது ஒருபுறம் இருக்க இருபது - 20 உலகக்கிண்ணத் தோல்வி, வெள்ளைப்பந்து போட்டி தொடங்கி டெஸ்ட் வரை தலைமையிலிருந்து விலகியது என கடந்த ஓராண்டு காலமாகவே மனதளவிலும் பல சவால்களையும் அவர் சந்திக்க வேண்டியிருந்தது. போதாக்குறைக்கு 2008ஆம் ஆண்டுக்குப் பிறகு தற்போது தான் மிக மோசமான ஒரு ஐ. பி.எல் ஆட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் கோலி. ஆனால் வியாழக்கிழமை கோலி ஆடிய அந்த ஒற்றை இனிங்ஸ் மேற்சொன்ன அனைத்தையும் மறக்கடித்து விட்டன. நீண்ட நாட்களுக்கு அப்படியான அபரிமித ஆட்டம் அவரிடம் வெளிப்பட்டது. கோலி போன்ற வீரர்களுக்கெல்லாம் தகுதியற்ற ஆட்டம், சிறந்த தகுதி யான ஆட்டம் என்ற இரண்டுக்குமான இடைப்பட்ட தூரம் ஒரேயோர் இனிங்ஸ்தான். எனவே இது தொடரும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும்.

ஆனால், இந்த எண்கள், விமர்சனங்கள் என எதுவும் தன்னை ஒருபோதும் பாதிக்காது என வியாழக்கிழமை போட்டிக்கு முன்பாகவே கூறிவிட்டார் கோலி. தன் தற்போதைய தகுதி கிரிக்கெட்டில் இருந்து சின்ன இடைவெளி குறித்த தன் பார்வை என பலவற்றை குறித்தும் அவர் பேசியும் நிலையில் அதில் இருந்து சிறிய பகுதி இதோ,

" 2014ஆம் ஆண்டோடு ஒப்பிடுவதை நான் ஏற்கமாட்டேன் "

இதற்குமுன் இப்படியான ஒரு சரிவை கோலி கடைசியாக சந்தித்தது 2014ஆம் ஆண்டில்தான். ஆனால், அதோடு தன் தற்போதைய தகுதியை ஒப்பிடுவது தன்னால் ஏற்கமுடியாது என கூறுகிறார் கோலி. "அந்த இங்கிலாந்து சுற்றுப்பயணத்தில் ஒரே குறிப்பிட்ட மாதிரியிலேயே தொடர்ந்து ஆட்டமிழந்து வந்தேன். நான் சரியாக விளையாடவில்லை என்று அப்போது எனக்கே தெரிந்தது. அதனால் கடுமையாக உழைத்து அதில் இருந்து மீண்டு வர என்னால் முடிந்தது. ஆனால், அது மாதிரியான நிலைமை தற்போது இல்லை. மேலும் குறிப்பிட்ட ஒன்றில் தான் நான் பலவீனமாக உள்ளேன் என்றும் கைகாட்ட முடியாது.

எனவே இதில் இருந்து நான் விரைவில் மீண்டு வந்துவிட முடியும். ஆனால், இதை நான் அவ்வளவு எளிதில் கடந்துவிட மாட்டேன். விளையாட்டு வீரனுக்குத் தேவையான முக்கிய பண்புகளை இதுபோன்ற காலத்தில்தான் என்னால் கற்றுக்கொள்ள முடியும். என் ஆட்டத்தை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டிய பரிணாம காலம் இது. இவ்விளையாட்டை விளையாட வேண்டும் என்று எனக்குள் இருக்கும் உத்வேகம் அப்படியேதான் உள்ளது. அது என்றைக்கும் என்னை விட்டுப் போகாது. எப்போது போகிறதோ, அன்று இவ்விளையாட்டை நான் விளையாட மாட்டேன்" என்று கூறியுள்ளார்.

இடைவெளி இல்லாமல் தொடர்ந்து கிரிக்கெட் விளையாடுவதே கோலியின் இந்த தகுதியின்மைக்கு பலராலும் சொல்லப்படும் காரணம். எனவே போட்டிகளில் விளையாடுவதில் இருந்து சிறிது காலம் ஓய்வெடுத்து விட்டு வருமாறு தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. அதில், மிக முக்கியமானவர் முன்னர் தலைமை பயிற்சியாளரான ரவி சாஸ்திரி. " கடந்த ஆறேழு வருடங்களாக என் கிரிக்கெட் வாழ்க்கையில் மிக நெருக்கமாக பயணித்தவர் ரவி சாஸ்திரி. கிரிக்கெட்டில் இருந்து சிறிய இடைவெளியும் யோசிக்க வேண்டிய விஷயம்தான். ஒரு விடயத்தில் 100 சதவிகிதம் பங்களிப்பைத் தர இயலாதபோது அதைச் செய்யாமல் இருப்பதே நல்லது. எனவே சிறிய ஓய்வெடுப்பதில் எந்தத் தவறும் இல்லை. இதுகுறித்து ராகுல் டிராவிட் மற்றும் இந்திய கிரிக்கெட் சபையிடம் ஆலோசித்து எனக்கும் அணிக்கும் சிறந்த ஒரு முடிவை விரைவில் எடுப்பேன்." என்றார்.

எதிர்வரும் ஆசிய கிண்ணம் மற்றும் டி20 உலகக் கிண்ணத்தை வெல்வதே தன்னுடைய தற்போதைய இலக்காக கூறும் கோலி இப்படி கூறி முடித்தார் "அணிக்காக எதையும் செய்ய நான் தயாராக உள்ளேன் " - என்றார்.

# வாக்கை காத்த டோனி!



"சென்னைக்கு நன்றி சொல்வதற்காக அடுத்த தொடரில் நிச்சயம் விளையாடுவேன் என சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் டோனி தெரிவித்துள்ளார். ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிரான நாணயச் சுழற்சியின்போது இதனை அவர் பகிர்ந்துள்ளார்.

நடப்பு ஐ. பி. எல். தொடரில் முதல் சுற்றோடு வெளியேறுகிறது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி. கடந்த தொடரில் சம்பியன் பட்டம் வென்ற சென்னை அணிக்கு இந்தத் தொடர் ஏனோ அத்தனை சுலபமாக அமையவில்லை. அணித் தலைவர் மாற்றம் போன்ற சிக்கல்களை எதிர்கொண்டது சென்னை. நேற்று ராஜஸ்தான் அணிக்கு எதிராக நடப்பு தொடரில் சென்னை அணி தனது கடைசி லீக் போட்டியில் விளையாடியது.

நாணயச் சுழற்சியின்போது அடுத்த தொடரில் சென்னை அணியின் தலைவர் டோனி விளையாடுவாரா? என்ற கேள்வி அவரிடம் கேட்கப்பட்டது. இந்த போட்டிக்கு முன்னதாகவே டோனி, அடுத்த தொடரில் விளையாடுவாரா என்ற கேள்வி எழுந்திருந்தது. ரசிகர்கள் அந்த கேள்வியை எழுப்பி இருந்தனர்.

"நிச்சயம் அடுத்த தொடரில் விளையாடுவேன். ஏனெனில், சென்னைக்கு நன்றி சொல்லாமல் இருந்தால், அது நியாயமானதாக இருக்காது. இதற்கான காரணம் ரொம்பவே இலகு. சென்னை ரசிகர்களுக்கு அப்படி செய்வது நன்றாக இருக்காது" என சொல்லி சென்னை அணியின் ரசிகர்களின் நெஞ்சில் பாலை வார்த்துள்ளார் டோனி.

கடந்த நவம்பரில் சென்னையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் டோனி பங்கேற்றார். அப்போது தான் விளையாடும் கடைசி இருபது -20 போட்டி சென்னையில்தான் என தெரிவித்திருந்தார். இருந்தாலும் அது அடுத்த ஆண்டா அல்லது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு உள்ளான காலகட்டத்திலோ நடக்கலாம் என புதிர் போடும் வகையில் சொல்லியிருந்தார் டோனி.

கொரோனா காரணமாக நடப்பு தொடருக்கான போட்டிகள் அனைத்தும் மும்பை, கொல்கத்தா மற்றும் அஹமதாபாத் நகரங்களில் நடைபெறுகிறது. சென்னையில் ஐபிஎல் போட்டி எதுவும் நடத்தப்படவில்லை. அதனால் சொன்னபடி தனது வாக்கை டோனி காப்பாற்றியுள்ளார். இதனை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

# மூன்றாவது அணியாக ராஜஸ்தான்

ஐ. பி. எல்லில் நேற்றுமுன்தினம் நடந்த ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை வீழ்த்தி ராஜஸ்தான் றோயல்ஸ் மூன்றாவது அணியாக இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது.

68வது லீக் போட்டியில் சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது சென்னை.

மொயின் அலி இந்தப் போட்டியில் நட்சத்திர துடுப்பாட்ட வீரராகக் கலக்கினார். 57 பந்துகளில் 13 பௌண்ட்ரிகள் மற்றும் 3 சிக்ஸர்களுடன் 93 ஓட்டங்கள் குவித்தார். அவருக்கு அடுத்தபடியாக டோனி 26



ஓட்டங்கள் சேர்த்தார். இறுதியில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் சென்னை அணி 6 விக்கெட் இழப்புக்கு 150 ஓட்டங்கள் குவித்தது.

எளிய இலக்கை நோக்கி களமிறங்கிய ராஜஸ்தான் அணிக்கு தொடக்கம் கொடுத்த ஜெய்ஷ்வால் சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தினார். கடந்த சில போட்டிகளாக சிறப்பாக விளையாடி வரும் அவர் இந்தப் போட்டியில் அரைச்சதம் கடந்து 59 ஓட்டங்கள் குவித்து பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு அடுத்து வந்த மற்ற துடுப்பாட்ட வீரர்கள் ஜொலிக்கவில்லை. எனினும், அஸ்வின் நிலைத்து நின்று ஆடினார்.

அவரின் ஆட்டத்தால் வெற்றி இலக்கை நெருங்கியது ராஜஸ்தான். இரண்டு பந்துகளில் ஓர் ஓட்டம் தேவை என்ற போது பந்துவீச்சாளர் அதை அகலப் பந்தாக வீச ராஜஸ்தான் அணி வெற்றிபெற்றது. இந்த வெற்றி மூலம் ராஜஸ்தான்றோயல்ஸ் மூன்றாவது அணியாக இறுதிச் சுற்றுக்கு தகுதிபெற்றுள்ளது. அஸ்வின் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்கள் எடுத்தார்.

# மயிலங்கூடலூர் பி நடராசன் (ஆடலிறை)

## ஒரு நினைவுக்குறிப்பு!

- நா.சபேசன் -

என்னுடைய “குரு”மயிலங்கூடலூர் பி நடராசன் கடந்த 12ம் திகதி யாழ்ப்பாணம், நாயன்மார்கட்டிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார். நீண்ட காலமாக நோயுற்றிருந்த அவர் காலமாகும் போது எண்பத்திரண்டு வயது. இளவாலைக்கும் கீரிமலைக்குமிடையில் இருக்கும் மிகச் சிறிய கிராமமான மயிலங்கூடலை ஈழத்து இலக்கிய உலகில் நிரந்தரமாய் பதிந்துவிட்ட நடராசன் ஆசிரியரை எனது மிகச் சிறிய வயதிலிருந்தே அறிவேன். அவரது“கூடலகம்” வீட்டைச் சூழ எனது தந்தை வழி உறவினர்கள் இருந்ததும், அருகிலிருக்கும் வைரவர் ஆலயம் தாய்வழி உறவினர்கள் சிலருக்கு குல தெய்வமாக இருப்பதும் மயிலங்கூடலுக்கு அடிக்கடி செல்ல காரணங்கள். மயிலங்கூடல் வைரவர் ஆலயத்தின் பொங்கல், மடையின் போது ஆசிரியரை கண்டுள்ளேன்.

கிழக்கிலங்கையிலிருந்து மாற்றலாகி 1971ஆண்டின் பிற்பகுதியில் அவர் மகாஜனக் கல்லூரிக்கு விஞ்ஞான ஆசிரியராக வந்தபோது, நான் மூன்றாம் வகுப்பில் கற்றுக் கொண்டிருந்தேன். அவரது வயதையொத்த ஆசிரியர்கள் லோங்ஸோடும் சேர்ட்டோடும் பாடசாலைக்கு வருகிற போது, விஞ்ஞான ஆசிரியரான அவ ரது நஷனலும் வேட்டியும்- அதை அவர் அணிந்திருக்கும் நேர்த்தியும் தனித்துவமாக காட்டின.

ஆசிரியராக வந்தவுடனேயே பாடசாலையின் சகல நடவடிக்கைகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். பழைய மாணவர் சங்கத்தின் இணைச் செயலாளராக ஆ சிவநேசச் செல்வனோடு இணைந்து, பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாவை மூன்று நாட்கள் கொண்டாடியதிலும், ஈழத்தின் பெறுமதிமிக்க இலக்கிய மலர்களிலொன்றாக கருதப்படும் “பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு மலரை” வெளிக் கொணர்ந்ததிலும் ஆசிரியரின் பெரும் உழைப்பும் இருந்தது. இதே காலத்தில் கவிஞர் நுஃமானோடு இணைந்து மஹாகவி நூல் வெளியீட்டு குழுவிலும் பணியாற்றினார். மகாஜனாவின் சின்னப்பா இல்லப் பொறுப்பாசிரியராகவும் இருந்தார்.

அமரர் ச விநாயகரத்தினம் ஆசிரியரின் ஆலோசனையில் “தமிழின்பம்” எனும் கையெழுத்து சஞ்சிகை உருவானது. நான் ஆசிரியராக தெரியப்பட்டேன். என்னோடு நண்பர்கள் அ சிவலிங்கம், சுரேஷ், நந்தகுமார், சசீகரன், சிவானந்தன் முதலானோர் பங்களித்தார்கள். சிறிது காலத்திலேயே அதன் பொறுப்பாசிரியராக மயிலங்கூடல் நடராசன் அவர்கள் பொறுப்பேற்றார். மாணவர்களின் ஆக்கபூர்வமான சிறு முயற்சியையும் இவரளவு பெரிதாக ஊக்கப்படுத்தும் வேறொரு ஆசிரியரை நான் சந்தித்ததில்லை. எங்களை உற்சாகப் படுத்தி, வளப்படுத்திய குரு அவர்.

1977ம் ஆண்டின் இறுதியில் தொண்டமனாற்றில் அமைந்திருந்த வெளிக்கள நிலையத்தின் பொறுப்பாளராக பொறுப்பேற்றுச் சென்றபோதும், பின்னர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி சென்றபோதும் எங்களுடனான தொடர்புகளை கிரமமாகப் பேணி



வந்தார்.

1980ம் ஆண்டு மார்ச் மாதத்தில் அளவெட்டி ஜெயா அச்சகத்தில் புதுசு வின் முதலாவது இதழை கையிலெடுத்துக் பார்த்துக் கொண்டிருந்தபோது, முன் வீதியால் ஆசிரியர் போய்க் கொண்டிருந்தார். ஓடிச்சென்று அவரை அழைத்தோம். எங்கள் நால்வரையும் கண்டதும் மகிழ்வோடு திரும்பி வந்தார். அவரிடம் புதுசு வின் முதலிதழைக் கொடுத்தோம். பூரிப்போடு வாங்கிப் பார்த்தவர் “இதனை வெளியிட்டு

### புலம்பெயர் மடல்

விட்டீர்களா?“ எனக் கேட்டார்.

“இல்லை சேர், உங்களிடம் தான் முதற் பிரதியைத் தந்திருக்கிறோம்“ என்றோம். தனது பொக்கற்றில் கைவிட்டு, பஸ்ஸுக்கு தேவையான பணத்தை வைத்துக் கொண்டு மிகுதிப் பணம் அனைத்தையும் தந்து முதற் பிரதியை பெற்றுக் கொண்டார். எங்களை ஆசீர்வதிக்க சகல தகுதிகளையும் கொண்டிருந்த ஆசிரியரிடம் திட்டமிடாமலே முதற் பிரதியைக் கையளித்தது ஒரு பேறு.

இலக்கியத்தில் சிறுவர் பாடல்கள் அவரது சிறப்புத் துறையெனலாம். அவரது சிறுவர் பாடல்கள் இரண்டு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ஆனால், அவரது முயற்சிகளை சிறுவர் பாடல்களுக்குள் மட்டும் குறுக்கிவிட முடியாது. ஈழத்தில் வெளிவந்த முக்கியமான நூல்கள் பலவற்றின் பின்னணியில் அவர் இருந்திருக்கிறார். ஈழ விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான கவிதைத் தொகுப்பான “மரணத்துள் வாழ்வோம்” தொகுதியின் தொகுப்பாளர்களில் ஒருவர் என்பதும், பத்மநாப ஐயரின் “தமிழியல்“ வெளியீட்டை உருவாக்கியவர்களில் ஆசிரியரும் ஒருவராகும் என்பது இங்கு பதியப்பட வேண்டியது.

மகாஜனக் கல்லூரியின் நூற்றாண்டையொட்டி நாங்கள் உருவாக்கிய வெளியீட்டு முயற்சிக்குப் பொறுப்பேற்று, பாவலர் துரையப்பா பிள்ளையின் “சிந்தனைச் சோலை” (மறுபிரசுரம்), ”நினைவுப் பேருரைகள்“, “ மகாஜனன் கவிதைகள்“ என்று மூன்று வெளியீடுகள் வெளிவர காரணமானவர்.



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். தயாபரன், கோவில் வீதி, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

முள்ளிவாய்க்காலில் இவ்வருடம் நினைவேந்தல் நடத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தும் அதனைக்கூட ஒற்றுமையாக சிறப்பாக நடாத்தாமல், குழுக்கள் குழுக்களாக தனித்து நடாத்தியதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:**

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களில் பல்வேறு தரப்பினரும் இருந்திருப்பார்கள். அவர்களில் துரோகிகளும் இருப்பார்கள் என்று சிலர் கணக்குப்போட்டார்களோ தெரியவில்லை. அவர்கள் எப்படி துரோகிகளின் ஆத்துமாக்களுக்கும் சேர்த்து அஞ்சலி செலுத்தவது என்று நினைத்திருப்பார்களோ தெரியவில்லை.

---

**தி. கணேஸ், வெள்ளவத்தை, கொழும்பு**

**கேள்வி:**

முள்ளிவாய்க்காலில் மட்டுமன்றி காலிமுகத்திடலிலும் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடாத்த முடிந்தது தமிழர்களுக்கு கிடைத்த வெற்றிதானே?

**வியுக்தியார்:**

காலிமுகத்திடலில் கோட்டாவை வீட்டுக்குப்போகச் சொல்லி நடாத்தும் போராட்டத்தையே கலைக்கமுடியாமல் இருக்கும் பேரினவாதம், முள்ளிவாய்க்கால் நினைவை நடாத்த அனுமதித்துவிட்டது என்பதால் அது அடங்கிவிட்டது என்பதல்ல. அது அடங்கிப்போய் விட்டதுபோல இருக்கின்றது. இதனை வெற்றியாகக் கொண்டாடுவது மீண்டும் அவர்கள் உயிர்ப்பிக்கவே உதவும்.

---

**ப. லவன், பெரிய உப்போடை, மட்டக்களப்பு**

**கேள்வி:**

மகிந்த ராஜபக்ஷவின் சகாப்தம் முடிந்தவிட்டது என்கிறார்களே. அவர் நாட்டைவிட்டு தப்பியோடுவார் என்று பலரும் எதிர்பார்த்திருக்க மனுசன் மீண்டும் பாராளுமன்றத்திற்கே வந்துவிட்டாரே?

**வியுக்தியார்:**

இப்படித்தானே, பதினைந்தில அவர் தோல்வியடைந்து அம்பாந்தோட்டைக்கு ஓடியபோதும் சொன்னோம். பின்னர் அவர் தலைமையிலான அரசாங்கத்துடன் பேச்சு நடாத்துவதற்காகவும் காவலிருக்கவேண்டி வந்தது. அரசியலில் என்னவும் நடக்கலாம். நாம் எதற்கும் அமைதியாக இருந்து சிங்கள மக்கள் தமது தலைவர்கள் யார் என்பதை தீர்மானிக்கும் வரை பொறுத்திருப்பதுதான் நல்லது. சிங்கள மக்களுக்கு யார் நல்லவர், யார் கெட்டவர் என்ற வகுப்பெடுக்க நாம் போகத் தேவையில்லை என்றே நினைக்கின்றேன்.

---

**கெ கிருஸ்ணகுமார், களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு**

**கேள்வி:**

எங்கள் மட்டக்களப்பு எம்.பி. சாணக்கியன் இப்போது ஏன் அடிக்கடி ரணில விக்கிரமசிங்கவுக்கு எதிராக தொடந்து பாராளுமன்றில் பேசுகின்றார். ரணில் ஒருவரால்தான் நமது நாட்டை பொருளாார நெருக்கடியிலிருந்து காப்பாற்றலாம் என்று எல்லோரும் சொல்லும்போது, அவர் ஏன் அவரை விமர்சிக்கிறார் என்று எனக்கு புரியவில்லை. உங்களுக்காவது ஏதாவது புரிந்ததா?

**வியுக்தியார்:**

அவர் முன்னர் அரசியலுக்கு வந்தபோது, மகிந்த ராஜபக்ஷவின் கட்சியூடாகவே அரசியலுக்கு வந்தார். இதுபற்றி அவரிடம் முன்னர் ஒருதடவை ஊடகவியலாளர்கள் கேட்டபோது, தனது அறியாப் பருவத்தில் செய்த தவறு என்று கூறியிருந்தார். இப்போதும் அவர் யாரோ ஒருவரின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காகவே இப்படியெல்லாம் பேசுவதாகவே தெரிகின்றது. இதிலிருந்து உங்களுக்கு ஒன்று புரிந்திருக்கவேண்டுமே. அவர் இப்போதும் அறியாப்பருவத்தில் தான் இருக்கின்றார் என்று. தான் சொல்ல வேண்டியதை அவர் சொல்வது நல்லது என்று யாரோ நினைக்கின்றார்கள் என்று நினைக்கின்றேன். சாணக்கியன் தனது தாய்மொழியில் அழகாக சிங்களம் பேசுவதால் அவர் சொல்வது சிங்கள மக்களிடம் நன்றாக போய் சேருகின்றது என்பதால் அவரை யாரோ பேச வைக்கின்றனரோ தெரியவில்லை என்ற சந்தேகம்தான் எனக்கு.

# துலக்கம்

- கன்பரா யோகன் -

மாலை வெயில் திண்ணையில் விழுந்திருந்தது. சின்னப்பா திண்ணையில் ஏற்றி வைத்திருந்த சைக்கிளை படியால் இறக்கி முற்றத்தில் நிற்பாட்டி விட்டு பெடலுக்கு மேலே ஏ வடிவில் சந்திக்கும் உலோகத் தண்டுகளுக் கிடையில் அமுக்கி வைத்திருந்த அழுக்குத் துணியை எடுத்து துடைக்கத் தொடங்கினான். வாயில் சிகரட் புகைந்து கொண்டிருந்தது.

அது திண்ணையில் ஏற்றி வைக்குமளவுக்கு அப்படி ஒரு புது சைக்கிள் இல்லை. ஆனால் முற்றத்தில் நின்றால் அயலிலுள்ள நாய்கள் வந்து சில்லில் மூத்திரம் பெய்து விட்டுப் போகின்றன. அதனால் றிம்மில் பொருத்தியுள்ள கம்பிகள் கறல் பிடித்துப் போகின்றன.

தகர பேணிக்குள்ளிருந்த கொஞ்சத் தேங்காயெண்ணெய்க்குள் போத்தலிலிருந்த மண்ணெணெயில் கொஞ்சம் கலந்தான். மண்ணெணெயின் நாற்றம் மூக்கிலடித்தது. வெள்ளைத்துணியைப் பேணிக்குள் ஒற்றி மட்காட் வளைவுகளைத் துடைக்கத் தொடங்கியபோது பொக்கற்றுக்குள் இருந்த கைத்தொலைபேசி அழைப்பு நெஞ்சில் கிறு கிறு என்று கீச்சம் காட்டியது.

இடக்கையால் அதை எடுக்க தொலை பேசியில் கோமதி

“சின்னா ஒருக்கா ஆஸ்பத்திரிக்குப் போய் வாடா” அவள் இப்படிக் கெஞ்சுவதற்கு ஒரு ராகம் இழுத்தாள்.

“ஏன் உன்ரை புருஷன் எங்கை?”

“கொழும்புக்கு அவர் வான் கொண்டு போய் ஒரு கிழமையா இன்னும் வரேல்லை. அங்கயிருந்து வேற ஒரு ஹயர் வந்ததால கதிர்காம பக்கம் போக வேண்டி வந்திட்டுதாம்”.

“சரி விடு. ஏன் இப்ப ஆஸ்பத்திரிக்கு?

“குட்டித்தம்பிக்கு தொய்வு வந்து முந்தநாள் நான் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக அங்க மறிச்சிட்டாங்கள். இண்டைக்குத் தான் துண்டு வெட்டி விடுவாங்களாம்.”

சின்னப்பா மௌனமாக இருந்தான், அதை புரிந்து கொண்டவள் மேலே தொடர்ந்தாள்

“அதுக்கிடையிலை சாந்திக்கு காய்ச்சல் வந்திட்டுது. அவளை வீட்டை விட்டிட்டு நான் எப்பிடி ஆஸ்பத்திரிக்குப் போவன்?”

சாந்தி கோமதியின் மூத்த பெண்.

“ப்ளீஸ் சின்னா”

இப்படிக் கெஞ்சும் போது கோமதியின் முகத்தை கற்பனையில் கண்டால் பிறகு சின்னப்பா மறுக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் மகேஷ் வீட்டிலிருக்கும் போது அங்கு வரமாட்டான் என்பதும் கோமதிக்குத் தெரியும்.

“சரி போறன், எந்த வாட்டு?”

கேட்டுக் கொண்டே தொலை பேசியை தோளை உயர்த்தி காதில் இடுக்கிக் கொண்டு அழுக்குத் துணியை பழையபடி பெடலுக்கு மேலே சொருகி விட்டவன் சைக்கிளை திருப்பிக் கொண்டு படலைக்கு போனான்.

கோமதிக்கு அவனிலும் இரண்டு வயது அதிகம். கோமதியின் திருமணத்தின் பின் சின்னப்பா வேலைக்கு மத்திய கிழக்குக்கு வேலைக்குப் போனான். அந்தப் பணத்தில்தான் மகேஷ் வான் வாங்குவதற்கு கொடுத்திருந்தான். பிறகு கொஞ்சக் காலத்திலேயே மத்திய கிழக்கிலிருந்து திரும்பி வந்து உள்ளூரில்



மூன்று நாலு தொழில்கள் செய்து பார்த்து விட்டான். எதிலும் நிலைக்கவில்லை. சற்று முற்கோபம் இருப்பதால், எதிலும் ஒரு தகராறு வந்து விடும். இப்போது சாப்பாட்டுக் கடையொன்றில் காஷியராக வேலை.

ஆஸ்பத்திரிக்கு வெளியே வேப்ப மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு வாட்டுக்குப் போய் துண்டு வெட்டிக் கூட்டிக் கொண்டு வந்தவன் பின் கரியரில் குட்டித்தம்பியின் ஆஸ்பத்திரி உடுப்பு பையை சொருகியபடி “ஏறு ” என்றான்.

பெடலுக்கு மேலே இருந்த அச்சில் காலை வைத்து ஏறி பாரில் இரு கால்களையும் ஒருபுறம் தொங்கப் போட்டபடி இருந்தான் குட்டித்தம்பி. அவனுக்கு எட்டு வயதிருக்கும்.

சைக்கிள் வேகம் எடுக்கத் தொடங்கியபின் “உனக்கு இப்ப எல்லாம் சுகம் தானே?” என்றான் சின்னப்பா.

“ம்” என்று விட்டுப் பேசாதிருந்தான் குட்டித்தம்பி.

“வாயத் திறந்து சொல்லேன்”

கோமதியின் புருஷனும் மகேஷும் ஒரு உம்மாண்டி. இவனும் அவன் சாங்கம்தான்.

“ஓம் இப்ப சுகம்” தயங்கியபடி பதில் வந்தது.

கோமதியின் கணவன் மகேஷுடனான உறவில் விரிசல் வந்தது சின்னப்பாவின் திருமணம் என்னும் அரைகுறை நாடகம் நடந்த பிறகுதான். கோமதிதான் மகேஷின் தங்கைக்கு சின்னப்பாவை கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருந்த வேளை திருமணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தங்கை வேறொருவனை விரும்பியதையறிந்து மகேஷ் திருமணத்தை நிறுத்தினான். இதன் பிறகு அவர்கள் வாழ்வினின்றும் முடிந்த வரை ஒதுங்கினான் சின்னப்பா.

மாலை நேரமாதலால் போக்குவரத்து அதிகமாகி, வாகனங்கள் அவ்வப்போது தெருப் புழுதியை கிளப்பிச் சென்றன.

“மூக்கை பொத்திக்கொள். புழுதிக்கு திருப்பி தொய்வு வந்தாலும் வந்திடும்”

பேசாமல் மூக்கை ஒருகையால் பொத்திக் கொண்டான் குட்டித்தம்பி.

சின்னப்பாவின் சைக்கிள் இன்னும் வேகமெடுத்தது.

மருந்துக்கு கடை வளைவைத் தாண்டி அருகிலிருந்த மதகடிக்கு வந்ததும் சைக்கிள் தானாக பிரேக் பிடிப்பதைப் போல தெரிந்தது.

பிரேக் றிம்மில் முட்டுகிறது என்று நினைத்துக் கொண்டே வலித்து பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

அடுத்த அரை நிமிடத்தில் கட கட என்று முன் சில்லில் ஒரு சத்தமும் வந்தது.

இப்போது சைக்கிள் முற்றாக சடன் பிரேக் பிடித்தது போல நிற்க, குதித்து இறங்கி முன் சில்லை பார்த்தான் சின்னப்பா.

குட்டித்தம்பியின் வலக்கால் முழங்காலுக்கு கீழே சைக்கிள் றிம் கம்பிகளுக் கும், போர்க்கிற்குமிடையில் சிக்கியிருந்தது.

வந்த கோபத்தில் குட்டித்தம்பியின் முதுகில் ஒரு அறை விட்டான்.

“ என்னடா வாயிலை என்ன முட்டையே? கால் சில்லுக்கை சிக்கினால் ஒருக்கா கத்தினாலென்ன, மொக்கா”

சில்லுக்குள்ளே கால் போய் அரை நிமிடமாகியும் ஒரு கத்தலோ, குளறலோ இன்றி வாயைத்திறக்காமல் இருந்திருக்கிறான்.

றிம்மின் கம்பிகள் பல உடைந்திருந்தன.

குட்டித்தம்பியின் கால் தசையின் தோலுரிந்து வெள்ளைத்தோல் தெரிந்தது. பிறகு முத்து முத்தாக இரத்தப் பொட்டு கள் தோன்றி தோல் சிவப்பாக மாறியது.

குட்டித்தம்பியின் காலை மெல்ல வெளியே இழுத்தெடுத்த சின்னப்பா, சைக்கிளை அங்கேயே பக்கத்துக்கு கடையில் விட்டு விட்டு குட்டித்தம்பியை ஆட்டோ ஒன்றில் மீண்டும் அந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனான்.

இரண்டு நாட்கள் கடந்தன. மதியம் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆலடி மகாவித்தியாலயம் நோக்கிப் போனான் சின்னப்பா.

தெருவோரமாக நின்ற வாகை மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு சிகரட் ஒன்றை எடுத்து புகைக்க ஆரம்பித்தான். வாகையின் கீழ் விழுந்திருந்த மஞ்சட் பூக்கள் மரத்தை சுற்றியிருந்த நிலத்தை மூடியிருந்தன.

பிறகு கம்பி வேலிக்கு அப்பாலிருந்த மகாவித்தியாலயப் பள்ளி சிறுவர் விளையாட்டு மைதானத்தைப் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். மதிய இடைவேளை மணியடித்ததும் சிற்றோடைகள் வேகமாய் பாய்ந்து வந்து குட்டைக்குள் விழுவதைப் போல எல்லாக் கட்டிடங்களிலிருந்தும் வரிசையாக வந்த பள்ளிச் சிறுவர்கள் மைதானத்துக்குள் வந்தனர்.

மெல்ல மெல்ல நொண்டியபடி முழங்காலுக்கு கீழே அன்றைக்கு போட்ட வெள்ளை பாண்டேஜ் உடன் குட்டித்தம்பி கடைசியாக வந்தான். மைதானத்துக்கு அருகிலிருந்த சுவர் விளிம்போன்றில் இருந்து மற்றவர்கள் விளையாடுவதை குட்டித்தம்பி பார்த்துக் கொண்டிருந்தான். சின்னப்பாவுக்கு குட்டித்தம்பி மேல் இரக்கம் வந்தது. அன்றைக்கு முதுகில் அடித்தது வேறு நினைவுக்கு வந்தது.

பத்து நாட்கள் கழிந்து மீண்டும் அந்த வாகை மரத்தடியில் நின்றான் சின்னப்பா. வழமைப்படி மணியடித்ததும் பிள்ளைகள் வெளியே ஓடி வந்தனர். இப்போது குட்டித்தம்பி காலில் பிளாஸ்டர்தான் போட்டிருந்தான். மற்றைய சிறுவர்களுடன் விளையாட்டிலும் சேர்ந்து கொண்டான்.

ஒருவேளை கோமதியின் கணவன் வீட்டுக்கு வந்திருப்பான். ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்று பேண்டேஜை மாற்றி பிளாஸ்டர் போட வைத்திருப்பான்.

கீழே நிலத்தில் அன்றைக்கு வாகை பரப்பியிருந்த மஞ்சல் பூக்கள் எதையும் காணவில்லை. அவை முதல் நாளிரவு பெய்த மழையால் அடித்து செல்லப்பட்டிருந்தன.

சின்னப்பாவின் சைக்கிள் முன் சில்லுக்கு போட்டிருந்த புதிய கம்பிகள் வெயிலில் பளபளத்தன. இப்போது அவன் மனதிலும் பாரம் குறைந்து அது துலக்கமாக இருந்தது.

## மே மாதத்துக்கும்

# ராஜீவ் கொலை வழக்கு நிகழ்வுகளுக்கும் இடையிலான தற்செயல் தொடர்பு

**தி. இராமகிருஷ்ணன்**



முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுட்காலச் சிறைத்தண்டனை அனுபவித்துவந்த ஏ.ஜி.பேரறிவாளனை விடுதலை செய்து இவ் வாரம் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அந்த கொலை வழக்குடன் தொடர்புடைய நிகழ்வுகள் மற்றும் ஆட்களுக்கும் மே மாதத்துக்கும் இடையிலான “ விசேட தற்செயல் நேர்வுக்கு ” இன்னுமொரு இணைப்பாக வந்துசேர்ந்திருக்கிறது.

ராஜீவ் காந்தியும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் உட்பட 15 பேரும் சென்னைக்கு அண்மையாகவுள்ள சிறிபெரம்புதூரில் “ மனிதக் குண்டினால்” கொல்லப்பட்டது 1991 மே 21 திகதியாகும்.

சரியாக ஒரு வருடம் கழித்து 1992 மே 20 விசேட விசாரணைக்குழு பயங்கரவாத மற்றும் சீர்குலைவு நடவடிக்கைகள் தடுப்பு (தடா) சட்டத்தின் (இந்த சட்டம் பிறகு 1995 ஆம் ஆண்டு ரத்துச் செய்யப்பட்டது) கீழ் அமைக்கப்பட்ட விசேட நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்தது.

அந்த குற்றப்பத்திரிகை பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவும் இலங்கை -- இந்திய சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட 1987 ஜூலை 29 தொடக்கம் ராஜீவ் காந்தி கொல்லப்பட்ட 1991 மே 21 வரையான நிகழ்வுகளை வரிசைப் படுத்தியிருந்தது.

வழக்கில் 41 பேர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டது. அவர்களில் விடுதலை புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உட்பட மூவர் தலைமறைவாக இருந்தவர்களாகவும் 15 பேர் இறந்துபோனவர்களாகவும் குறிப்பிடப்பட்டனர். பல்வேறு சட்டங்களின் கீழான குற்றச்செயல்களுக்காக 29 பேர் மீது வழக்கு விசாரணை நடந்தது.

விசேட நீதிமன்றத்தினால் 1998 ஜனவரியில் மரணதண்டனை விதிக்கப்பட்ட 26 பேரில் நான்கு பேர் ( நளினி, சாந்தன், முருகன், பேரறிவாளன்) மரணதண்டனையை உச்சநீதிமன்றம் 1999 மே 11 ஊர்ஜிதம் செய்தது. வேறு மூவர் (றொபேர்ட் பாயஸ், ஜெயக்குமார், ரவிச்சந்திரன்) மீதான மரண தண்டனையை ஆயுட்காலச்சிறைத் தண்டனையாகக் குறைத்த அந்த நீதிமன்றம் ஏனைய 19 பேரையும் விடுதலை செய்தது.

பத்து வருடங்கள் கழித்து 2009 மே மாதத்தில் (25 வருடங்கள் நீடித்த) இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது. பிரபாகரன் இறந்துவிட்டார் என்று இலங்கை அரசாங்கம் 13 வருடங்களுக்கு முன்னர் ( 2009 மே 18) அறிவித்தது. இவ்வருடம் அதே தினத்தில் (2022 மே 18) பேரறிவாளனை விடுதலை செய்து உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்தது.

**[தி இந்து]**

# கருத்துக்கு கைவிலங்கு



விவாதமும் விமர்சனமும் ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகள்.

மன்னர் ஆட்சி, ராணுவ ஆட்சி, சர்வாதிகார ஆட்சி போன்றவற்றுக்கு மாற்றாக மக்களாட்சி முறை தத்துவத்தை முன்னெடுத்ததன் அடிப்படையே விவாதம், விமர்சனத்தின் அடிப்படையில் மக்கள் தங்களது ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதுதான்.

ஆனால், உலகளாவிய அளவில் பல ஜனநாயகங்கள் மன்னராட்சி முறையின் வம்சாவளி தத்துவத்தையும், சர்வாதிகார ஆட்சியின் விமர்சனத்துக்கு எதிரான நடைமுறையையும் பின்பற்றுகின்றன என்பது வேதனைக்குரியது.

‘எல்லைகளற்ற பத்திரிகையாளர்கள்’ என்கிற பொருளில் அமைந்திருக்கும் ‘ரிப்போர்ட்டர்ஸ் வித்அவுட் போர்டர்ஸ்’ என்கிற சர்வதேச ஊடகவியலாளர்களின் அமைப்பு ஆண்டு தோறும் பல்வேறு நாடுகளில் ஊடக சுதந்திரம் குறித்து அறிக்கை வெளியிடுகிறது. ஊடக சுதந்திரக் குறியீடு அதனுடன் இணைக்கப்பட்டு பல்வேறு நாடுகளின் ஊடக சுதந்திர நிலைமை வரிசைப்படுத்தப்படுகிறது.

சமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கும் கடந்த ஆண்டுக்கான அறிக்கையின்படி, இந்தியா எட்டு புள்ளிகள் மேலும் குறைந்து 150-ஆவது இடத்தில் காணப்படுவது இந்திய ஊடகங்களுக்கு வேதனையும், அதிர்ச்சியும் அளிக்கும் செய்தி.

உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடு என்கிற நியாயமான பெருமிதம் இந்தியாவுக்கு உண்டு. இந்தியாவின் அரசியல் சாசனம் ஊடகங்களுக்கு மட்டுமல்லாமல், ஒவ்வொரு குடிமகனுக்கும் கருத்து சுதந்திரத்தை அடிப்படை சுதந்திரமாகவே வழங்கியிருக்கிறது. அப்படியிருக்கும் நிலையில்,

உலகிலுள்ள 180 நாடுகள் அந்த அமைப்பின் நுண்ணாடியால் ஆய்வு செய்யப்பட்டு, கருத்து சுதந்திரத்தின் பல்வேறு அம்சங்களுக்கான மதிப்பெண் வழங்கப்பட்டு ஊடக சுதந்திரக் குறியீடு தயாரிக்கப்படுகிறது.

இரண்டு வாரங்களுக்கு முன்பு வெளியிடப்பட்டிருக்கும் அந்தக் குறியீட்டுப் பட்டியலில் இந்தியா மிகவும் பின்தங்கி 150-ஆவது இடத்தில் இருப்பது மிகப் பெரிய தலைகுனிவு.

பட்டியலில் 146-ஆவதாக இடம் பிடித்திருக்கும் இலங்கை, இந்தியாவை விட மேம்பட்ட கருத்து சுதந்திரத்துடன் காணப்படுகிறது.

பாகிஸ்தான் (157), வங்கதேசம் (162), மியான்மர் (176) என்று தெற்காசிய நாடுகள் அனைத்துமே அந்தக் குறியீட்டுப் பட்டியலில் பின்தங்கியிருக்கின்றன.

# உலக சாம்பியன் கார்ல்சனை மீண்டும் தோற்கடித்த தமிழக இளம் வீரர் பிரக்ஞானந்தா



மூன்று மாத இடைவெளியில் உலக செஸ் சாம்பியன் கார்ல்சனை மீண்டும் தோற்கடித்துள்ளார் தமிழக வீரர் பிரக்ஞானந்தா.

கடந்த பிப்ரவரி மாதம் இணையம் வழியாக நடைபெற்ற ஏர்திங்ஸ் மாஸ்டர்ஸ் ரேபிட் செஸ் போட்டியில் எட்டாவது சுற்றில் உலகின் முதலாம் தரவரிசையில் உள்ள செஸ் வீரர் கார்ல்சனைத் தோற்கடித்துப் பரபரப்பை ஏற்படுத்தினார் தமிழகத்தைச் சேர்ந்த 16 வயது பிரக்ஞானந்தா.

இதனால் அவருக்குப் பலத்த பாராட்டுகள் கிடைத்தன.

இந்நிலையில் கார்ல்சனை மீண்டும் தோற்கடித்து அசத்தியுள்ளார் பிரக்ஞானந்தா. இணையம் வழியாக நடைபெறும் செஸ்ஸபிள் மாஸ்டர்ஸ் ரேபிட் செஸ் போட்டியில் கார்ல்சனை எதிர்கொண்டார் பிரக்ஞானந்தா. 40-வது நகர்த்தல் வரை ஆட்டம் வெற்றி தோல்வி இல்லாமல் முடியும் போல இருந்தது.

ஆனால் இதன்பிறகு கார்ல்சன் ஒரு தவறு செய்தார். அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு வெற்றி பெற்றார் பிரக்ஞானந்தா.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 

வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 


நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 

பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) 6 தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | |
|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 |
| 26. 1 | 30. 3 | 34. 2 |
| 27. 2 | 31. 1 | 35. 1 |

## கல்வி tv CHANNEL-1

**22.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

## கல்வி tv CHANNEL - 2

**22.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மண்ணெண்ணெய் விநியோகத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை?

கொழும்பு, மே. 22

எதிர்காலத்தில் மண்ணெண்ணெய் விநியோகத்தையும் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்படும் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்தார்.

மண்ணெண்ணெய் விநியோகத்தில் இடம்பெறும் மோசடியை குறைப்பதற்காக இவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

எனினும், மீனவர்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என அவர் தெரிவித்தார். (அ)

# இலங்கை நெருக்கடி...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜிம்பாப்வே டாலரை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் என்பதற்காக 2019 ஜூன் மாதம் வெளிநாட்டு கரன்சிகளுக்கு அந்நாடு தடை விதித்தது. தொழில் நிறுவனங்கள், தொழிலாளர்கள் என அனைத்துத் தரப்பினரும் ஒரு சேர எதிர்ப்பு தெரிவித்த நிலையில் கொரோனா பெருந்தொற்று காரணமாக வெளிநாட்டு கரன்சிகளில் பரிவர்த்தனை செய்ய அரசு மீண்டும் அனுமதித்தது. இன்னும்கூட ஜிம் பாப்வே டாலர் உலக அளவில் மதிப்பு குறைந்த நாணயங்களில் ஒன்றாக உள்ளது. ஒரு அமெ ரிக்க டாலரின் மதிப்பு 360 ஜிம்பாப்வே டாலருக்கும் மேல் என்பது சமீப நாட்களின் நிலை. கிட்டத்தட்ட இலங்கை ரூபாயும் இதே அளவில்தான் அமெரிக்க டாலருக்கு நிகராகப் பரிமாற்றம் செய்யப்படுகிறது.

அரசு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கவும், அரசின் அன்றாடச் செலவுகளுக்கே பணம் இல்லாதபோதும் இலங்கை அரசுக்கு வேறு வழி இல்லை என்பதால் பணம் அச்சடிக்கப்படும் என்று ரணில் விக்ரமசிங்க கூறியுள்ளார்.

**இலங்கை ரூபாய், அமெரிக்க டாலர் - இனி என்ன நடக்கும்?**

“இலங்கை அரசு பணத்தை அச்சிடலாம் என்று எடுத்துள்ள முடிவு தற்காலிக நிவாரணம் மட்டுமே கொடுக்கும். ஒரு சில வாரங்கள் அல்லது மாதங்களில் அதை நிறுத்தாவிட்டால் இலங்கை ரூபாய் மதிப்பு கடுமையாக வீழ்ச்சி அடைந்து பணவீக்கம் ஏற்படும். இலங்கை பெரும்பாலான உணவுப் பொருட்களுக்கு இறக்குமதியை நம்பியுள்ள நாடு.“

“பண வீக்கம் ஏற்பட்டு நாணய மதிப்பு சரிவடைந்தால் உணவுப் பொருட்களைத் தேவையான அளவு இறக்குமதி செய்ய முடியாமல் பட்டினிச் சாவு உண்டாகும் நிலை கூட ஏற்படலாம். ஆனால் உலக வங்கியிடமிருந்து 160 மில்லியன் அமெரிக்க டாலர் கடனாக கிடைப்பதற்கான வாய்ப்பு தற் போது உள்ளது. அந்தப் பணம் இலங்கை அரசுக்கு கிடைத்து நிலைமை ஓரளவு சரியாகும் போது வெளிநாட்டு வர்த்தகம் தொடங்கும். அப்பொழுது ஏற்றுமதியாளர்கள் மூலம் டாலர் உள்வருகை நிகழும். அப்பொழுது இலங்கை ரூபாயை அளவுக்கு அதிகமாக அச்சிடுவதை நிறுத்த வேண்டும்,“ என்று முருகேசு கணேசமூர்த்தி கூறுகிறார்.

மத்திய வங்கியிடம் இருக்கும் டாலர் கையிருப்பு அடிப் படையிலேயே இலங்கை ரூபாய் அச்சிடப்படுவது இலங் கையில் வழக்கமாக இருந்தது. எவ்வளவு டாலர் கையிருப்பு உள்ளதோ, அந்த அளவு பணத்தை அச்சிட்டு விநியோ கிக்க வேண்டும் என்பதைக் கண்காணிக்கும் நாணய சபை முறை மீண்டும் வேண்டும் என்ற குரல்களும் மீண்டும் எழத் தொடங்கியுள்ளன.

இலங்கையின் தற்போதைய நெருக்கடிகளின் மூலக் கார ணங்களில் இருப்பது டாலர் பற்றாக் குறைதான். கடன் மூலம் டாலர் உள்வரவு நிகழுமென்றாலும், முன்பைப்போலவே அந்நியச் செலாவணி தொடர்ந்து இலங்கைக்கு கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். தற்போதைய யுக்ரேன் - ரஷ்ய போர், இலங் கையின் வர்த்தகக் கூட்டாளி நாடுகளில் உண்டாகியுள்ள பொருளாதார மந்த நிலை உள்ளிட்டவை இதற்குக் காரணமாக இருக்கும்.

போதுமான அளவு டால ரில் வரவு இல்லாத சூழலில் வேறு ஒரு நாணய முறை உரு வாகவும் இலங்கையில் வாய்ப் புண்டு. தங்கள் நாட்டு நாணய மதிப்பு வீழ்ந்து, பணவீக்கம் உண்டான பின் அமெரிக்க டாலர் அல்லது அண்டை நாட்டு நாணயங்களை புழக் கத்திற்கு ஏற்றுக்கொண்ட நிகழ்வுகள் வரலாற்றில் உள் ளன. இலங்கை அந்த நிலையை நோக்கிப் போகுமா என்று இப்போதே கூறுவது கடினம்.

ஆனால், ஒன்றை மட்டும் இப்போது உறுதியாகக் கூற முடியும். இலங்கை இன்னும் எதிர் கொள்ள வேண்டிய சோத னைகள் இன்னும் ஏராளம் உள்ளன. (பி.பி.ஸி.)

# புலனாய்வு அறிக்கையை...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையாளர்கள் நடத்திய சர்வதேச சுற்றுலாக்கள் பற்றி மட்டுமே அந்த அறிக்கையில் தகவல்கள் இருந்ததைப் பார்த்து நீதிபதிகள் சலிப்படைந்தனர். அறிக்கையில் சொல்லிக்கொள்ளும்படியாக எதுவும் இருக்க வில்லை. MDMA தொடர்கிறதா, அல்லது வரி செலுத்துபவர்களின் உழைப்பை இனி உறிஞ்சாமல் அது தன் வேலையை நிறுத்திக் கொண்டதா என்ற அறிவிப்பும் வரவில்லை.

பேரறிவாளன் விடுதலையை எதிர்த்து உச்சநீதிமன் றத்தில் மேன்முறையீடு எழும்பலாம் என்று நீதி பண்டிதர்கள் வாதிடக்கூடும். அந்த விடுதலைத் தீர்ப்பை வழங்கிய மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் குழுவின் தலைவரான நீதிபதி ராவ், ஜூன் மாதம் 3ஆம் திகதி ஓய்வு பெறுவதால் அதற்குப் பிறகு இந்த மேன்முறையீடு நடக்கும் என்றும் அவர்கள் கூறக்கூடும். ஆனால், என்னுடைய இறுதிக்கேள்வி இது தான், “குற்றமற்றவர் என்பதற்கான ஆதாரம் கிடைத்தபின்பும், சிறப்பு புலனாய்வுத்துறையின் அறிக்கை உடைந்துவிடக் கூடாது என்பதாலேயே ஒருவரை எத்தனை ஆண்டுகள் சிறையில் வைத்திருப்பது? அவரின் பறையில் ஒலிக்கும் சுதந்திர இசையை ஏன் நிறுத்த முயல்கிறீர்கள்?” சுதந்திரத்தின் இனிமையையும், பெருமையையும், சிறப்பையும் உணரும் வாய்ப்பை தேடாத காங்கிரஸ் மற்றும் பாஜவினர் இதற்கு பதில் சொல்லட்டும்.

என்னிடம் மற்றொரு கேள்வியும் இருக்கிறது, கொஞ்சம் கனமானதுதான்.

‘தன்னுடைய வாழ்நாளின் பெரும்பகுதி களவாடப்பட்டிருக்கிறது என்பதால் பேரறிவாளனுக்கு நஷ்ட ஈடு ஏன் வழங்கக்கூடாது?’

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# ஓராண்டு நினைவஞ்சலி

## சந்தியோ ஆரோக்கியநாதன்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18 – 04 –1941 | 22 – 05–2021 |

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
திகழ்ந்து அன்பாலும் பண்பாலும்
பாசத்தாலும் எம்மை நல்வழி நடத்தி
இன்று வானுறையும் தெய்வமாகி
விட்ட எமது அன்புத் தந்தையின்
பொன்னடிகளில் அவர் புகழ் கூறும்
இம்மலர் தன்னை சமர்ப்பிக்கின்றோம் யாம்.

தொடர்புகளுக்கு :
0777208644
0772454634

தகவல்: குடும்பத்தினர்.
அருட்சகோதரி ராஜேஸ் (மேகலா) SDS,
ராஜசேகரன் - மைதிலி (பிரான்ஸ்), யூட் - சசிகலா (பிரான்ஸ்),
யோசுவா (பேரன் - பிரான்ஸ்),
தம்பா (ஜீவா - பெறாமகன் - நாவாந்துறை),
உற்றார், உறவினர்.

# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 - 04 - 1945 | 18 - 05 - 2022 |

## திருமதி பஞ்சாட்சரதேவி அருமைத்துரை

யாழ். சரவணையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம், ஹல்துமுல்ல, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பஞ்சாட்சரதேவி அருமைத்துரை கடந்த 18.05.2022 புதன் கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தம்பையா முத்தாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான துரையப்பா அரியமணி(உரும்பிராய் தெற்கு) தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அருமைத்துரை அவர்களின் அன்பு மனைவியும், சுரேஷன்(லண்டன்), பிரபாகரன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தனுஷா(மஞ்சு), பிரமிளா(தீபா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரவீன், அஸ்வின், நவின், பிரதீப், பிரஷா ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,குணரட்ணசிங்கம்(இலங்கை), ஜெயரட்ணதேவி ( லண்டன்), காலஞ்சென்றவர்களான குணரட்ணதேவி, சிவபாதசிங்கம், தனபாலசிங்கம் மற்றும் நவரட்ணதேவி(பிரான்ஸ்), காலஞ்சென்ற கமலாதேவி, தனராஜசிங்கம்(லண்டன்), காலஞ்சென்றவர்களான கணராஜசிங்கம், குலராஜசிங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரியும்,ஞானரஞ்சிதம்(கனடா), காலஞ்சென்றவர்களான வரதராஜா, தியாகராஜா மற்றும் அருந்தவராணி(உரும்பிராய்), தவராஜா(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

*கிரியை :*
Thursday, 26 May 2022 1:00 PM - 2:30 PM
Old Parkonians Association The Pavilion, Oakfield Playing Fields, Forest Rd, Ilford IG6 3HD, United Kingdom.

*தகனம் :*
Thursday, 26 May 2022 3:00 PM
Forest Park Cemetery & Crematorium Forest Rd, Ilford, Hainault IG6 3HP, United Kingdom

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
**சுரேஷன் - மகன்**
**Mobile : +447830980070**
**பிரபாகரன் - மகன்**
**Mobile : +447590605057**
**தனா - சகோதரன்**
**Mobile : +447976660635**

தகவல்:
**குடும்பத்தினர்**

# தமிழகத்தின் நிவாரண கப்பல் இன்று இலங்கை வந்தடையும்!

கொழும்பு, மே. 22

இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தொடராக தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட 2 பில்லியன் ரூபா பெறுமதியான முதல் தொகுதி நிவாரணப் பொருட்கள் அடங்கிய கப்பல் எதிர்வரும் 22ஆம் திகதி நாட்டை வந்தடையவுள்ளதாக இலங்கையிலுள்ள இந்திய தூதரகம் அறிவித்துள்ளது.

குறித்த கப்பலில் 9 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 25 மெற்றிக் தொன் மருந்து பொருட்கள் அதில் அடங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நிவாரணப் பொருட்கள் இந்திய தூதுவர் கோபால் பாக்லேயினால் இலங்கைத் தரப்பினரிடம் கையளிக்கப்படும்.

குறித்த முதல் தொகுதி நிவாரணப் பொருட்கள் கடந்த 18ஆம் திகதி சென்னையில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இதற்கமைய தமிழகத்தில் மொத்தமாக 40 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி, 500 மெற்றிக் தொன் பால்மா மற்றும் மருந்து பொருட்கள் என்பன இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சுமார் 5.5 பில்லியன் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் தமிழக அரசினால் இலங்கைக்கு வழங்கப்படுகிறது. (அ)

## சம்பிக்கவுக்காக...

யத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஏற்கனவே இவ்வமைச்சுப் பதவியை சம்பிக்க ரணவக்க வகித்துள்ளார். அவருக்கு அனுபவம் உள்ளது. எனவே, அவர் முன்வந்தால் அமைச்சு பதவியை கையளிக்க நான் தயார். எமக்கு பதவி முக்கியம் அல்ல. நெருக்கடி நிலைமையில் இருந்து மீள்வதே முக்கியம்.

இதற்காக அரசியல் பேதங்களை மறந்து இணைந்த ஹரின் பெர்ணான்டோ மற்றும் மனுச நாணயக்கார ஆகியோரை வரவேற்கின்றோம்-என்றார். (அ)

## 21 ஆவது...

இது தொடர்பாக நேற்று சனிக்கிழமை வெளியான அந்த இணைய ஊடகச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இரட்டைக் குடியுரிமை காரணமாக பொதுஜன பெரமுன கட்சியின் ஒருங்கிணைப்பாளர் பசில் ராஜபக்ஷ தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்காமல் தடுப்பதும் இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை இரத்து செய்து அதன் நேர்மறையான தரவுகளுடன் கூடிய பல நேர்மையான சீர்திருத்தங்களை உள்ளடக்கி ரணில் அரசினால் 21 ஆவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அழிவுகரமான பொருளாதார மற்றும் அரசியல் அராஜகத்தில் இருந்து நாட்டை காப்பாற்றுவதற்கு தேவையான அரசமைப்புச் சீர்திருத்தங்களைக் கொண்டு வரும் நம்பிக்கையில் இந்த திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாது விட்டால் நாடு மற்றுமொரு பேரழிவை சந்திக்கும் என்று சட்டத்துறை வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பொதுஜன பெரமுன கட்சியின் மூத்த அரசியல்வாதி ஒருவரிடம் வினவிய போது அவர் தெரிவித்ததாவது:

21 ஆவது திருத்தத்துக்கு எதிராக வாக்களிப்பது தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்று இன்னமும் எடுக்கப்படவில்லை. எமது கட்சிக்குள் கலந்துரையாடல்களை நடத்திவருகின்றோம்.

நெருக்கடியான ஒரு சூழ்நிலையில் நிறைவேற்று அதிகாரத்தினை அதிகரிக்க வேண்டுமே தவிர அதனைக் கலைத்துவிடக்கூடாது என்பதே பொதுஜன பெரமுன கட்சியின் கருத்தாகும் என்று அவர் தெரிவித்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## அடுத்த வாரம்...

கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நுரைச்சோலை அனல்மின் நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படும். நீர் மின்சாரத்தை முகாமைத்துவம் செய்து நாளை திங்கட்கிழமை அல்லது செவ்வாய் கிழமையில் இருந்து தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும்-என்றார். (அ)

## மாலைதீவு...

வைத் தொடர்வது குறித்தும் பேச்சுவார்த்தையில் கவனம் செலுத்தப்பட்டது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு உதவுவதற்கு மாலைதீவு சபாநாயகருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர்-ஹம்டியையும் எதிர்க்கட்சித் தலைவர் சந்தித்தார்.

அவர்களுக்கிடையிலான விரிவான பேச்சுக்கள் உருவாக்கப்பட வேண்டிய உத்திகள் மற்றும் பொருளாதார மந்த நிலையிலிருந்து இலங்கை வெளிவருவதற்கு நிதி உதவியைப் பெறுவதற்கான வழிமுறைகளை அடையாளம் காண்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டது. (அ)

## எச்.என்.டி....

கோரி முன்னெடுக்கப்படும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் உயர் தேசிய டிப்ளோமா மாணவர்கள் இன்று கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

இவர்கள் கோட்டையில் உள்ள உலக வர்த்தகக் கட்டடத்துக்கு அருகில் உள்ள வீதி ஊடாக காலிமுகத்திடல் பக்கம் செல்ல முயன்றபோது, அந்த வீதியில் அவர்களைத் தடுத்து நிறுத்திய பொலிஸார், மாணவர்கள் மீது கண்ணீர்ப்புகைக் குண்டு மற்றும் நீர்த்தாரைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

எனினும், மாணவர்கள் பொலிஸாரின் தாக்குதல்களை எதிர்கொண்டு சிலமணிநேரம் அங்கு நின்று ஜனாதிபதிக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பினர்.

குறித்த ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்த முடியாதவாறு பொலிஸார் ஏற்கனவே நீதிமன்றத் தடையுத்தரவைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அமைச்சு...

போட்டி நிலவுவதாக தெரியவருகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரை நேரில் சந்தித்தும், பல்வேறு தரப்புகள் ஊடாகவும் தமக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர் என அறியமுடிகின்றது.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் உட்பட அமைச்சரவையின் எண்ணிக்கையை 25 ஆக குறைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், ஜனாதிபதி, பிரதமர் தவிர, ஏனைய 23 அமைச்சுக்களுக்கு ஏற்கனவே 13 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிய அமைச்சரவையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு சுமார் 10 அமைச்சுப் பொறுப்புக்கள் வழங்கப்படவுள்ளதுடன், ஏற்கனவே அந்த கட்சியை சேர்ந்த 5 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். இந்நிலையிலேயே கடும் போட்டி நிலவுகின்றது. (அ)

# 40,000 மெற்றிக் தொன் டீசலுடன் கொழும்பை வந்தடைந்த கப்பல்

கொழும்பு, மே. 22

40,000 மெற்றிக் தொன் அடங்கிய ஒரு தொகுதி டீசல் கப்பல் நேற்று சனிக்கிழமை கொழும்பை வந்தடைந்தது. 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் கடனின் கீழ் குறித்த எரிபொருள் பெற்றுக்கொள்ளப்பட்டதாக இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# பரீட்சை ஊழியர்களுக்கு இன்று எரிபொருளை வழங்க ஏற்பாடு

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மே. 22

பரீட்சை ஊழியர்களுக்கு நாளை எரிபொருள் வழங்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எம்.எம்.டி தர்மசேன தெரிவித்துள்ளார்.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்காக அனைத்து ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பரீட்சார்த்திகள் பாடங்கள் தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் 0112 784 208 அல்லது 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

நாட்டில் தற்போது நிலவும் நெருக்கடி நிலை காரணமாக இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னதாக பரீட்சை மண்டபத்துக்கு வருவதே பொருத்தமானதாக இருக்கும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அனைத்து இலங்கை போக்குவரத்து சபை டிப்போக்களிலும் பரீட்சார்த்திகளுக்காக பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தனியார் பஸ்களுக்கான எரிபொருளை டிப்போக்களில் இருந்து வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பரீட்சை ஊழியர்களுக்கும் தேவையான எரிபொருள் களஞ்சியசாலையில் இருந்து வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# காத்தான்குடி பிரதான வீதியில் தீப்பற்றிய மோட்டார் சைக்கிள்

மட்டக்களப்பு, மே. 22

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதான வீதியில் நேற்று முற்பகல் 11.00 மணியளவில் வீதியால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீர் என தீப்பற்றி எரிந்துள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பொதுமக்கள் ஒன்றிணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தபோதிலும் அந்த மோட்டார் சைக்கிள் முற்றுமுழுதாக தீயில் எரிந்து சேதமாகியுள்ளது.

பெற்றோல் கசிவினாலேயே இந்த தீப்பற்றல் ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த காத்தான்குடி பொலிஸார் குறித்த விடயம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)

## டெங்கு...

கடந்த 18ஆம்ம் திகதி காய்ச்சல் காரணமாக அவர் பனடோல் உட்கொண்டு விட்டு இருந்துள்ளார்.

எனினும் 19ஆம் திகதி மீண்டும் வயிற்றோட்டம் வாந்தி ஏற்பட்டு மாணவன் பாதிக்கப்பட்டுள்ளார்.

அதனால் அவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். எனினும் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

டெங்கு காய்ச்சல் காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது.

இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் இன்று மேற்கொண்டார். (அ-03)

## மொரிசனை...

மராக அந்தோனி அல்பானீஸ் அடுத்து வரும் நாட்களில் பதவியேற்கவுள்ளார்.

நடந்த முடிந்த அவுஸ்திரேலியா பொதுத் தேர்தலில் தொழிலாளர் கட்சிக்கு இன்னும் தெளிவான பெரும்பான்மை கிடைக்காத நிலையில், சிறுபான்மை அரசாங்கத்தை அமைக்க முடியும் என்று அறியப்படுகிறது.

முன்னாள் பிரதமர் ஸ்கொட் மொரிசன் லிபரல் தலைவர் பதவியில் இருந்து விலகப் போவதாக அறிவித்து புதிய பிரதமர் அல்பானீஸை வாழ்த்தியுள்ளார்.

"நான் எப்போதும் ஆஸ்திரேலியர்கள் மற்றும் அவர்களின் தீர்ப்பை நம்பினேன். அவர்களின் தீர்ப்பை ஏற்க நான் எப்போதும் தயாராக இருக்கிறேன். இன்றிரவு அவர்கள் தங்கள் தீர்ப்பை வழங்கியுள்ளனர்" என்று மொரிசன் சிட்னியில் ஆதரவாளர்களிடம் கூறினார்.

"நான் அந்தோனி அல்பானீஸ் மற்றும் தொழிலாளர் கட்சியை வாழ்த்துகிறேன். அவருக்கும் அவரது அரசாங்கத்துக்கும் நல்வாழ்த்துக்கள் என மொரிசன் கூறியுள்ளார். (அ)

## இரட்டை...

படும் எனவும் அவர் கூறினார்.

21ஆவது திருத்தத்தை கொண்டு வருவதன் நோக்கங்களில் இதுவும் ஒன்று என அவர் குறிப் பிட்டார்.

அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே நீதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி தற்போது பாராளுமன்ற உறுப்பினராக உள்ள பசில் ராஜபக்ஷவின் இரட்டைக் குடியுரிமையை கொண்டவர் என்பதால் அவரது பதவியும் நீக்கப்படும் என நீதி அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## பாதுகாப்புத்...

தரப்பினரும் கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

இதையடுத்து, பாதுகாப்புப் படைகளில் முக்கிய சில பதவிகளில் மாற்றம் செய்யப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி மாளிகையில் அண்மையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் பொலிஸ்மா அதிபர் மற்றும் பல பாதுகாப்புத் துறை பிரதானிகளையும் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு விமர்சித்துள்ளது.

அதனையடுத்து, சில பாதுகாப்பு அதிகாரிகளின் நடவடிக்கைகளையும் ஜனாதிபதி விமர்சித்தார். இந்த பின்னணியிலேயே மாற்றங்கள் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்

பிறப்பு
27 - 07 - 1951



இறப்பு
20 - 05 - 2022

## நடராஜா இரட்ணசிங்கம்
### (காத்தான்)

*(பிரபல வர்த்தகர் அரவிந் Textile உரிமையாளர், கொழும்பு மாவுதடல் அருள்மிகு காத்தவராய சுவாமி ஆலய தர்மகத்தா)*

யாழ். புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு தெமட்டகொடையை வதிவிடமாகவும், கனடா Markham ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா இரட்ணசிங்கம் அவர்கள் 20-05-2022 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நடராஜா, ராசம்மா தம்பதிகளின் அருமை புதல்வரும், காலஞ்சென்ற நவரெட்ணம் (தெமட்டகொடை வர்த்தகர்), புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், இந்திராதேவி அவர்களின் பாசமிகு கணவரும்,அகிலன்(அகி), அபிராமி(அபி), அரவிந்தன், அனோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,நர்மதா, அமலன், பாலிகா ஆகியோரின் மாமனாரும்,நந்தகுமார் (கனடா), காலஞ்சென்ற தர்மபாலசிங்கம், பாலசரஸ்வதி (ஜேர்மனி), இராஜலெட்சுமி(கனடா), யோகேஸ்வரி(கனடா), காலஞ்சென்ற ஜெயலெட்சுமி. நாகேஸ்வரி(சுவிஸ்), காலஞ்சென்ற கேதாரகௌரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், மீனலோசனி, நகுலேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இரட்ணம், விசுவலிங்கம் மற்றும் குணபாலசிங்கம், ஞானலிங்கம், ஸ்ரீரங்கநாதன், காலஞ்சென்ற விக்கினேஸ்வரநாதன், லோகநாயகி(ஆசிரியை), காலஞ்சென்ற விமலநாயகி, செல்வநாயகி (அருட்கண்ணன் வர்த்தகர்) ஆகியோரின் அருமை மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அருளலிங்கம்(ஓய்வுநிலை கிராம சேவையாளர்), புலவர் க.சிவானந்தன் மற்றும் பேரின்பநாதன்(ஓய்வுநிலை தபால் அதிபர்), காலஞ்சென்ற மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்பு உடன் பிறவாச் சகோதரரும், அனிஷ், அக்ஷரா, அஷ்ரித்தா, அவினேஷ், அஜீஷா, அரிஷன், அய்சிகா, ஆரியன், ஆயாஸ் ஆகியோரின் அருமை பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Monday, 23 May 2022 5:00 PM - 9:00 PM
Tuesday, 24 May 2022 5:00 PM - 9:00 PM
Wednesday, 25 May 2022 8:00 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை :
Wednesday, 25 May 2022 10:00 AM - 12:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம் :
Wednesday, 25 May 2022 1:30 PM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு:
**அகிலன் நர்மதா - மகன், மருமகள்**
**Mobile : +14372315644**
**அபி அமலன் - மகள், மருமகன்**
**Mobile : +14167321810 Phone : +14168299993**
**அரவிந்தன் பாலிகா - மகன், மருமகள்**
**Mobile : +14166681234 Phone : +19055991622**

# அரசமைப்பு திருத்தம் குறித்து கலந்துரையாட தமிழ்த் தேசியக் கட்சிகள் இணையவேண்டும்!

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ஸ்ரீகாந்தா அழைப்பு

யாழ்ப்பாணம், மே. 22

அரசியல் சாசன சீர்திருத்தத்துக்கான நடவடிக்கைகள் பாரிய அரசியல் முக்கியத்துத்தைப் பெறும் நிலையில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் அனைத்தும் இந்த விடயம் தொடர்பில் விரைவில் கலந்துரையாட முன்வர வேண்டும் என தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார்.

அவர் நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

முன்னெப்பொழுதும் இருந்திராத மிகக் கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளும், பிரதான சிங்கள அரசியல் அணிகளுக்கு இடையில் அதிகாரப் போட்டிகள் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கின்றன. அத்துடன் உட்கட்சிப் பூசல்களும் மேலெழுந்து நிற்கின்றன. ஆயினும், 20ஆவது அரசியல் சாசன திருத்தத்தின் ஊடாக இல்லாது ஒழிக்கப்பட்ட 19ஆவது திருத்தத்திற்கு மீண்டும் உயிர் கொடுப்பதற்காக, 21ஆவது திருத்தம் என்பது, பரந்துபட்ட அரசியற் கருத்தொற்றுமையுடன் முன்மொழியப்பட்டுள்ளது.

அத்துடன், ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்கி முழுமையான பாராளுமன்ற ஆட்சி முறையை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்பதிலும் கருத்தொற்றுமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தின் முன் உள்ள நிலையில், அதன் தலைவிதி எப்படி அமையும் என்று திட்டவட்டமான எதிர்வு எதனையும் இப்போது கூறமுடியாது.

என்றாலும், ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான பாராளுமன்ற அங்கீகாரம் சமீப எதிர்காலத்தில் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியும்.

அரசியல் சாசனத்தின் அடிப்படை அம்சங்களில் ஒன்றான ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றிலும் சம்மதம் பெறப்படவேண்டும் என்பதால், இந்த அரசியல் சாசன சீர்திருத்தத்துக்கான நடவடிக்கைகள் பாரிய அரசியல் முக்கியத்துத்தைப் பெறுகின்றன.

இந்தச் சூழ்நிலையில், நாட்டின் தொடர் பிரச்சினையான இனநெருக்கடி விவகாரத்தில், சமஷ்டி என்று அழைக்கப்படும் இணைப்பாட்சி முறையை அரசியற் தீர்வாக முன்வைத்து வந்திருக்கும் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு நின்று, இந்த அரசியற் சீர்திருத்த நடவடிக்கைகளை கையாள வேண்டிய பெரும் பொறுப்பைக் கொண்டுள்ளன.

ஜனாதிபதி ஆட்சிமுறை அகற்றப்படும் அதே நேரத்தில், இந்த நாட்டில் இனரீதியான மோதல்களுக்கும் தொடர் அழிவுகளுக்கும் பொருளாதார பின்னடைவுகளுக்கும் அடிப்படையாக அமைந்த ஒற்றையாட்சி முறையும் நீக்கப்பட வேண்டும் என்பதை தமிழ்த் தேசியம் சார்ந்த அரசியற் கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் வலியுறுத்த முன்வரவேண்டும்.

ஒற்றையாட்சி மீதான சிங்கள மக்களின் உளவியல் ரீதியான பிடிவாதப் பற்று என்பது, அரசியல் தீர்வு விவகாரத்தில் ஓர் மாபெரும் தடையாக இருந்து வந்துள்ளது என்ற போதிலும், இன்றைய சூழ்நிலையில் தமிழர் தரப்பு தனது நியாயமான கோரிக்கையை முன் வைக்கத் தவறினால் அல்லது தயங்கினால், அது ஓர் வரலாற்றுத் தவறாகி விடும் என்பதை நாம் அழுத்திக் கூற விரும்புகின்றோம்.

எனவேதான், தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் அனைத்தும் இவ் விடயம் தொடர்பில் விரைவில் கலந்துரையாட முன்வர வேண்டும் என எமது கட்சி பகிரங்கமாக அழைப்பு விடுக்கின்றது - என்றுள்ளது.

(அ)

# யாழ். சிறைச்சாலையில் காத்திருப்போர் மண்டபம்





யாழ்ப்பாணம், மே. 22

'சிறைக் கைதிகளும் மனிதர்களே' எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் உள்ள தமது உறவுகளை பார்வையிட வரும் மக்களுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் காத்திருப்போர் மண்டபம் ஒன்று நேற்று யாழ்ப்பாண சிறைச்சாலை முன்றலில் திறந்து வைக்கப்பட்டது.

நீண்ட காலமாக யாழ் சிறைச்சாலையில் உள்ள தமது உறவுகளை பார்வையிட வரும் மக்கள் வெயிலில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

யாழ்ப்பாண சிறைச்சாலை அத்தியட்சகரினால் யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் காத்திருப்போர் மண்டபம் ஒன்று அமைத்து தருமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் தங்கமுத்து சத்தியமூர்த்தியின் முயற்சியால் அறக்கட்டளை நிதியம் ஒன்றின் நிதிப் பங்களிப்பில் காத்திருப்போர் மண்டபம் நேற்று சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சமாதானத்தை வலியுறுத்திச் சமாதானப் புறாவும் பறக்கவிடப்பட்டது.

யாழ். சிறைச்சாலை முன்றலில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் எஸ்.கே. நாதன் அறக்கட்டளை நிதியத்தின் இயக்குநர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் மற்றும் யாழ். சிறைச்சாலையின் அத்தியட்சகர் கே.வி.ஏ.உதய குமார, யாழ்ப்பாண சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எச்.எம்.கேரத், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(அ-02)

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 07 - 1944



மறைவு
16 - 05 - 2022

## திருமதி சிவமலர் குணநாயகம்

யாழ். ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியா, பிரான்ஸ் Drancy ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குணநாயகம் சிவமலர் அவர்கள் 16-05-2022 திங்கட்கிழமை அன்று பிரான்சில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சிவகுரு பொன்னுப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மகளும், காலஞ்சென்ற சின்னையா குணநாயகம்(குணம் ஸ்ரோஸ் - வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும்,சிவகுமாரன்(பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு தாயாரும்,சுலோயனா அவர்களின் அன்பு மாமியாரும்,தனேஸ், சஹானா, தேவியன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும்,சரண்யா அவர்களின் பேத்தியும், தேவமலர்(நீர்வேலி), காலஞ்சென்ற கந்தசாமி, கனகநாயகம் (குஞ்சு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சின்னராசா (வவுனியா), காலஞ்சென்றவர்களான சுகிர்தநாயகம், செல்வநாயகம், தனநாயகம், கனகநாயகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

கிரியை :
Thursday, 26 May 2022 9:30 AM - 11:30 AM
Hôpital Avicenne Chambre Mortuaire Porte 14 13 Rue Romain Rolland 93000 BOBIGNY FRANCE

தகனம் :
Friday, 27 May 2022 10:30 AM - 12:00 PM
Crématorium des joncherolles villetaneuse 95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
**சிவகுமாரன் - மகன்**
**Mobile : +33767791406**
**தனேஸ் - பேரன்**
**Mobile : +33766509891**

தகவல்:
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


## DAN தமிழ் ஒளி

**காலை**

*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*
*6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றைய பலன்*
*7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)*
*10.30 மணி : அறிந்தும் அறியாமலும்*
*11.00 மணி :* BEAT BOX
*11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை*

பகல்

*12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)*
*1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி*



*1.30 மணி : வீக் என்ட் மூவி-செல்லமே*
*04.30 மணி : உதவும் கரங்கள்*
*5.00 மணி :* COFFE WITH *பிரமுகர்*
*6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-*
*திறமையாளர்களுக்கான களம்*



*07.00 மணி :* SPOTLIGHT-*செல்வராஜா*
*கஜேந்திரன்-நாடாளுமன்ற உறுப்பினர்*



*08.00 மணி : இரவுச் செய்திகள்*
*09.00 மணி : டான் பட்டிமன்றம்*



*10.00 மணி: -நேர்கொண்ட பார்வை*

## DAN COMEDY HD

**காலை**

*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**

*1.00 மணி : நகைச்சுவை மன்னன்*
*கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**

*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

## DAN MUSIC HD

**காலை**

*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**

*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*

**இரவு**

*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

## கல்வி tv CHANNEL-1

**காலை**

*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)*
*நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)*
*வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம்*
*(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**

*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்*
*மாதிரி வினாத்தாள்*

**இரவு**

*7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்*
*மாதிரி வினாத்தாள்*

## சக்தி டிவி

**காலை**

*05.00 மணி : சிவாய மந்திரம்*
*06.00 மணி : சுப்ரபாதம்*
*06.30 மணி : சுப்ரபாதம்*
*07.00 மணி : இன்றைய சிந்தனை*
*07.05 மணி : இன்றைய நாள்*
*07.20 மணி : திருமுறையும் பொருளும்*
*07.30 மணி : மங்கள இசை*
*08.00 மணி : அருளுரை*
*08.30 மணி : திருவாசகம்*
*09.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பஜனை*
*10.30 மணி : தமிழககோவில் திருவிழா*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**

*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*06.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**

*07.00 மணி : செய்திகள்*
*07.30 மணி : அருளுரை*
*08.00 மணி : திருவிழா-01*

## CHANNEL HOLY MARY

**காலை**

*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : இயேசுவின் போதனைகள்*
*(மறுஒளிபரப்பு)*
*8.00 மணி : ஜெபமாலை*
*09.30 மணி : மன்றாடு*
*10.00 மணி: விவிலியம் அறிவோம்*
*(திருகோணமலை)*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*

**பகல்**

*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*(மறு ஒலிபரப்பு)*
*7.00 மணி : ஞானவழி*
*7.30 மணி : படம்*

## Pirai Television

**காலை**

*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**

*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஸ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**

*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

